கோண்டாவில்


# உதயன்

சுடர் 30 கதிர் 335 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 10, செவ்வாய்க்கிழமை 27.10.2015



நீரோகா

இன்றைய சுப்பர் பரிசு

ரூ.2,500,000/-

தேசிய லொத்தர் சபை


# அரசியல் கைதிகளுக்கு பிணை வழங்க முடிவு

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடந்த கூட்டத்தில் நேற்றுத் தீர்மானம்

கொழும்பு, ஒக்ரோபர் 27
தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்க முடியாது. ஆனால், நீண்ட காலம் தடுப்பிலுள்ள கைதிகளுக்கு நவம்பர் மாத முதல் வாரத்துக்கு முன்னர் சட்ட பூர்வமான பிணை வழங்குவது என அரசு தீர்மானித்துள்ளது.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்ற விசேட சந்திப்பின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.
இந்தச் சந்திப்பில் தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சர் மனோ கணேசன், சிறைச்சாலைகள் அமைச்சர் திலக் மாரப்பன, மீள் குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், பொலிஸ்மா அதிபர், பிரதிச் சட்டமா அதிபர் உட்பட முக்கிய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.
சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படுவதற்கான சாத்தியங்கள் இல்லை என இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, பிணை வழங்குவது குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட்டதாகத் தேசியக் கலந்துரையாடல்களுக்கான அமைச்சர்

பக். 24

# காலத்தைக் கடத்தாமல் உடன் தீர்வு காணுங்கள்

## அரசை வலியுறுத்துகிறார் யாழ். புதிய ஆயர்



கொழும்பு, ஒக்.27
போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், வீட்டுத்திட்டம் மற்றும் வாழ்வாதார முன்னேற்றத்தில் காலத்தை இழுத்தடிக்காமல் உடனடியாகத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியமாகும்.
-இவ்வாறு அரசை வலியுறுத்தியுள்ளார் யாழ். மறைமாவட்டத்தின் புதிய ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் பேணாட்

பக். 24

# வாள்வெட்டுச் சந்தேகநபரான மாணவன் நீதிமன்றத்தில் சரண்

## விளக்கமறியலில் வைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக். 27
சுன்னாகத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் தேடப்பட்டு வந்த பிரதான சந்தேகநபரான மாணவன் ஒருவர்-சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் நேற்றுச் சரணடைந்தார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.
யாழ்.நகரிலுள்ள பிரபல கல்லூரியில் உயர்தர

பக். 24

# வித்தியா படுகொலை வழக்கு; மரபணு அறிக்கை வரவில்லை

யாழ்ப்பாணம், ஒக். 27
புங்குடுதீவு மாணவி கூட்டு வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட வழக்கில், சந்தேகநபர்கள் 9 பேரினதும் மரபணு அறிக்கை நீதிமன்றுக்கு இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த வழக்கு எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.
ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் செ.லெனின்குமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. கொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருக்கும்

பக். 24

# நாகர்கோவில் கடலில் மூழ்கி 2 இளைஞர்கள் பரிதாபச் சாவு

## குளிக்கச் சென்றவேளை சம்பவம்

வடமராட்சி, ஒக் 27
வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதிக் கடலில் மூழ்கி இரண்டு இளைஞர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.
நேற்றுக் காலை கடலில் குளிக்கச் சென்ற இளைஞர்களே நீரில் மூழ்கி உயிரிழந்ததாகப் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். இவர்களது சடலங்கள் பருத்தித்துறைப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.
மிருசுவில் படித்த மகளிர் குடியேறத் திட்டப்பகுதியை சேர்ந்த தர்மகுலசிங்கம் டினாலன் (வயது-21), ஜோசப் அன்ரனி அஜித் (வயது -23)ஆகிய இளைஞர்களே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.
வீட்டில் இருந்து மீன் வாங்கப் போவதாகப் புறப்பட்டுச் சென்ற இளைஞர்களே நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப் பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

பக். 24

# தமிழ்க் கைதிகளை விடுவிக்காவிடின் கூட்டமைப்பும் உணவு தவிர்ப்பு

கொழும்பு, ஒக்.27
தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்காவிடின் அவர்களுடன் இணைந்து உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்த நேரிடும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.
இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு நாடாளுமன்ற உறுப்

பக். 24

# வடக்கு அரசுக்கு 2016 இல் ரூ.7,978 மில்லியன் தேவை

## பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 27
வடக்கு மாகாண சபையின் அடுத்தாண்டுக்குரிய அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதற்கு 7 ஆயிரத்து 978 மில்லியன் ரூபா தேவை என்று மத்திய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள தேசிய வரவு - செலவுத் திட்டத்தில் குறித்த நிதியை வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கீடு செய்யுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தேசிய வரவு - செலவுத் திட்டம் அரசினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பாக, ஒவ்வொரு மாகாண சபைகளும், தங்களுக்குத் தேவையான நிதி மதிப்பீட்டை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கும். அந்த வகையிலேயே வடக்கு மாகாண சபை தனது 5 அமைச்சுக்களினூடான அபிவிருத்தி வேலைத் திட்டத்துக்கு 7 ஆயிரத்து 978 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பீடு செய்துள்ளது.
விவசாய அமைச்சு ஆயிரத்து 172 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பீடு செய்துள்ளது. அதில் விவசாயத் துறைக்கு 206 மில்லியனும்,

பக். 24



# தெற்காசிய நாடுகளில் சக்திமிக்க நில நடுக்கம்

## ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானில் 150 க்கும் அதிகமானோர் சாவு

கொழும்பு, ஒக்.27
தெற்காசிய நாடுகளில் நேற்று ஏற்பட்ட பயங்கரமான நில நடுக்கம் காரணமாக ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 150 க்கும் அதிகமாகியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.
இந்தியாவின் வடக்கு மாநிலங்களிலும் தமிழ்நாட்டிலும் இந்த நில நடுக்கம் உணரப்பட்டுள்ளது.
ஆப்கானிஸ்தான் நேரப்படி நேற்றுப் பிற்பகல் 2.39 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதுடன், 30 முதல் 40 செக்கன்கள் வரை நீடித்திருந்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ரிச்டர் அளவில் இது 7.7 ஆக பதிவாகியுள்ளதாக அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது
இந்த நிலநடுக்கத்துக்குப் பாகிஸ்தானில் 52 பேர் சாவடைந்துள்ளதாகவும் -200க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.
பாகிஸ்தானின் கராச்சி, லாகூர், ராவல்பிண்டி, பெஷாவர், இஸ்லாமாபாத் உள்ளிட்ட பகுதிகளில் நில நடுக்கத்தின் தாக்கம் அதிகமாக உணரப்பட்டுள்

பக். 24

# விருப்பத்தை மட்டுமே வெளியிட்டார் கருணா

## கூட்டணியுடன் இணைந்துவிட்டதாக அவர் கூறவில்லை என்கிறார் சங்கரி



யாழ்ப்பாணம், ஒக். 27
கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணையப் போவதாக அவர் தனது விருப்பத்தை மாத்திரம் தெரிவித்துள்ளார். அவர் எம்முடன் சேர்ந்து விட்டதாகவோ அல்லது சேர்ந்து செயற்படுகின்றோம் என்றோ கூறவில்லை.
-இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்

பக். 24

# நழுவினார் பான் கீ - மூன்



புதுடில்லி, ஒக்.27
தமிழ் மக்களுக்கு எதிராகப் போர்க்குற்றங்கள் நிகழ்த்தப் பட்டுள்ளன என்று நினைக்கிறீர்களா என்று இந்திய ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு

பக். 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி. சர்வதேச மைதான நிர்மாணிப்பு பணி நிறைவு

## விரைவில் திறந்து வைக்கப்படும் என அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.27

கிளிநொச்சி மாவட்டத்தின் முதலாவது சர்வதேச விளையாட்டு மைதான நிர்மாணிப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன என்று மாவட்ட அரச அதிபர் சு.அருமைநாயகம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது–

வட மாகணத்தில் தற்போதுள்ள விளையாட்டு மைதானங்கள் அனைத்திலும் விட பல மடங்கு வசதிகளை உடையதாக போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓர் சர்வதேச விளையாட்டு மைதானம் வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அததையடுத்து மேற்கொள்ளப்பட்ட நீண்ட நாள் முயற்சியின் பயனாகத் தற்போது முதலாவது சர்வதேச விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டுள்ளது.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டுள்ள இந்த மைதானத்தில் நீச்சல் தடாகம், பயிற்சி மைதானம், துடுப்பாட்ட மைதானம் என்பனவற்றுடன் விளையாட்டுப் பொருள் விற்பனை மையம் ஒன்றும் அமைந்துள்ளது.

இவை அனைத்தினது புனரமைப்புப் பணிகளும் முடிவடைந்து விளையாட்டு வீரர்களின் பாவனைக்காக உத்தியோக பூர்வமாகத் திறப்புவிழா இடம்பெறவுள்ளது. இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள இந்த மைதானம் இளையோரின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்படுகின்ற பட்சத்தில் இந்த மாவட்ட இளைஞர்களும் பயிற்சிகளைப் பெற்றுத் தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் இடங்களைப் பெறமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. புனரமைப்புப் பணிகள் முடிவுற்றுள்ள மைதானத்தை நேரில் பார்வையிட்டுள்ளேன். விரைவில் இந்த மைதானம் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படும்.– என்றார். (ற-101)



வவுனியாவில் நேற்றுப் பொழிந்த கன மழை காரணமாக மக்களின் இயல்பு நிலை ஸ்தம்பிதம் அடைந்தது. வவுனியா நகரில் மழை காரணமாக மக்களின் போக்கு வரத்தில் இடையூறு காணப்பட்டது. அத்துடன் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைந்திருந்தது.(ற)

# வளங்குறைந்த பாடசாலைகளை வளப்படுத்த நடவடிக்கை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 27

குறைந்த வசதிகள் கொண்ட பாடசாலைகளின் பௌதிக வளங்களை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்குத் தேசிய கல்வி நிறுவனம் தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் குறைந்த வசதிகள் கொண்ட பாடசாலைகள் தொடர்பில் மாவட்ட ரீதியில் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன என்று நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் குணபால நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அதற்கமைய குறித்த பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களது உதவியுடன் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள பாடசாலைகள் வட மாகாணத்தில் காணப்படும் பாடசாலைகள் மற்றும் போர்க் காலப்பகுதியில் அச்சுறுத்தலுக்குள்ளான வட மத்திய மாகாணத்திலுள்ள பாடசாலைகள் என்பன தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை உயர்தர வகுப்புகள் அற்ற பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் குணபால நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எனினும் போர் இடம்பெற்ற வடக்கில் குறிப்பாக வன்னியில் பாடசாலைகள் அதிகளவில் புனரமைப்பை எதிர்நோக்கியுள்ளன. அவற்றைப் புனரமைக்கும் பணி மெல்ல முன்னெடுக்கப்பட்டாலும் அபிவிருத்திக்காக இன்னும் பல பாடசாலைகள் காத்துக் கிடக்கின்றன. போர் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டு 6 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையிலிலும் பல பாடசாலைகள் இன்னும் அபிவிருத்தி செய்யப்படாதுள்ளன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ற-4)

# அனைத்து ஊழியர்களுக்கும் ஒரே அடிப்படைச் சம்பளம்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.27

2016ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் 10 ஆயிரம் கொடுப்பனவு சகல ஊழியர்களுக்கும் ஒரே அளவில் அடிப்படைச் சம்பளத்தில் சேர்க்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம். தேசிய சம்பளக் கொள்கையைப் பாதுகாக்கும் வகையில் அடிப்படைச் சம்பள அதிகரிப்பைப் பெற்றுக்கொள்ள அனைவரும் ஒன்றிணையும் காலம் வந்துள்ளது. – இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

அரச சேவை உருவாக்கப்பட்டதிலிருந்து 2003ஆம் ஆண்டு வரை அரசசேவையாளர்களுக்கு சம்பளம் வழங்குவது தொடர்பாக விஞ்ஞான ரீதியான முறையொன்று இல்லாதிருந்தது. அதன் காரணமாக அரச சேவையில் உள்ள பல்வேறுபட்ட சேவையாளர் பிரிவுகள் தங்களது சம்பள அதிகரிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு தொடர்ச்சியான போராட்டங்களுக்கு உட்பட்டதால் முழு அரச சேவையின் வினைத்திறனும் தரமும் வீழ்ச்சியடைந்தது. இறுதியாக முழு அரச சேவையாளர்களும் வரி செலுத்துகின்ற பொது மக்களின் குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்டு பொதுமக்களுக்கு அரச சேவையின் சரியான நன்மையைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வழிகாட்டலில் 2003ஆம் ஆண்டில் ஆரம்பமான நடவடிக்கையின் பிரதிபலனாக 2006ஆம் ஆண்டில் தேசிய சம்பளக் கொள்கையாக சம்பளச் செயற்பாடு விஞ்ஞான ரீதியான முறைக்கு உட்படுத்தப்பட்டது. அதன் காரணமாக அரச சேவையானது பலமடைந்தது. பொது மக்களுக்கு பயன்கள் கிடைத்தன.

இவ்வாறு உருவாக்கப்பட்ட தேசிய சம்பளக் கொள்கையின் பிரகாரம் சம்பளம் தயார்படுத்தப்படும்போது உரிய அரச சேவையாளரின் கல்வித் தகைமை, தொழிலின் தன்மை, பொறுப்புக்கள், அனுபவங்கள் மற்றும் சிரேஷ்ட தன்மை போன்ற விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன. அதன் பிரகாரம் சம்பளம் வழங்குவது விகிதாசார அடிப்படையில் செய்யப்பட்டது. இங்கு சகல அரச சேவையாளர்களுக்கும் சமூக நியாயமொன்று ஏற்பட்டது.

இவ்வாறு தங்களது கல்வி நிலைமை மற்றும் அனுபவம் கவனத்திற் கொள்ளப்படுவதன் காரணமாக புத்திசாலிகள் மற்றும் அனுபவம் வாய்ந்த அரச சேவையாளர்களை அரச சேவைக்குள்ளே தக்கவைத்துக் கொள்ள முடியும். அவ்வாறு இல்லையாயின் அவர்கள் அரச சேவையிலிருந்து விலகிச் செல்வதைத் தடுக்க முடியாது.

2015ஆம் ஆண்டு அடிப்படைச் சம்பள அதிகரிப்பு முன்மொழிவின் காரணமாக 11 ஆயிரத்து 730 ரூபாவாக இருந்த அரச சேவையாளரின் ஆகக் குறைந்த சம்பளம் ரூபா 15 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டது. இது தேசிய சம்பளக் கொள்கைக்குள் நடைபெற்றது. இதனால் சகல அரச ஊழியர்களினதும் ஓய்வூதியமானது அதிகரித்தது.– என்றுள்ளது. (ற-4)



பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள புதிய பொலிஸ் நிலையம் எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்குப் பொலிஸ்மா அதிபர் இலங்கக்கோனால் திறந்து வைக்கப்படவுள்ளது. (ற-108)

# கால்வாய்க்குள் விழுந்து வயோதிபர் சாவு

நேற்றுமுன்தினம் மாலை பெய்த அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்குண்டு கால்வாயில் விழுந்து வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள களுவன்கேணியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. களுவன்கேணி 2 தேவாலய வீதியைச் சேர்ந்த சிவலிங்கம் கிருஷ்ணப்பிள்ளை (வயது 65) என்பவரே உயிரிழந்துள்ளார். கொட்டும் மழையிலும் கடைக்குச் செல்வதற்காக இந்த முதியவர் துவிச்சக்கர வண்டியில் ஏறிச்செல்லும் போது வீதியோரத்தில் இருந்த கால்வாய்க்குள் தடுமாறி விழுந்துள்ளார். உடனடியாக அவரைக் கரைசேர்த்து செங்கலடி பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும் ஏற்கெனவே அவர் உயிரிழந்து விட்டார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. கடந்த இருநாள்களாகப் பெய்துவரும் பருவ அடை மழை காரணமாக கிழக்கில் சம்பவித்த முதலாவது உயிரிழப்பு இதுவென பொலிஸார் தெரிவித்தனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.27
வடக்கின் உள்ளூராட்சிச் சபைகளுக்கு உட்பட்ட இனம்காணப்பட்ட பிரதேசங்களில் சுற்றுலாத் துறையை மீளமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்திக்கான நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவுக்குஉட்பட்ட பிரதேசங்களே முதல்கட்டமாக நவீன மயப்படுத்தப்படவுள்ளன. வடமாகாண உள்ளூராட்சி மற்றும் சுற்றுலாத்துறைஅமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

இதன்முதற் கட்டமாக வடக்குக்கான சுற்றுலா மையம் உருவாக்கப்படவுள்ளது. இதனூடாக உள்ளூராட்சிசபைகளின் சுற்றுலாத்துறை மீள் உருவாக்கம் தொடர்பாக ஆராயப்படவுள்ளது. அத்துடன் மாவட்ட ரீதியாக சுற்றுலா வழிகாட்டியும் தயாரிக்கப்படவுள்ளது.

வடக்கில் உருவாக்கப் பெறும் சுற்றுலாத்துறை ஊடாக வேலை வாய்ப்புகளும், தொழில் பயிற்சிகளும் உருவாக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூராட்சிச் சபைகள் உட்பட வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் சுற்றுலாத் துறை சார்ந்த வியாபார நடவடிக்கைகளை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

(ற-50)

## பாரிசவாத தினம் எதிர்வரும் 29இல்

சாவகச்சேரி, ஒக்.27
உலக பாரிசவாத தினமான நாளைமறுதினம் 29 ஆம் திகதி பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டங்களை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு நானும் ஒரு பெண் எனும் தொனிப் பொருளில் பாரிசவாத தினம் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டு ஆண்களை விடவும் பெண்களே அதிகம் இறக்கின்றனர். ஆரம்பமற்றும்புனர்வாழ்வுசிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதில் பெண்களுக்கு ஏற்படும் சிரமத்தால் ஆண்களை விடப் பெண்களுக்குப் பாரிசவாதம் குறித்த அறிவாற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுதல் கடினமாக அமைகின்றது. பாரிச வாதத்துக்குப் பின்னர் பெண்கள் கூடுதலான மனச்சோர்வுக்கு உள்ளாகின்றனர். பெண்கள் உயர் குருதி அமுக்கம், ஒழுங்கற்ற இதயத் துடிப்பு, நீரிழிவு, மனச்சோர்வு மற்றும் அதீத உடற்பருன் ஆகியவற்றுக்கு உள்ளாவதால் பாரிச வாத ஆபத்தை அதிகமாக எதிர்கொள்கின்றினர்.

ஒருவரின் உடலின் ஒருபாகத்தில் சடுதியாக ஏற்படும் அறிகுறிகளைக் கொண்டு பாரிசவாதத்தை இலகுவாக இனம்காணலாம்.

முகத்தில் சடுதியாக ஏற்படும் சமச்சீரற்ற தன்மைகைகளில் ஏற்படும் சோர்வுத் தன்மை கதைப்பதில் ஏற்படும் சிரமம், மேற்குறிப்பிட்ட மூன்றில் ஒன்றுக்கு மேற்பட்ட அறிகுறிகள் இருப்பின் உடனடியாக வைத்தியசிகிச்சைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். பாரிசவாத நோய் இனங்காணப்பட்டு நான்கரை மணித்தியாலயங்களுக்குள் மருத்துவ சிகிச்சை உள்ள வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல வேண்டும்.

(ற-9)

## போக்குவரத்து விதி மீறியவருக்கு 36 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், ஒக்.27
இலக்கத் தகடற்ற வாகனத்தில் மதுபோதையில் எது வித ஆவணமும் இன்றிப் பயணித்தவருக்கு 36 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது ஊர்காவற்றுறை நீதிமன்று.

கிளிநொச்சியைச் சேர்ந்த குறித்த நபர் ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவில் அவ்வாறு சென்றபோது பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

நீதிவான் செ.லெனின்குமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோது தன் மீதான குற்றச்சாட்டை அவர் ஏற்றுக்கொண்டார்.

அதனடிப்படையில் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றிப் பயணித்த குற்றத்துக்காக 3 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் வரி செலுத்தியதற்கான பத்திரம் இன்றிச் சென்ற குற்றத்துக்காக 5 ஆயிரம் ரூபாவும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றிப் பயணித்த குற்றத்துக்காக 5 ஆயிரம் ரூபாவும் மது போதையில் வாகனம் செலுத்திச் சென்ற குற்றத் துக்காக 7 ஆயிரத்து 500 ரூபாவும் இலக்கத் தகடற்ற வாகனத்தைச் செலுத்திச் சென்ற குற்றத்துக்காக 15 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது.

(ற-4)

## நிரந்தர வைத்தியரை நியமிக்க கோரி நட்டாங்கண்டல் மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.27
நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்கக் கோரி அந்தப் பகுதி மக்கள் பொது அமைப்புக்கள் நேற்று அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த அடையாள உணவு தவிர்ப்புப்போராட்டமானது நேற்று காலை 8 மணியளவில் நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலைக்கு முன்பு ஆரம்பமாகியபோதும் மழை காரணமாக அங்கிருந்து நட்டாங்கண்டல் பொது சந்தையின் புதிய கட்ட தொகுதிக்கு மாற்றப்பட்டது.

கடந்த நான்கு வருடங் களுக்கு மேலாக நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலையில் கடமையாற்ற நிரந்தர வைத்தியர் எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை. அது தொடர்பாக அதிகாரிகளுக்கும், பல்வேறு அரசியல் தலைமைகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித ஆக்க பூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. இந்தப் பிரச்சினையை வெளிக்கொண்டு வருவதற்காகவே இந்த அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்துகின்றோம் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தில் நண்டாங்கண்டல் பகுதியைச் சேர்ந்த 120க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர். பிற்பகல்2மணிக்குப்போராட்டத்தை முடிவுக்குக்கொண்டுவந்தபொது மக்கள் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளரிடம் தமது பிரச்சினை தொடர்பான மனுவையும் கையளித்துள்ளனர்.

(ற-21)

## தங்கிச் சிகிச்சை பெறுவோர் யாழ்.போதனாவில் அதிகரிப்பு

### வைத்தியசாலை புள்ளிவிவரங்கள் கூறுகின்றன

யாழ்ப்பாணம், ஒக்.27
யாழ்.போதனா வைத்திய சாலையில் தங்கிச் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு சடுதியாக அதிகரித்துள்ளது. அதேபோன்று வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால்கிளினிக்குக்குவருபவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று யாழ்.போதனா வைத்திய சாலையின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

2011 ஆம் ஆண்டு யாழ். போதனா வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 842 ஆகக் காணப்பட்டது. இது 2014 ஆம் ஆண்டு 3 லட்சத்து 60 ஆயிரத்து 399 ஆக சடுதியாக அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்புக்கு வடக்கில் தொற்றா நோய்களின் தாக்கங்களுக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதும் ஓர் காரணம் என்று யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

நீரிழிவு நோய்க்கு ஊசி ஏற்றுவதற்குகூட யாழ்.போதனா வைத்தியசாலையில் தங்கித்தான் ஊசிஏற்றவேண்டும். இவ்வாறு தங்கி சிகிச்சை பெறுவர்களின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது. இதுவும் இந்த அதிகரிப்பு காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேபோன்றுவெளிநோயாளர் பிரிவில் 2011 ஆம் ஆண்டு 2 லட்சத்து 82 ஆயிரத்து 946 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு 3 லட்சத்து 12 ஆயிரத்து 873 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். ஆனால் கிளினிக்கில் 2013 ஆம் ஆண்டு 6 லட்சத்து 59 ஆயிரத்து 516 பேர் சிகிச்சை பெற்றுள்ளதுடன், கடந்த ஆண்டு 5 லட்சத்து 70 ஆயிரத்து 863 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கிளினிக்கில் சிகிச்சை பெறுவது குறைவடைவதற்கு பிராந்திய வைத்தியசாலைகளிலும் சிறந்த வைத்தியர்கள் நியமிக்கப்பட்டமையும் ஓர் காரணம் என்று எஸ்.ஸ்ரீபவானந்தராஜா குறிப்பிட்டார். ஆனால் விபத்துகளின் அதிகரிப்பு காரணமாக வெளிநோயாளர் பிரிவிற்கு சிகிச்சைக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

(ற-5)

## வவுனியாவில் இருந்து யாழுக்கு மரக் கடத்தல்

### தேவப்பெரும எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஒக்.27
வவுனியாவிலிருந்து கருங்காலி, முதிரை போன்ற மரங்கள் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு கடத்திச் செல்லப்படுகின்றன என்று களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த தேவப்பெரும தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

வவுனியா வெஹரதென பிரதேசத்தில் அரசுக்குச் சொந்தமான காணிகளில் காணப்படும் பெறுமதிவாய்ந்த கருங்காலி, முதிரை போன்ற மரங்கள் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு கடத்திச் செல்லப்படுவதாக எமக்கு தகவல் கிடைத்தது.

அதன்படி குறித்த இடத்திற்குப் பயணம் செய்திருந்தேன். அங்கு சென்றவேளை கருங்காலி, முதிரை போன்ற பெறுமதியான மரங்கள் வெட்டப்பட்டுக் கொண்டிருந்ததுடன் மேலும் சில மரங்கள் வெட்டப்பட்டுக் கடத்திச் செல்வதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

இது தவிர முல்லைத்தீவு பன்சல்கந்த பிரதேசத்தில் சட்டவிரோதமாக மரங்களை வெட்டும் இடத்துக்கும் சென்றேன். அங்கு சென்றவேளை மிகவும் பெறுமதியான, பழமை வாய்ந்த கருங்காலி, முதிரை போன்ற மரங்கள் வெட்டப்பட்டிருந்தன.

குறித்த சம்பவங்கள் தொடர்பாக உடனடியாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளேன்-என்றார்.

(ற-வ)

## மோட்டார் குண்டு யாழில் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.27
யாழ்ப்பாணத்தில் பழைய மோட்டார் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று தெரிவித்தனர். கச்சேரி சரணியா வீதியில் உள்ள வீட்டு வளவில் இருந்தே குறித்த மோட்டார் குண்டு மீட்கப்பட்டுள்ளது.

வீட்டு உரிமையாளர்கள் நேற்றுமுன்தினம் வீட்டு வளவைத் துப்புரவு செய்தபோது, மோட்டார் குண்டு இருப்பதனை அவதானித்து உடனடியாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

அதையடுத்து குறித்த மோட்டார் குண்டு மீட்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணையை நடத்துவதற்கு இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவிப்பு

சென்னை, ஒக்.27

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணையை மேற்கொள்வதற்கு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட பரணகம ஆணைக் குழுவே போர்க்குற்றங்கள் இடம்பெற்றுள்ளது என்று தெரிவித்துள்ள நிலையில் இது குறித்து சர்வதேச விசாரணையை முன்னெடுக்க இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

போர்க்குற்றம் தொடர்பான சர்வதேச விசாரணைக்கு ஏற்கனவே தமிழக கட்சிகள் வலியுறுத்தி வந்தபோதும், இந்திய அரசு அவற்றைக் கண்டுகொள்ளவில்லை என்று தெரிவித் துள்ள கருணாநிதி, இந்திய அரசு இனியேனும் இலங்கை விடயத்தில் தலையிட வேண்டும் என்று குறிப்பிட் டுள்ளார்.

மகிந்தவால் நியமிக்கப்பட்ட குழுவே போர்க்குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டுள்ளதால், இந்தியாவால் இனியும் எதனையும் மறுக்க முடியாது என்றும் கருணாநிதி குறிப்பிட்டுள் ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவால் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதியரசர் மக்ஸ்வல் பரணகம தலைமையிலான ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளதோடு, அதில் போர்க் குற்றத்தில் ஈடுபட்டவர்களது பெயர் களும் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது. (ற)

## கிழக்கு சுகாதார அமைச்சராக ஏ.எல்.எம்.நசீர் பதவியேற்பு

திருகோணமலை, ஒக்.27

கிழக்கு மாகாண சபையின் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.எல்.எம்.நசீர், மாகாண சுகாதார அமைச்சராக நேற்றுப் பிற்பகல் சத்தியப் பிரமாணம்செய்துகொண்டார்.

மு.காங்கிஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் உத்தரவுக்கிணங்க கிழக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சராக, ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ முன்னிலையில் நசீர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

கடந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலில், மு.கா. சார்பில் அம்பாறை மாவட்டத்திலிருந்து போட்டியிட்ட ஏ.எல்.எம். நசீர் 18 ஆயிரத்து 327 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியிருந்தார்.

கிழக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சராகப் பதவி வகித்த எம்.ஐ.எம்.மன்சூர் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியிருந்தார். அவர் வகித்த அமைச்சுப் பதவியையே, தற்போது நசீர் பொறுப்பேற்றுள்ளார்.

2011 ஆம் ஆண்டு நடைபெற்ற அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்டதன் மூலம் அரசியலுக்குள் நுழைந்த நசீர், அந்தத் தேர்தல் வெற்றிபெற்று, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளரானார். ஆயினும், ஒரு வருடம் மட்டுமே மேற்படி தவிசாளர் பதவியை வகித்த நிலையில் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலிலுல் போட்டியிட்டு இவர் அதிலும் வெற்றி பெற்றார். (ற)

## நிலாமுற்றம் 28 இன்று

யாழ்ப்பாணம், ஒக்.27

வடமாகாணத்தில் சந்தைப்படுத்தல் துறையில் ஏற்படும் சவால்கள் எனும் தொனிப்பொருளில் நிலாமுற்றம் 28 நிகழ்வு நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சந்தைப் படுத்தல் துறை விரிவுரையாளர் க. சிவராஜா தலைமையில் இன்று பி.ப 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இல, 128 பிறவுண் வீதியில் அமைந்துள்ள நேன் பொப்புலர் ரவல்ஸ் அன் ருவர்ஸ் பிரதான மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆய்வாளர்கள், சமூகவியலாளர்கள், விரிவுரையாளர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர்.(ற-10)



*பாகிஸ்தான் மாணவப் படை அணியினர் உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு அண்மையில் இலங்கைக்கு வந்திருந்தனர். இந்தக் குழுவில் நான்கு அதிகாரிகளும் 15 மாணவப் படையினரும் உள்ளடங்கியிருந்தனர். இலங்கையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காக வந்திருந்த குறித்த குழு, கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்துக்குச் சென்றிருந்தது. இதன்போது இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சகீல் ஹூசைனால் வரவேற்பளிக்கப்பட்டது.(ற-10)*

# கரைநகர் மடத்துவளவுப் பகுதியில் இரு வாரத்துக்குள் மீள்குடியமர்வு

## மீள்குடியேற்ற அமைச்சர் உறுதியளிப்பு

காரைநகர், ஒக்.27

கடற்படை வசமுள்ள காரைநகர் மடத்துவளவுப் பகுதியில் மக்களை மீளக்குடியமர்வதற்கான நடவடிக்கை இரு வாரங்களுக்குள் எடுக்கப்படும் என்று மீள்குடியேற்ற மற்றும் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

காரைநகர் மடத்துவளவுப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்வதற்கு வசதியாக அந்தப் பகுதியைக் கடற்படையினரிடமிருந்து மீட்டுத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் மீள்குடியேற்ற மற்றும் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காரைநகர் சீநோர் மற்றும் துறைமுகப் பகுதியைப் பார்வையிட அமைச்சர் சென்றிருந்தபோதே அந்தப்பகுதி மக்கள் நேரடியாக இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தனர்.



அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனுடன் வடமாகாண சுகாதார அமைச்சர் எஸ்.சத்தியலிங்கம், வடகடல் நிறுவனத் தலைவரும், முன்னாள் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சருமான தியாகராசா மகேஸ்வரனின் சகோதரர் தியாகராசா பரமேஸ்வரன் ஆகியோரும் சென்றிருந்தனர்.

இந்தப் பகுதியைச் சேர்ந்த 42 குடும்பங்கள் மீளக்குடியேற முடியாத நிலையில் சங்கானை, வட்டுக்கோட்டை போன்ற பகுதிகளில் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக உறவினர் வீடுகளில் வசித்து வருகின்றனர் என்றும்- மீளக்குடியமர அனுமதியைப் பெற்றுத் தருமாறு உரிய அதிகாரிகளிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் பயன் எதுவும் கிடைக்கவில்லை. எனவே, எமது சொந்த இடத்தில் மீளக்குடியேற அனுமதி பெற்றுத்தர வேண்டும்என்றும்அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மக்களின் கோரிக்கையை செவிமடுத்த அமைச்சர் இரு வாரங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்ததுடன், அந்தப் பகுதியை நேரில் பார்வையிட்டார். (ற-250)

# காணாமற் போனவரின் எலும்புச் சிதைவு மீட்பு

திருகோணமலை, ஒக்.27

திருகோணமலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் காணாமற்போன ஒருவரின் எலும்பு சிதைவுகள் பெருங்குற்ற பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை உவர்மலை பகுதியைச் சேர்ந்த காணாமற் போனதாகக் கூறப்படும் புவனேந்திரன் தேவராசா (வயது- 43) என்பவருடைய மனித எலும்புச் சிதைவுகளே இவ்வாறு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை மொறவேவ பிரதேச சபைக்குட்பட்ட சாந்திபுரம் எனும் பகுதியில் திருகோணமலை- அநுராதபுரம் அதிவேக நெடுஞ்சாலையில் இருந்து சுமார் 4 கிலோமீற்றர் தொலைவிலுள்ள காட்டுப்பகுதியில் குற்றவாளியின் தகவலின் அடிப்படையிலும் உறவினர்களின் அடையாளப் படுத்தலிலும் திருகோணமலை தலைமை பொலிஸ் நிலைய பெரும் குற்றப்பிரிவினரால் எலும்புச் சிதைவுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை நீதவான் நீதிமன்ற நீதிபதி டி.சரவணராஜா மற்றும் பொலிஸ் விசேட குற்றவியல் தடயப் பிரிவினர் குறித்த எலும்புச் சிதைவுகளை நேரில் சென்று பார்வையிட்டதுடன், உறவினர்களால் சடலம் இனம் காணப்பட்டது. விசாரணைகளில் குறித்த நபர் கல்லால் அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

திருகோணமலை தலைமை பொலிஸ் நிலைய பெரும் குற்றப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுமார் 2 மாத கால விசாரணையின் அடிப்படையில், திருகோணமலை மொறவேவ பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய தர்சன் என அழைக்கப்படும் சி.சிவதுசாந்தன், மன்னார் பேசாலை பகுதியிலுள்ள மீன்வாடி ஒன்றில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் ஏற்கெனவே இரு கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனவும், அதனடிப்படையில் திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தின் பிணையில் விடுதலை செய்யப்பட்டவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-10)

# குடும்ப பொருளாதார சுமையை அனைவரும் சுமக்க வேண்டும்

## மட்டக்களப்பு அரச அதிபர் அறிவுரை

கொழும்பு, ஒக்.27

ஒரு குடும்பத்தின் பொருளாதார சுமையை சுமப்பதற்கு அனைவருமே முன் வரவேண்டும் என்று தெரி வித்தார் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ்.

முத்தான வியர்வை எனும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திட்டப்பயனாளிகளின் உற்பத்திப் பொருள்களின் சந்தையை மட்டக்களப்பு நாவற்குடா விவேகானந்தா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் பி.குணரட்னம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் தொடர்ந்து அவர் தெரிவித்தவை வருமாறு:-

குடும்பத்தின் பொருளாதார சுமையை ஒருவர் மட்டும் சுமப்பது இந்த நாட்டிலே காணப்படுகின்ற ஒரு சாபக்கேடாகும்.

அந்தக் குடும்பத்தின் தலைவனோ அல்லது அந்தக்குடும்பத்திலே இருக்கின்ற தாயோ அல்லது கணவனை இழந்து விட்டால் அந்த தாயோ அல்லது அந்தக் குடும்பத்திலுள்ள மூத்த உறுப்பினர் மட்டும் அந்த வருடத்தின் 12 மாதங்களும் அந்தக் குடும்பத்திலிருக்கின்ற ஏனையவர்களுக்காக தங்கியிருப்பவர்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு செயற்பாட்டை நாம் காண்கின்றோம்.

உதாரணமாக, இங்கிருக்கின்ற ஒரு தொட்டியை ஒருவர் தூக்க முயன்று அவரால் தூக்க முடியாவிட்டால் இங்கிருக்கின்றவர்களில் பல பேர் ஓடி வந்து அவருக்கு உதவி செய்வதற்கு தயாராக இருப்பீர்கள்.

ஏனென்றால் உங்களின் கண்களினால் அது காணக்கூடியதாக இருக்கின்றது. ஒருவரால் மட்டும் இதை தூக்கமுடியாது என்பது விளங்குகின்றது. ஆனால் ஒரு குடும்பத்தின் பொருளாதார சுமை என்பது கண்களினால் காணக்கூடிய விடயமல்ல. கண்ணுக்கு புலப்படும் விடயமல்ல.

அந்தக் குடும்பத்தின் தலைவனோ அல்லது தலைவியோ குடும்பத்தை தாங்கி நிற்கும் ஒருவர் தனியாக படுகின்ற உடல் மனக்கஷ்டங்களும் பொருளாதார கஷ்டங்களும் குடும்பத்திலிருக்கின்ற ஏனைய உறுப்பினர்கள் புரிந்து கொள்வதில்லை, தெரிந்து கொள்வதில்லை.

ஒரு குடும்பத்தின் சுமையை சுமப்பதற்கு அனைவருமே முன்வர வேண்டும். வீட்டிலே இருந்து கொண்டு பெண்கள் சில முயற்சிகளை செய்யலாம். வயது வந்த பிள்ளைகள் சில முயற்சிகளை செய்யலாம். பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் ஆகக் குறைந்து ஒரு மணி நேரத்தையாவது பெற்றோருடன் இதற்கு உதவியாக செலவிடலாம்.

உடல் உழைப்பு என்பது மன வளர்ச்சிக்கும் மூளை வளர்ச்சிக்கும் உற்சாகமூட்டுகின்ற ஒன்று என்பதை நம்பி, நீங்கள் எல்லோரும் செயற்படுவீர்களாக இருந்தால் ஆகக் குறைந்தது இந்தக் கண்காட்சிக்கு வந்திருக்கின்ற அத்தனை குடும்பங்களும் இதை ஒரு உறுதிமொழியாக எடுத்துக் கொள்வீர்களாக இருந்தால் நிச்சயமாக மிகவிரைவிலே அந்தக் குடும்பத்திலே உங்களுடைய பிரசேத்திலே உங்களுடைய சமூகத்திலே பெரிய மாற்றத்தை ஏற்படுத்தலாம் -என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு மன்னிப்பு வழங்கி வரலாற்றை மாற்றவே முயற்சி

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.27

புலிகளை விடுவித்து நாட்டில் போர் நடைபெற்ற வரலாற்றையே மாற்றிவிடச் சிலர் முயற்சிக்கின்றனர். புலிகளுக்கு மன்னிப்பு வழங்க வலியுறுத்துபவர்கள் இரா ணுவத்தைத் தண்டிக்க முயற்சிக்கின்றனர். அதனாலேயே புலிச் சந்தேக நபர்களை விடுவிப்பதற்கு அமைச்சரவையில் எதிர்ப்புத் தெரிவித்தேன். இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை விரும்பவில்லை. அதற்கு எனது கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கக் கோரி அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் அமைச்சரவையில் சமர்ப்பித்த பிரேர ணைக்கு நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச மற்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். அது குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையில் அரசியல் கைதிகள் என எவரும் இல்லை. போர்க் காலகட்டத்தில் கைது செய்யப்பட்ட தமிழர்கள் அரசியல் கைதிகள் அல்ல அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களை நியாயப்படுத்த ஒரு சிலர் முயற்சிக்கின்றனர். அவ்வாறு இருக்கையில் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களை விடுவிப்பது தொடர்பில் அரசு முயற்சிப்பது வருத்தமளிக்கும் விடயமாகும். கைது செய்யப்பட்டு தடுப்பில் வைத்துள்ள இந்தக் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் எடுக்கும் முயற்சியை நாம் விரும்பவில்லை. இதற்கு எனது கடுமையான எதிர்ப்பை தெரிவிக்கின்றேன்.



இவர்களை விடுவிப்பது நாட்டில் மூன்று தசாப்த காலம் நடைபெற்ற போரை மறக்கடிக்கச் செய்யும் வகையில் அமையும். இந்த நாட்டில் ஆயுதம் ஏந்திப் போராடிய பயங்கரவாதிகளின் நாசகாரச் செயற்பாடுகள் மூடி மறைக்கப்பட்டுவிடும். அதற்கான நடவடிக்கைகளை நாமே ஏற் படுத்திவிடக்கூடாது.

அதேபோல் புலிகளை விடுவிக்கவும் அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கவும் வலியுறுத்துபவர்கள் மாறாக இராணுவத்தை மாத்திரம் தண்டிக்கும் வகையில் செயற்படுவது ஏன்? இராணுவம் போர்க்குற்றம் புரிந்துள்ளதாக சர்வதேச மட்டத்தில் முறைப்படும் இவர்கள் தமது தரப்பு செய்த தவறுகளை நியாயப்படுத்த முயற்சிக்கின்றனர்.

சர்வதேச நீதிமன்றில் இராணுவத்தை குற்றவாளியாக்கி அவர்களைத் தண்டிக்க எடுக்கும் முயற்சியின் ஒரு கட்டமாகவே இந்த புலிகளின் விடுதலையும் அமைந்துள்ளது. புலிகளை நியாயப்படுத்தி இராணுவத்தை குற்றவாளியாக்கவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின் றன.

விடுதலைப் புலிகளை விடுவித்து அவர்களை நியாயப்படுத்தும் தமிழர் தரப்பினர் மாறாக இராணுவத்தின் மீதும் குற்றம் இல்லை என்பதை ஏற்றுக்கொள்வார்களா? அவர்களை நியாயப்படுத்தும் எமது கோரிக்கைகளையும் ஏற்றுக் கொள்வார்களா? புலிப் பயங்கரவாதிகளுக்கு நியாயம் கேட்பதைப் போலவே நாம் இந்த நாட்டின் இராணுவத்துக்காக நியாயம் கேட்கின்றோம். ஆனால் புலிகளை மட்டும் நியாயபடுத்தி இராணுவத்தின் மீது போர்க்குற்றவாளிகள் என்ற முத்திரை பொறிப்பது எந்த வகையிலும் நியாயமற்றது. அதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுவிக்க அமைச்சரவையில் கொண்டு வந்த தீர்மானத்தை நான் எதிர்க்கவும் இதுவே காரணமாகும். தமிழ் மக்களின் பிரச்சினைகள் வேறு, புலிகளை விடுவிக்கும் பிரச்சினை வேறு. இந்தச் சிக்கலைச் சட்ட ரீதியில் கையாள வேண்டும். யாருடைய தனிப்பட்ட தேவைக்காகவும் சட்டத்தை மாற்றியமைக்கக் கூடாது-என்றார். (ற)

## பிரபல்யம் அடைவதற்காக விமல் வீரவன்ச நடிக்கிறார்

முஜிபுர் ரஹ்மான் எம்.பி. சாடுகின்றார்

கொழும்பு, ஒக்.27

தும்முல்லவைச் சேர்ந்த விமல் வீரவன்ச காலத்துக்குக் காலம் பிரபல்யம் அடைவதற்காகப் பல்வேறு வேடங்களில் நடிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இவ்வாறு நடிப்பது அவரது வழமையாகும். ஐரோப்பிய நாடுகளைக் கடுமையாகத் திட்டித் தீர்க்கும் விமல் அந்த நாடுகளில் பல மாதங்கள் தங்கியிருக்கின்றார். முழுவதும் மக்களை ஏமாற்றும் பொய்களையே அவர் மேற்கொள்கின்றார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளதாவது-

நல்லாட்சி அரசு ப்படையினரைக் காட்டிக் கொடுப்பதாகக் குற்றம் சுமத்தி சத்தமிடுகின்றார். இவ்வாறனவர்கள் கிணற்றுத் தவளைகளுக்கு நிகரானவர்கள். கிணற்றிலிருந்து தெரியும் அளவே இந்த உலகம் என நினைக்கின்றார்கள். நல்லாட்சி அரசு படையினரை மட்டுமன்றி ராஜபக்சக்கள் மின்சார நாற்காலியில் தண்டனை அனுபவிப்பதையும் தடுத்துள்ளது.

தவறுதலாகவேனும் மகிந்த தரப்பு வெற்றியீட்டியிருந்தால் நாட்டு மக்களே மின்சார நாற்காலியில் தண்டனை அனுபவித்திருக்க வேண்டும் - என்றார். (ற)

# மொழிப் பிரச்சினையே போருக்குக் காரணம்

## அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.27



இந்த நாட்டில் கடந்த காலத்தில் போர் ஏற்படுவதற்கு பிரதான காரணம் மொழிப் பிரச்சினையாகும். இந்தப் மொழிப் பிரச்சினையை நாம் அன்றே பேசித் தீர்த்துக் கொண்டிருக்க முடியும் - இவ்வாறு அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மொழிப் பயிற்சியை முடித்து சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று ராஜகிரியவில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் 568 பேருக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரச பல்கலைக்கழக, பாடசாலை விட்டு விலகியவர்கள், சிங்கள மாணவர்கள் தமிழையும் தமிழ் மாணவர்கள் சிங்களத்தையும் பூரணமாக கற்றுக் கொள்வதற்கும் பல திட்டங்களை எனது அமைச்சின் ஊடாக நடைமுறைப்படுத்த உள்ளேன்.

தெற்கில் வசிப்பவர் வடக்குக்கு சென்று தமிழில் ஓர் அலுவ லகத்துக்கு தமது அலுவல்களை முடிக்கவும், வடக்கில் வசிப்பவர் தெற்குக்கு வந்து தமது அலுவல்களை முடித்து வடக்கு செல்லக் கூடிய வகையில் மொழித் திறன்கள் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

2009 மே மாதம் 29ஆம் திகதி இலங்கை வந்த ஐ.நா. செயலாளா நாயகம் பன் கீ மூன் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் இணைந்து ஒன்று பட்டு தெரிவித்த கருத்தின் பின்பே ஜெனிவாவில் மனித உரிமை பிரேரணை உருவாக்கப்பட்டது. போர் முடிவடைந்த பின் தமிழ் மக் களது பிரச்சினைகள் அவர்களது வாழ்வாதாரம், காணிப் பிரச்சினை கள் தீர்க்கப்படவில்லை.

அதனாலேயே இந்தப் பிரச்சினை சுலபமாகத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முயற்சி செய்து இந்த மட்டத்துக்குப் பிரச்சி னையைக் கொண்டு வந்துள்ளார் கள்.

நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை ஒன்றிணைந்து ஓர் இணைப்புப் பாலமாகக் கொண்டு செல்வதற்கும் போரால் பாதிக்கப்பட்ட மக்கள், புனர்வாழ்வு பெற்ற விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள், இராணுவத்தினர்கள் எல்லோரையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து அவர்களது துக்கங்களைப் பகிர்ந்து கொண்டு ஒரு [illegible] சமூகத்தை உருவாக்க எனது அமைச்சின் ஊடாக நான் பாடுபடுவேன்- என்றார். (ற)

New Gateway Jaffna
உடன் இணைந்து
உங்கள் வாழ்வை வளமாக்கிக் கொள்ளுங்கள்



* Ms Office
* Computer Hardware
* General English
* General Sinhala
* IELTS
* AutoCAD
* Web Development
* Multimedia

NGT GATEWAY
39, College Road, Neeraviyadi, Jaffna.
Tel : 021 493 6666/ 0716 362 362

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி மறையும். இலாபம் கூடும். பெண்கள் செலவில் சிக்கனத்தை கடைபிடித்து சேமிப்பார்கள். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் உண்டாகும்.

**இடபம்:** மகிழ்ச்சியுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். கடனில் பெரும்பகுதியை அடைத்து மகிழ்வீர்கள். அக்கம்பக்கத்தினரின் ஆதரவு சிறப்பாக இருக்கும்.

**மிதுனம்:** எதிரிப் பிரச்சினையைத் திறம்படச் சமாளிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் படிப்படியாக உயரும். சுப விடயத்தில் உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

**கடகம்:** அடுத்தவர் வியத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் தடை ஏற்பட்டு மறையும். இலாபம் சுமார். பெற்றோர் உடல்நலனில் அக்கறை செலுத்துவீர்கள். மாணவர்கள் படிப்புக்காக அதிக நேரம் ஒதுக்குவார்கள்.

**சிங்கம்:** உறவினர்களின் அன்பைக் கண்டு நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை. மனைவியின் கருத்துக்கு மதிப்பளிப்பது நல்லது.

**கன்னி:** நம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். பெண்கள் தேவையை தாராள பணச்செலவில் நிறைவேற்றுவர். ஆரோக்கியம் பலம் பெறும்.

**துலாம்:** பிறர் வியக்கும் விதத்தில் முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிரிமிதமான இலாபம் வரும். மனைவி வழி உறவினரால் உதவி கிடைக்கும். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** எவருக்கும் தேவையற்ற வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். இலாபம் கூடும். பணியாளர்கள் பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றவும்.

**தனுசு:** நம்பிக்கையுடன் செயற்பட்டு நற்பயன் காண்பீர்கள். உடல்நலனில் அக்கறை செலுத்துவது அவசியம். தொழில், வியாபாரத்தில் வருமானம் மிதமான அளவில் இருக்கும். பொருள் கொடுக்கல் வாங்கல் கூடாது.

**மகரம்:** தடைகளை வெல்ல மதிநுட்பத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். அக்கம்பக்கத்தினர் மத்தியில் அந்தஸ்து உயரும். புத்திரர் விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள்.

**கும்பம்:** கடந்தகால முயற்சிக்கான பயன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி மறையும். இலாபம் உயரும். பெண்கள் சிக்கனமாகச் செலவு செய்து சேமிக்க முயல்வர். ஒவ்வாத உணவுகளை உண்பதைத் தவிர்க்கவும்.

**மீனம்:** எதிரிகள் இருந்த இடம் தெரியாமல் விலகுவர். புதிய முயற்சியில் ஈடுபட்டு சாதனை படைப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தினருடன் விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.





# பொலிஸ் வேடத்தில் லோரன்ஸ்

அண்மையில் லோரன்ஸ் நடிப்பில் வெளியான 'காஞ்சனா 2' படம் பெரிய வெற்றி பெற்றது. அவரது இயக்கத்தில் வெளிவந்த வெற்றிப்பட வரிசையில் 'முனி', 'காஞ்சனா' ஆகியவற்றுடன் 'காஞ்சனா 2' படமும் இணைந்துகொண்டுள்ளது. குடும்பப் பாங்குடன் கூடிய பேய்ப் படமாக வெளியான இந்தப் படங்கள் ரசிகர்கள் மத்தியில் பெரிதும் வரவேற்கப்பட்டன. அண்மைக்காலத்தில் பேய் வேடத்தில் நடித்து வந்த லோரன்ஸ் தற்போது முதல் முறையாக பொலிஸ் வேடத்தில் நடிக்கவுள்ளார். ஜீவா நடிப்பில் வெளியான 'சிங்கம் புலி' படத்தை இயக்கிய சாய் ரமணி இயக்க இருக்கும் இந்தப் படத்தில் நடிப்பதற்கு லோரன்ஸ் ஒப்பந்தமாகியியுள் ளார். பொலிஸாக நடிக்கும் லோரன்சுக்கு ஜோடியாக நிக்கி கல்ராணி நடிக்க இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கு முன்னர் நிக்கி கல்ராணி, ஜி.வி. பிரகாஷ் நடிப்பில் வெளியான 'டார்லிங்' படத்தில் அவருடன் ஜோடி சேர்ந்து நடித்துள்ளார். தற்போது இவரது நடிப்பில் 'கோ 2' படம் வெளியாகவுள்ளது. லோரன்ஸ், நிக்கி கல்ராணி ஜோடியாக நடிக்கவுள்ள படம் முழுமையான பொழுது போக்குப் படமாக உருவாக உள் ளதுடன், இந்தப்படம் பற்றிய முழு விவரங்களை விரைவில் அதிகாரபூர்வமாக அறிவிக்கவுள்ளனர் என்பது குறிப்பி டத்தக்கது.







# கிளியாக மாறும் மனிதன்

இங்கிலாந்தின் டெட் ரிச்சர்ட்ஸ் என்பவர் தாம் ஒரு தீவிர கிளி வளர்ப்புப் பிரியர் என்பதை வித்தியாசமான செயற்பாடுகளால் வெளிப்படுத்தியுள்ளார். செல்லப்பிராணிப் பிரியரான இவர் தனது வீட்டில் உடும்பு, நாய் என்பவற்றுடன் 4 பஞ்சவர்ணக் கிளிகளையும் வளர்த்து வருகின்றார். தான் ஆசையாக வளர்த்துவரும் பஞ்சவர்ணக் கிளிகளைப் போல் மாறுவதற்காக இவர் அண்மையில் தனது இரு காதுகளையும் அறுவைச் சிகிச்சை மூலம் நீக்கியுள்ளார். ஏற்கனவே கிளிகளைப் போல் தோற்றமளிப்பதற்காக தனது கை, கால்களில் 110 பச்சைகளைக் குத்திக் கொண்டுள்ளார் டெட். இது மட்டுமின்றி தனது உடலின் பல்வேறு பாகங்களில் அணிகலன்கள் அணிவதற்காக துளைகளையும் ஏற்படுத்தியுள்ளார். மேலும் இவர் தனது நாக்கையும்இரு துண்டாக வெட்டிக்கொண்டு தன்னை மாறுபட்டவராக வடிவமைத்து வருகின்றார். இவை அனைத்தையும் மிஞ்சும் படியாக மிக விரைவில் கிளி மூக்குப்போல தனது மூக்கை மாற்றிக் கொள்ளும் அறுவைச் சிகிச்சையையும் செய்து கொள்ளவுள்ளாராம்.



பேஸ் புக்கில் பிடித்தவை...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள் தங்களது கடமைகளை பொறுப்புடன் நிறைவேற்ற வேண்டும்

## பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் தர்மரட்ணம்

ஆசிரியர் பணியானது உலகளாவிய அளவில் உணரப்பட்டு பாராட்டப்படுகின்றது. இதனை உணர்ந்து அதன் மகத்துவத்துக்கு ஏற்ப ஆசிரியர்கள் தங்களது கடமைகளைப் பொறுப்புடன் நிறைவேற்ற வேண்டும் என்று கிளிநொச்சி பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் தர்மரட்ணம் தெரிவித்தார். கிளிநொச்சி வேரவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கும்போது: "உலகம் என்பது உயர்ந்தோர் போன்றே" என்று நமது முன்னோர் வாக்கு ஒன்று உண்டு. அதில் உயர்ந்தோர் என்பவர் நாலும் தெரிந்த ஆசிரியர்களே என்பது உணரப்பட வேண்டியது. எனவே இதை உணர்த்துவது தான் ஆசிரியர் தினம். ஆசிரியர் பணி எவ்வளவு உயர்வானது, மகத்தானது என்பற்கு மகா வீரன் அலெக்ஸ்சாண்டரை உருவாக்கிய கிரேக்க ஆசிரியரும் தத்துவ ஞானியுமாகிய அரிஸ்ரோட்டில் சிறந்த உதாரணமாவார். "குரு இல்லாத வித்தை பாழ்" என்று நமது முன்னோர் கூறி வைத்துள்ளனர். இயல்பாகவே வேகமும் கூர்மையான புத்தியும் உள்ளவனுக்கு குருவே பிரகாசிக்கச் செய்கின்றனர். வைரத்தைப் பட்டை தீட்டுவதுபோல் விவேகியைக்கூட அறிவொளிரச் செய்பவர் குருவே."உடையார் முன் இல்லான்போல் ஏக்கற்றும் கற்றார் கடையரே இல்லாதவர்" என்று வள்ளுவர் கூறியுள்ளார். அதாவது ஒரு ஏழை பொருளுடையவர் முன்பு இரந்து கேட்பதுபோல கற்க வேண்டும். அப்படி தாழ்ந்து இரந்து கற்பவர்களே கற்றறிவர். மற்றையோர் கற்கமாட்டார். என்ற குருவின் உன்னத நிலையை வள்ளுவர் வலியுறுத்திச் சென்றுள்ளார்.ஒரு நாட்டின் மன்னனுக்குத் தனது நாட்டில் தான் சிறப்பு. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற பாடலை நாம நிந்ததே. எனவே கல்விக்கும் அதை கற்பிப்போருக்கும் உள்ள சிறப்பு எமக்குத் தெளிவாகின்றது. மகா அலெக்ஸாண்டர் ஒரு பெரிய வீரன், விவேகி, இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த சக்கரவர்த்தி. அவன் இன்றும் பேசப்படுகிறான் என்றால் அது அவனை உருவாக்கிய அந்த ஆசான் அரிஸ்ரோட்டி லேயே சாரும். அதே போன்று அப் துல் கலாம், ஆபிரகாம் லிங்கன், போன்றவர்களும் ஆசிரி யர்களுடைய பணிகளில் சிறந்தவர்களாக கரு தப்படுகின்றனர். (21,ரி3)

## அறிமுக விழா

சாவகச்சேரி,ஒக்.27

மட்டக்களப்பு மைக்கல் கொலின் எழுதிய 'மகுடம்' காலாண்டு சஞ்சிகையின் அறிமுகவிழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பருத்தித்துறை ஞானாலயத்தில் குப்பி ளான் ஐ.சண்முகன் தலைமையில் நடைபெறும். (ஐ-9)


**அறைகள் வாடகைக்கு**

பொருளியற் கல்லூரிக்கு அருகில் மணிக் கூட்டு வீதியில் அமைந்துள்ள அறைகள் வாடகைக்கு உண்டு. (மாணவிகளுக்கு மட்டும்)

தொடர்பு : 021 561 1397

**வேலையாள் தேவை**

எமது கிளினிக் நிலையத்தில் வேலை செய்வதற்கு பெண்கள் தேவை.

தொடர்பு: பமிலி கெயர் மெடிகிளினிக்

அக்கரைவீதி, கிராமை, 021 227 1440, 077 551 5144

**தேவை**

இணுவிலில் உள்ள அரைக்கும் ஆலை நிலையத்திற்கு சகல வேலைகளும் தெரிந்த ஒருவர் தேவை.(சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்)

தொடர்பு : 076 801 0846


## பிரதேச இலக்கிய விழா

யாழ்ப்பாணம்,ஒக்.27

மன்னார் பிரதேச கலாசாரப் பேரவை நடத்தும் பிரதேச இலக்கிய விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள் ளது. மன்னார் நகரப் பிரதேச செயலாளரும் பிரதேச கலாசாரப் பேரவைத் தலைவருமான கே.எஸ். வசந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை. எஸ். தேசப்பிரிய கலந்து கொள்வார். இந்த நிகழ்வில் கலை நிகழ்வுகள், மன்னல் -2015 மலர் வெளியீடு மற்றும் "இன்றைய ஊடகங்கள் சமுதாயத்தை நல்வழிப்படுத்துகிறது, நல்வழிப்படுத்தவில்லை" எனும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றமும் நடைபெறவுள்ளதாக மன்னார் பிரதேச கலாசாரப் பேரவை அறிவித்துள்ளது. (ஐ-ரி6)

## 60 பௌத்த தேரர்களுடன் தாய்லாந்து செல்கிறார் ஜனாதிபதி

கொழும்பு.ஒக்.27

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி நான்குநாள் உத்தியோகபூர்வ பயணமொன்றாக தாய்லாந்துக்குச் செல்லவுள்ளார். தாய்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையில் இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு அறுபது ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதை முன்னிட்டு ஜனாதிபதியால் மேற்கொள்ளப்படும் இந்த உத்தியோக பூர்வ பயணத்தில் 60 பௌத்தர்களும் கலந்து கொள்கின்றனர்.

இந்தப் பௌத்தமதத் தேரர்கள் தாய்லாந்தில் பௌத்த மதத்தின் பிரித் பாராயணமொன்றையும் நடத்தவுள்ளனர். (ஐ-22)




* பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)


# முல்லையில் பண்பாட்டுப் பெரு விழா

ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் இ. குருபரன் தலைமையில் நடை பெறவுள்ளது. பண்பாட்டுப் பேரணியுடன் ஆரம்பமாகி, தொடர்ந்து ஒட்டு சுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாகப் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். தமிழர் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாசாலை மாணவர்களுடைய செம்பு நடனம், முத்து ஐயன் கட்டு அன்பு இல்ல மாணவர்களது கிராமிய நடனம், ஒட்டுசுட்டான் ம.வி. மாணவர்களுடைய சிவ நடனம், சித்தி விநாயகர் அறநெறி பாடசாலையின் சிந்து நடைக் கூத்து, சிவநகர் பழைய கணபதி அறநெறி பாடசாலை மாணவர்களுடைய குழு நடனம், பெரிய புளியங்குளம் முத்தமிழ் முருகன் அறநெறி பாடசாலை மாணவர்களுடைய குறத்தி நடனம், சமளத்துளாய் அறநெறி பாடசாலை மாணவர்களுடைய குழு நடனம், குருந்தடி வெற்றி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களுடைய கரகாட்டம், ஒட்டுசுட்டான் இந்து தமிழ் வித்தியாலய மாணவர்களுடைய இசையும் அசைவும், கற்சிலைமடு அ.த.க. பாடசாலை மாணவர்களுடைய தில்லான நடனம் உட்பட கவியரங்கம், பட்டிமன்றம் போன்ற பல கலை நிகழ்வுகளும் இந்தப் பண்பாட்டு விழாவில் இடம்பெறவுள்ளன. இந்த விழாவில் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாணசபை உறுப்பினரான து.ரவிகரன், வைத்திய கலாநிதி ஜெயகுல ராசா, வரலாற்றுஆய்வாளர் அருணா செல்லத்துரை, முல்லைத்தீவு வலயக் கல்வி பணிப்பாளர் உமுனீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-21)

## நற்கருணையில் குருதி மன்னாரில் பரபரப்பு

மன்னார்,ஒக்.27



நற்கருணை இரத்தமும் சதையுமாக மாறிய அதிசய சம்பவம் ஒன்று மன்னார் பறப்பாங்கண்டல் கன்னியர் மடத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றுள்ளது.

இதனை அடுத்து குறித்த செய்தி கிராமத்தில் பரவியதால், பறப்பாங்கண்டல் கிராமம் பரபரப்பாகியது. பறப்பாங்கண்டல் கன்னியர் மடத்தில் உள்ள அருட்சகோதரி ஒருவர் குறித்த நற்கருணை இரத்தமும் சதையுமாக மாறியுள்ளதை அவதானித்துள்ளார். இதனை அடுத்து குறித்த அருட்சகோதரி இந்தவிடயம் தொடர்பாக பறப்பாங்கண்டல் பங்குத் தந்தையிடம் தெரிவித்துள்ளார். இதனை அடுத்து இரத்தமும் சதையுமாக மாறிய நற் கருணை தற் பொழுது பங்குத் தந்தையின் வாசஸ்தலத்தில் வைக்கப்பட்டுள்ளது. குறித்த விடயம் பொது மக்களுக்கு தெரிந்ததை அடுத்து மறுநாள் மன்னார் மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் அந்தப் பகுதிக்குச் சென்று இரத்தமும் சதையுமாக மாறிய நற்கருணையைப் பார்வையிட்டு பயபக்தியோடு வழிபடுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. நற்கருணை மாற்றம் பெற்று இரத்தமும் சதையுமாக மாறி மனிதனின் இதயம் போலவும் அதற்கு அருகில் குழந்தையின் உருவம் போலவும், மேலும் அன்னை மரியாவின் உருவம் போலவும் காட்சியளிப்பதைக் காணக்கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## திறந்த பல்கலையால் விசேட தேவைகள் சார் டிப்ளோமா கற்கைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக்.27

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடத்தால் நடத்தப்படும் விசேட தேவைகள் சார் பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்துக்குப் புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றின் பட்டதாரியாக இருப்பதுடன் ஆசிரியராக அல்லது கல்வித் துறை சார் பதவிகளில் பணிபுரிபவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப படிவங்களை நாளை புதன் கிழமை முதல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி வரை பிறவுண் வீதி, கொக்குவில் என்ற முகவரியில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ-ரி6)


யாழ் நகரில் புதியதோர் உதயம்

**Lovely Flowers Center**

மல்லிகை சரம், கல்யாணமாலை, நாகசடை, ஆண்டாள் மாலை, சாதாரணமாலை, மலர்வளையம், கார்அலங்காரம், Bokoy இலை அனைத்தும் இந்தியா, நுவரெலியா, கொழும்பு இயற்கை பூக்களை வரவழைத்து செய்து கொடுக்கப்படும்.

*Free Home Delivery*

உங்கள் வீடுகளுக்கு வந்து ஓடர் பெற்றுக் கொள்ளப்படும்.

T.P: 077 400 5023 No 277, K.K.S Road, Jaffna

இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளருக்கான

**உடனடி வேலைவாய்ப்பு**

நளின் கணினி நிறுவனத்திற்கு அதன் துணை நிறுவனத்திற்கும் வேலைவாய்ப்பு கோரப்படுகின்றன. இலத்திரனியல் துறையில் தகைமை இருப்பவர்கள் விண்ணப்பிக்கவும். பணிநிலைக்கேற்ப EPF/ETF உடன் சம்பளம் வழங்கப்படும்.

**பணிநிலைகள்**

1. இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர் - 03
2. இலத்திரனியல் உதவி தொழில்நுட்பவியலாளர் -02

**தகைமைகள்**

✓ இலத்திரனியல் தொழில்நுட்பத்தில் அனுபவம் விரும்பத்தக்கது.
✓ விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கும் பதவிகளை அஞ்சல் உறையில் குறிப்பிடவும்.
✓ விண்ணப்பங்களை நேரிலோ அல்லது தபாலிலோ விண்ணப்பிக்க முடியும்.

அடிப்படைச் சம்பளம் 20,000/= க்கு மேல்

விண்ணப்ப முடிவுத் திகதி 31.10.2015

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.

No. 195/4, Parameswara Junction, Palaly Road. T.P: 021 222 1121, 0777 66 7975


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பஸ் கட்டணக் குறைப்புக்கு பொது மக்கள் கோரிக்கை



வவுனியா,ஒக்.27

சிதம்பரபுரத்திலிருந்து வவுனியாவுக்கான பஸ் கட்டணமாக 45 ரூபா அறவிடப்படுகிறது. இந்தக் கட்டணம் மிகக் கூடியதாகக் கருதப்படுவதுடன், ஏனைய இடங்களுடன் ஒப்பிடுகையில் நியாயமற்றதாக அறவிடப்படுவதாகவும் பொது மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் மற்றும் இ.போ.ச. சாலை நிர்வாகத்தினர் இந்த விடயத்தில் கவனம் எடுப்பதுடன், வவுனியா மாவட்டத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினரும் இந்த விடயத்தில் பொது மக்களுக்குரிய சேவைக்கான நியாயமான கட்டண அறவீட்டைப் மேற்கொள்ள வைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரியுள்ளனர். வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு (157 கிலோ மீற்றர் தூரம்) அறவிடப்படும் போக்குவரத்துக்கட்டணம் 174 ரூபாவாகும், வவுனியாவிலிருந்து முல்லைத்தீவுக்கு (100 கிலோ மீற்றர் தூரம்) அறவிடப்படும் கட்டணம் 160 ரூபாவாகும், வவுனியாவிலிருந்து கிளிநொச்சிக்கு (85 கிலோ மீற்றர் தூரம்) அறவிடப்படும் கட்டணம் 105 ரூபாவாகும், வவுனியாவிலிருந்து மன்னாருக்கு (86 கிலோ மீற்றர் தூரம்) அறவிடப்படும் கட்டணம் 106 ரூபாவாகும். இந்த நிலையில் வவுனியா மாவட்டத்திலிருக்கும், சிதம்பரபுரம் பகுதிக்குச் செல்வதற்கு (13 கிலோ மீற்றருக்கு) 45 ரூபா அறவிடப்படுகிறது. எனினும் பயணிகள் 50 ரூபா நடத்துநர்களிடம் கொடுத்தால் நடத்துநர்கள் 5 ரூபா மிகுதி திருப்பிக் கொடுப்பதும் கிடையாது. எனவே இந்த விடயத்தில் உரியவர்கள் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் வேலாயுதர் சொர்ணலிங்கம்

(ஓய்வுபெற்ற நில அளவையாளர், முன்னாள் தலைவர் [illegible])

மண்ணில் 25.12.1954

விண்ணில் 06.11.2014

எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று கடந்துவிட்ட போதிலும் நீங்கா நினைவுடன் வாழ்கின்றோம் தங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டுகின்றோம்

151, G.P.S.வீதி,
கல்வியங்காடு.
021 223 0128

குடும்பத்தினர்

(C 19625)(11)

## 10 ஆம் வருட நினைவில் நீ



மண்ணில் 1986 . 04 . 10

விண்ணில் 2005 . 10 . 17

## அர்ச்சனா பாலசுப்பிரமணியம்

திதி: பௌர்ணமி

### விண்ணுலகு சென்ற தெதைத் தேடி

வெண்ணிலவு தாலாட்டும் நேரம்- துள்ளும்
விண்மீன்கள் கண்சிமிட்டும் கோலம்-எம்
கண்முன்னே நீ வந்து நிற்பாய்- எம்
கவலையெல்லாம் நீ போக்கி வைப்பாய்
எண்ணரிய கலைகளை நீ கற்பாய் - வாழ்வில்
ஏற்ற மிகு சாதனைகள் செய்வாய்- என்று
எண்ணுகின்ற எண்ணமது கோடி- நீ
விண்ணுலகு சென்றதெதைத் தேடி

உன் நினைவில் வாழும் உறவுகள்

விளையாட்டரங்க வீதி
கட்டப்பிராய்

# பெரும்போக நெற்செய்கையில் குடாநாட்டு விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம்,ஒக்.27

யாழ்.குடாநாட்டில் பெரும் போக நெற்செய்கையில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். தற்போது மாரி மழை பெய்ய ஆரம்பித்துள்ளதை அடுத்து விவசாயிகள் தமது வயல்களில் நெல் விதைக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். தாழ்ந்த இடங்களில் அநேகமான விவசாயிகள் ஏற்கனவே நெல் விதைப்பை மேற்கொண்டு முடித்துள்ளனர். அத்துடன் மேட்டு நில விவசாயிகள் தற்போது நெல் விதைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஏற்கனவே நெற் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளின் நெற்பயிர்கள் முளைத்து பயிராகிக் காணப்படுகின்றன. முளைக்காத பயிர்களுக்கு மாற்றீடாக நெல் நாற்றுக்கள் நடப்பட்டு வருகின்றன. எனினும் சில வயல்களில் களைகளின் தாக்கம் அதிகரித்துள்ளதால் அவற்றைப் பிடுங்கி அழிக்கும் நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். நெற்செய்கையில் விதைப்புக்கு ஏற்றவாறு மழை ஒரு சீரான வகையில் பெய்து வருவதால் விதைப்புப் பணிகள் பாதிப்பின்றி இடம்பெற்று வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-17)

# முன்பள்ளிக் கட்டடம் திறப்பு




சாவகச்சேரி,ஒக்.27

சாவகச்சேரி நுணாவில் கிழக்குப் பாரதி முன்பள்ளிக்கென சாவகச்சேரி முத்துமாரி அம்பாள் ஆலயத்துக்கு முன்பாக ஒரு மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தில் கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத்திட்டத்தின் கீழ் இந்த முன்பள்ளிக்குப் புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கிராம மக்களின் பங்களிப்பாக ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் நிதி வழங்கப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. முன்பள்ளிக்கான காணியை வழங்கியதுடன் முன்பள்ளியைச் சுற்றி மதில் அமைத்து வழங்கிய வர்த்தகர் வை.சிவராஜா தம்பதியினர் கட்டடத்தைத் திறந்து வைத்தனர். இ.நவரத்தினராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சாவகச்சேரி நகரசபை செயலாளர் கா.சண்முகதாசன், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ. ஸ்ரீபிரகாஸ் உட்பட பொது மக்களும் கலந்து கொண்டனர். முன்பள்ளியின் பெயர்ப் பலகையை சாவகச்சேரி நகரசபைச் செயலாளரும், கட்டட நினைவுக்கல்லை இ.நவரத்தினராசாவும் திரைநீக்கம் செய்து வைத்தனர். (ஐ-9)

## கண்ணீர் அஞ்சலி

### தியாகராசா ஞானசிவம்

25.10.2015 அன்று இறைபதமடைந்த தி.ஞானசிவம் அவர்களின் பூதவுடல் அவரது விருப்பத்தின் படி யாழ் மருத்துவ பீடத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.
புகழ் விரும்பா அன்னாரது ஆத்மா சாந்தியும் சமாதானமும் அடைய நாமும் பிரார்த்தித்து குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளகின்றோம்.

மக்கள் படிப்பகச் சமூகம்
பொலிகண்டி.
பொ.கி.க.சங்கம், பொ.ஒ. வி. கழகம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி சொர்ணரட்ணம் தேவதாசன் (ஆசிரியர்)

தோற்றம் 06.11.1937

மறைவு: 27.10.2014

நல்ல போராட்டத்தை போராடினேன்,
ஓட்டத்தை முடித்தேன்
விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்
2தீமோத்தேயு 4:7

பண்டிதர் தெரு,
வவுனியா.
077 154 6868

என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன் குடும்பத்தினர்.

## அங்குரார்ப்பணமும் பாராட்டு விழாவும்

கரணவாய்,ஒக்.27

தொண்டமானாறு கல்வி மேம்பாட்டுக் குழு அங்குரார்ப்பணமும், பாராட்டு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தொண்டமானாறு வீ.ம.வித்தியாலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளன. மேம்பாட்டுக் குழுத் தலைவர் ரி.குமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தொண்டமானாறு வீ.ம.வி அதிபர் இரா.ஸ்ரீநடராசாவும், சிறப்பு விருந்தினர்களாக தொண்டமானாறு வடக்கு கிராம சேவையாளர் ந.சேகர், தொண்டமானாறு தெற்கு கிராம சேவையாளர் ப.குமரேசன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போத்தலில் அடைத்த கள் விற்பனையோ அமோகம்

## பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் கணேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஒக்.27

தற்போது மாரி காலம் ஆரம்பித்த நிலையில் குடாநாட்டில் போத்தலில் அடைக்கப்பட்ட கள் கூடுதலாகப் பாவனைக்கு விடப்பட்டுள்ளதாக வடமாகாண பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் என். கணேசன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:- மழை காலம் ஆரம்பித்துள்ளதால் பனைகளில் கள்ளின் ஊற்று குறைவடைந்துள்ளது. இதனை அடுத்து சங்கங்களினால் பாதுகாப்பான முறையில் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளே நுகர்வோரின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. இந்த முறை சங்கங்களில் சுமார் இருபது லட்சம் வரையான போத்தல் கள் அடைக்கப்பட்டது. இந்தப் போத்தலில் அடைக்கப்பட்ட கள் குறைந்தது மூன்று மாத காலத்துக்குப் போதுமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அடுத்தாண்டு ஜனவரி மாதத்துக்குப் பின்பாகவே மரங்களில் கள்ளின் ஊற்று அதிகரிக்கும் காலம் ஆகையால் கள்ளுக்குச் சற்றுப் பற்றாக்குறை ஏற்படும். எனினும் போத்தல் கள்ளை நுகர்வோருக்கு விநியோகிக்க முடியும் எனவும் தெரி வித்தார். (ஐ-17)

## வாடகைப்பணம் செலுத்தாத கடைகளை மீளப்பெறுவதற்கு நகரசபை நடவடிக்கை

சாவகச்சேரி,ஒக்.27

சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான கடைகளுக்கான மூன்று மாதங்களுக்கு மேல் வாடகைப் பணம் செலுத்தாத கடைகளை மீளப்பெற நகரசபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். நகர சபை கலைக்கப்பட்ட பின்னர் தொடர்ச்சியாக மூன்று மாதங் களுக்கு மேல் வாடகைப் பணம் செலுத்தாத கடை உரிமையாளர் களுக்கு 14 தினங்கள் கால அவகாசம் வழங்கி, கடிதங்கள் அனுப்பியுள்ளனர். இந்தக் காலக்கெடுவுக்குள் வாடகைப் பணம் செலுத்தாத கடைகளை கையகப்படுத்தி மீளக் கேள்வி மூலம் வேறொருவருக்கு வழங்கவுள்ளனர் எனத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. நகர சபைக்கான தேர்தல் நடைபெற முன்னர் பல்வேறு காரணங்களுக்காக கைமாறிய கடை அறைத் தொகுதிகள், சபை இயங்கிய காலத்தில் இருபதுக்கு மேற்பட்ட கடைகளின் உரிமையாளர்களுக்கு உரிமை மாற்றம் செய்து வழங்கியுள்ளனர். இந்த நிலையில் சில கடை உரிமையாளர்கள் சபை கலைக்கப்பட்ட பின்னர் வாடகை செலுத்தாமல் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக 14 தினங்களுக்குள் வாடகை நிலுவையைச் செலுத்துமாறு கடிதங்கள் அனுப்பியுள்ளனர் எனவும், இந்தக் காலக்கெடுவுக்குள் உரிய தொகையைச் செலுத்தத் தவறும் கடைகள் சபையினால் பொறுப்பேற்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## ஆசிரிய ஆலோசகர் நேர்முகத் தேர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.27

வடமாகாண கல்வித் திணைக்களம் நடத்தவிருந்த ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான நேர்முகத் தேர்வு தவிர்க்கமுடியாத காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இந்த நேர்முகத் தேர்வு எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை அன்று அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்துக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

## புங்கன்குளம் ரயில் நிலையப் பகுதியில் வெளிச்சம் இல்லை: பொதுமக்கள் சிரமம்

கொழும்புத்துறை,ஒக்.27

அரியாலை புங்கன்குளம் ரயில் நிலையப் பகுதியில் இரவு வேளைகளில் போதிய வெளிச்சமின்றிக் காணப்படுவதால் பயணிகள் பல சிரமங்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கின்றனர். இந்த ரயில் நிலைய மேடைப் பகுதியில் ஓரிரு மின்விளக்குகள் மட்டும் இரவில் ஒளிர்வதால் பெரும் பகுதி இருளாகக் காணப்படுகின்றது. இருளைப் பயன்படுத்தி திருட்டுச் செயல்களை மேற்கொள்ள திருடர்களுக்கு ஏதுவான சூழல் காணப்படுவதனால் பயணிகள் பாதுகாப்பற்ற நிலையில் அச்சத்துடன் தமது பயணங்களை மேற்கொள்ளவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இரவு ரயில் சேவைகளில் குறித்த ரயில் நிலையத்திலிருந்து கணிசமான பயணிகள் போக்குவரத்தை மேற்கொண்டு வருவது குறிப் பிடத்தக்கது. இந்த விடயத்தில் ரயில்வே திணைக்களம் கவனமெடுக்க வேண்டுமென பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-135)

## புலமைப் பரிசிலை அதிகரிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.27

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப் பரிசில் ஊக்குவிப்புத் தொகை அதிகரிக்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. 2016 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் கல்விக்கு அதிக நிதி ஒதுக்கப்படும் என்றும் அதன் பின்னரே புலமைப்பரிசில் தொகை அதிகரிக்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அதற்கு ஏற்றவகையில் எதிர் காலத்தில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் வெட்டுப்புள்ளிகளை குறைக்கும் திட்டம் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு வரவு -செலவுத் திட்டத்தின் பிரகாரம் தற்போது புலமைப் பரிசில் ஊக்குவிப்பு வழங்கப்படுகின்றது என்றும் இந்த முறை வரவு- செலவுத்திட்டத்தில் கல்வி அமைச்சுக்கு அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டவுடன் புலமைப்பரிசில் நிதியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-4,10)

## சடலத்தைப் பெற கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.27

ரயில் மோதி உயிரிழந்தவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து இன்னும் மீட்கப்படவில்லை. அதனை எடுத்துச் செல்லுமாறு உறவினர்களை வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுள்ளது.

நாவற்குழி ரயில் நிலையத்தில் கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் பின்னர் உயிரிழந்து விட்டார். அவரது சடலம் உறவினர்களால் இன்னும் மீட்கப்படவில்லை. அதனையே மீட்டுச் செல்லுமாறு வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுள்ளது. (ஐ-4)

## தேர்தலில் வாக்களிப்பு முறை ஆராய்வதற்கு விரைவில் குழு

கொழும்பு,ஒக்.27

உள்ளூராட்சித் தேர்தலின் வாக்களிப்பு முறைமை தொடர்பாக அலசிஆராய்ந்து தீர்மானமொன்றை மேற்கொள்ள நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் பிரதிநிதித்துவம் வகிக்கும் வகையில் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது. இந்தத் தேர்தலை நடத்தும் முறைமை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் அரசியல் கட்சிகளாலும் பல தரப்பட்ட கருத்துக்களும் கண்ட னங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவற்றை அணுகுவதற்கு உள்ளூராட்சி அமைச்சருக்கு அமைந்துள்ள அதிகாரங்களுக்கு அமைவாகக் குழுவொன்று நியமிக்கப்படுவதாக அமைச்சின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை- உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதே சங்களின் எல்லைகளை நிர்ணயிக்கும் குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக மீளவும் ஆராய்ந்து பார்த்துத் தேவையான மாற்றங்கள் பரிந்துரைகள் இருப்பின் அவற்றை முன்வைப்பதற்கு அமைச்சர்கள் கொண்ட உப செயற்குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாக அந்தத் தகவல் மார்க்கங்கள் தெரிவிக்கின்றன. (ஐ-22)

## வினைத்திறனை அதிகரிக்கும் நேர முகாமைத்துவம்

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

3. பயணங்களுக்கான நேரத்தையும் வழியையும் திட்டமிடுவதன் மூலம் வீணான அலைச்சல்களையும் நேரவிரயத்தையும் தவிர்க்கலாம்.
4. முக்கிய ஆவணங்களையும் அடிக்கடி பயன்படுத்தும் பொருள்களையும் இலகுவில் எடுக்கக்கூடியதாக வைத்தல்.
5. சரியான நேரத்தில் சரியானதைச் செய்ய பழகிக் கொள்ளுதல். இல்லாவிட்டால் ஒரு விடயத்தை பல தடவை செய்ய நேரிடும்.
6. ஒரு நேரத்தில் ஒருவிடயத்தை செய்தல் அவசியம். ஒரே நேரத்தில் பல விடயங்களைச் செய்ய முற்பட்டால் அவை வினைத்திறனுள்ள விளைவைத் தராமல் நேரத்தை வீணாக்கிவிடும்.
7. பொறுப்புக்களைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் உங்கள் நேரம் சேமிக்கப்படும்.
8. கடமைகளை முன்னுரிமைப்படுத்துவதன் மூலம் நேரத்தை ஒழுங்குபடுத்தி கடமைகளைப் பூர்த்தியாக்க முடியும்.
9. எமது சிந்தனைகளில் 20 சதவீதமானவற்றையே நிறைவேற்ற முடியுமென்பதை நினைவில் வைக்கவேண்டும். இதனால் எம்மால் அடையக்கூடிய இலக்கைச் சரியாகத் திட்டமிட வேண்டும். மாறாக இயலாத ஒன்றை முயற்சி செய்வதால் நேரம் விரயமாகும்.
10. தொலைபேசியில் கதைப்பதற்கு முன்போ அல்லது ஒரு செயலைச் செய்ய முன்போ 5 நிமிடம் என்ன விடயம் உரையாட வேண்டும்/செய்ய வேண்டுமென்று திட்டமிடல். கதைத்த பின்பு/செயலின் பின்பு இலக்கை அடைவதற்குத் தடையாக விடுபட்ட விடயத்தை எப்படி அடுத்த தடவை உள்ளடக்கிக் கொள்வதென்பதைத் திட்டமிடல்.

ஒரு மனிதனின் நேரமுகாமைத்துவத் திறன் என்பது தனிமனிதனின் வளர்ச்சியோடு நின்றுவிடுவதில்லை. தனது குடும்பத்தின், அலுவலகத்தின், நாட்டின் வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றுகின்றது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். நமது நேரத்தை எமது பணிகள் கடமைகளுக்கு மட்டும் ஒதுக்குவது ஆரோக்கியமான ஒன்றல்ல. எமது ஓய்வுக்கும் பொழுதுபோக்குக்கும் மகிழ்ச்சியான தருணங்களுக்கும் நல்ல நண்பர்கள் உறவினர்களுடனான உறவை வளர்க்கவும் நேரத்தை ஒதுக்குவதும் அவசியம். குறிப்பாக விடுமுறை நாள்களை நன்கு திட்டமிட்டு எம்மில் தங்கியுள்ள குடும்ப அங்கத்தவர்களுடன் அதிலும் பிள்ளைகளுடன் சந்தோசமான முறையில் செலவிட முயற்சிக்க வேண்டும். அப்பொழுதுதான் எமது வாழ்வு சமநிலை யான வாழ்வாக அமையும். சிறந்த அதிகாரியாகவோ, தொழிலாளியா கவோ, அலுவலராகவோ, சமூகசேவையாளனாகவோ மட்டும் இருப் பதில் பயனில்லை. நல்ல குடும்பத் தலைவர்களாகவும் இருப்பதற்கு எமது நேரத்தை ஒதுக்க வேண்டும். இவை எமது உடல், உள ஆரோக்கியத்துக்கும் வேலையின் வினைத்திறனுக்கும் பெரும் சக்தியாக அமையும்.

## மானிய உர விநியோகம் ஆரம்பிப்பு

சாவகச்சேரி,ஒக்.27

தென்மராட்சி பிரதேச நெற்செய்கையாளர்களுக்கான இரண்டாம் கட்ட மானிய உர வகைகள் விநியோகம் அந்தந்த கமநல சேவைகள் நிலையங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன. நுணாவில் கிழக்குக் கமக்கார அமைப்பைச் சேர்ந்த நெற்செய்கையாளர்களுக்கான இரண்டாம் கட்ட மானிய உர வகைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை விநியோகிக்கப்படவுள்ளதென அமைப்பின் தலைவர் இ.நவரத்தினராசா அறிவித்துள்ளார். (ஐ-9)

## நினைவுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்.ஒக்.27

ஒக்ரோபர் எழுச்சியின் 49 ஆவது ஆண்டு நினைவுக் கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.பொது நுலகத்தின் உணவக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வடபிராந்தியத்தின் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் செயலாளர் செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் சமகாலத்தில் சாதியம் தாக்கங்களும் தீர்வுகளும் எனும் தொனிப் பொருளில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கருத்துரைகளை புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக்கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் சமூக அரசியல் பரிமா ணங்கள் என்ற தலைப்பிலும், பொருளாதார சமூக ஆய்வாளர் அகிலன் கதிர்காமர் பொருளாதாரம் கல்வியில் சமூகப்புறந்தள்ளல் என்ற தலைப்பிலும் நிகழ்த்தவுள்ளார். குறிப்புரைகளை மு.இராசநாயகம், யாழினி யோகேஸ்வரன், கி.நவநீதன், த.சிறிபிரகாஸ் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர் என்று வடபிராந்திய புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக்கட்சியினர் தெரிவித்துள்ளனர். (ற-ரி6)

## பாடசாலைக்கு அன்பளிப்புகள்

யாழ்ப்பாணம், ஒக்.27

அல்வாய் வடக்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு பான்ட் வாத்திய இசைக்கருவி மற்றும் வானொலிப்பெட்டி என்பன அன்பளிப்பாகக் கிடைக்கப் பெற்றுள்ளன. வடக்கு மாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பான்ட் வாத்திய இசைக் கருவிகளும், மாலாவத்தை அல்வாயைச் சேர்ந்த நா.நல்லையா ஞாபகார்த்தமாக 12 ஆயிரம் ரூபா பெறுமதியான வானொலிப் பெட்டியும் வழங்கப்பட்டதாகப் பாடசாலை அதிபர் ந.இராசலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ-ரி6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனபேதமின்றி ஒரு சமூகமாக வாழ்ந்து நாட்டை முன்னேற்ற ஒத்துழைப்போம்

## மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.27

இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும் நீண்டகாலமாக வாழ்ந்துள்ளனர். அதற்கான சான்றுகள் பல உள்ளன. எனவே இனபேதமின்றி நாம் ஒரு சமூகமாக வாழ்ந்து நாட்டை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்வோம் என மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்தார். யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும் நீண்ட காலம் வாழ்ந்துள்ளனர். எமது அயல் நாடான இந்தியாவில் 30 மொழிகள் உண்டு. அங்கு எவ்வித வேறுபாடுகளும் இல்லை. ஆனால் நாம் சிறிய தேசம் வேற்றுமை தேவையில்லை. இலங்கையில் 2 ஆயிரத்து 500 வருடத்துக்கு முதல் பௌத்த மதம் பரப்பப்பட்டது. அந்தக் காலம் முதல் இங்கு தமிழ், சிங்கள மக்கள் உண்மையாகவே வாழ்கின்றனர். இதற்கு உதாரணம் கதிர்காமத்தில் உள்ள முருகன் ஆலயத்தைத் தமிழர்களும் சிங்களவர்களும் சேர்ந்தே வணங்குகின்றனர். எமது வாழ்க்கையானது குறுகிய காலம். இதில் எமது பிரச்சினைகளைத் தீர்க்கத் தேவையில்லை. மக்களோடு மக்களாக சமூகமாக வாழ முடியும் என்பதே எமது கருத்து. இந்த வாழ்க்கையை எவ்வாறு நடத்துவது என்பதே எமது முக்கிய குறிக்கோள் எனவும் தெரிவித்தார். (ஐ)

# வாகனங்களை மீளப்பெற அமைச்சரவை அனுமதி

கொழும்பு,ஒக்.27

க்டந்த கால அரசின் அமைச்சர்களால் ஒப்படைக்கப்படாத வாகனங்களைக் கைப்பற்றிக் கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மகிந்த ராஜபக்ச அரசில் அமைச்சர்களாக இருந்த அமைச்சர்கள் உத்தியோகபூர்வ வாகனங்களை இதுவரையிலும் ஒப்படைக்காமை குறித்த தகவல்களைப் பொலிஸ் துறைக்கு வழங்கி, அவர்களின் வசமுள்ள வாகனங்களைக் கைப்பற்றி அரசிடம் வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி அரச தகவல்கள் திணைக்களத்தில் இடம் பெற்றிருந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பில், நாடாளுமன்ற மறுசீரமைப்புக்கள் மற்றும் பொதுசன ஊடக அமைச்சரான கயந்த கருணாதிலக இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமாக இருந்த 126 வாகனங்களை அமைச்சுக்களுக்கு வழங்குவதற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்பட்டிருந்ததன் காரணமாக எரிபொருள்களில் மாத்திரம் மாதாந்தம் 100 மில்லியன் ரூபா வரையில் மீதப்படுத்திக் கொள்ள முடிந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். அத்தோடு கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் பாதுகாப்பு அமைச்சைப் பயன்படுத்திக் கொண்டு குருநாகல், கொழும்பு, குளியாப்பிட்டிய, கேகாலை பிரதேசங்களில் கைப்பற்றிக் கொள்ளப்பட்டுள்ள தனியாருக்குச் சொந்தமான காணிகள் சம்பந்தப்பட்ட அறிக்கையொன்றை விரைந்து கோருவதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-22)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மனோன்மணி கனகசபை



சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட மனோன்மணி கனகசபை நேற்று முன்தினம் 25.10.2015 ஞாயிற்றுக் கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா சிவநாயகம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும் சண்முகராசாவின் அன்பு தாயும் கமலா தேவியின் அன்புமாமியாரும் மேகா,டனீஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ் சென்றவர்களான துரைராசா, கணேசபிள்ளை மற்றும் கனகரத்தினம், இராசதுரை, தங்கராசா ஆகியோரின் அன்பு சகோதரியும் சண்முகநாதன்,பத்மராணி தம்பதியரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2015) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் மு.ப.10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள்அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சித்தங்கேணி
077 908 4458

தகவல்:
குடும்பத்தினர்

### நாகேந்திரம் கருணாகரன்



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் இல. 477, கொம்பறுத்த குளம், துணுக்காயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரம் கருணாகரன் (கருணா) 25.10.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் நாகேந்திரம் காலஞ்சென்ற விஜயலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் நல்லம்மா தம்பதி களின் பாசமிகு மருமகனும் தமிழ்ச் செல்வி (ஆசிரியை விநாயகபுரம் அ.த.க பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும் சோபா (கனடா),சபேசன்(கனடா), அனுசா (கனடா) ஆகியோரின் ஆயிருர்த் தந்தையும் டினர்சனின் அன்புப் பேரனும் விஜயராணி,கரும்புள்ளியான் காலஞ்சென்ற சிறிதரன் மற்றும் திலகவதி( பிரான்ஸ்), பாஸ்கரன் (மல்லாவி), பகீரதன்(பூவரசன்குளம்), தமிழ்ச்செல்வன் (திருவையாறு), தயாபரன் (சுவிஸ்),சுதாகரன் (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அறிவழகன் (வலயக்கல்வி அலுவலகம் துணுக்காய்), மகாலிங்கம்(பிரான்ஸ்), ஜெயாநந்தி, தனலட்சுமி(ஆசிரியர் பொன்னகர் அ.த.க. பாடசாலை),ராஜரூபினி (மாவட்டச் செயலகம் கிளிநொச்சி), தர்சினி (சுவிஸ்), கணேசலிங்கம் (கனடா), சந்திரவதனா, தில்லைநாயகி,காலஞ்சென்ற சுந்தரலிங்கம், மற்றும் அமராவதி (கனடா), சாந்தலிங்கம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.10.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு பாலியாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 477,
கொம்பறுத்தகுளம்,
துணுக்காய்.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி தங்கரத்தினம் (தங்கநாச்சியார்) சபாரத்தினம்



மண்ணில் 1933.02.08 விண்ணில் 2015.10.26

ஆடியபாதவீதி, திருநெல்வேலி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் சபாரத்தினம் 26.10.2015 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவரான பொன்னுத்துரை - இராசம்மா தம்பதிகளின் புத்திரியும் காலஞ்சென்றவர்களான சண்முகபிள்ளை - தங்கமுத்து தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற சண்முகப்பிள்ளை சபாரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் தனபாலசிங்கம் (கனடா), சண்முகசுந்தரம் (கனடா), பாக்கியலட்சுமி, புஸ்பமணி(கனடா), இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கமலாம்பிகையின் மைத்துனியும் இந்திராதேவி, சந்திராதேவி(கொழும்பு), கதிர்காமநாதன்(கனடா), ஜீவமலர் (NHDA), ஜீவலதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், கைலாயநாதன் காலஞ் சென்ற கதிர்காமப்பிள்ளை மற்றும் இராஜலட்சுமி(கனடா), நிர்மலானந்தன் (NAITA), செல்வநாதன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற கிரிதரன் மற்றும் முரளிதரன்(கனடா), தாரணி(சுவிஸ்), தர்சினி (ஜேர்மன்), தயாளினி (சுவிஸ்), ராஜீவ்(சுவிஸ்), சஜீவ்(சுவிஸ்), சுதர்ஷன் (ஜேர்மன்), மிதிலா (ஜேர்மன்), நிருஷன் (ஜேர்மன்), விபூசன் (கொழும்பு), பிரணவி, அஜித், வியாஷன் (கனடா), அக்ஷயன், துஷாயினி (NHDA), கிரிஷாந்தன், ஷாமினி, சர்மினி, சாம்பவி, கிரீஷன் ஆகியோரின் செல் லப் பேர்த்தியாரும் சாருன், நிகிதா, அவனியா, அகாஷ், யாகிஸ், வருணீஸ், யஸ்மிதா, அபினாஸ், சைலேஸ், அபிஷா, தனிஷா, அக்ஷா, கதிர்சன் ஆகியோரின் ஆசைப்பூட்டி யாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27.10.2015) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

"சண்பகம்" தேவாலய வீதி, திருநெல்வேலி கிழக்கு,யாழ்ப்பாணம். (65589) (14.16.17)

தொ.பே.இ: 021 221 5325

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி ஆறுமுகம்(பத்தர்)



சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி ஆறுமுகம் (பத்தர்) 25.10.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ் சென்றவர்களான மயில் வாகனம் பத்தர்- தங்கரத்தினம் தம்பதி யின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான இராமலிங்கம் பத்தர்- அன்னம்மா தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் பத்தரின் அன்பு மனைவியும் கிருஷ்ணசாமி காலஞ் சென்றவர்களான சுகுமார்,கோகுலராணி மற்றும் இராசபாலு(குணம் நகை மாடம் கொடிகாமம்) முத்துமலர், பவளமலர், தங்கமலர், சசிகலா(ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு தாயாருமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.10.2015) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டடது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இத்தியடிப்பிள்ளையார் கோவிலடி,
சங்கத்தானை,சாவகச்சேரி.

தகவல்
ஆ- இராசபாலு (பாலன்-மகன்)
(குணம் நகை மாடம் கொடிகாமம்)

## மரண அறிவித்தல்

### திருமதி ஆச்சிப்பிள்ளை பொன்னுத்துரை



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் இல.539, வளநகர் மல்லாவியை வசிப்பிடமா கவும் கொண்ட திருமதி ஆச்சிப்பிள்ளை பொன்னுத்துரை 25.10.2015 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலம் - தங்க முத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வர்களான கணபதிப்பிள்ளைமாணிக்கம் தம்பதி யினரின் மருமகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், மங்கையற்கரசி (லண்டன்), பாலசிங்கம் (அணிச்சியங்குளம்), செல்வராசா (மட்டுவில்), சித்திரா(மல்லாவி), கமலகாந்தன் (பரந்தன்), மனோகரன் (ஒட்டறுத்தகுளம்), விமலா(மல்லாவி), ரவீந்திரன் (சுவிஸ்), கலாதரன் (லண்டன்) ஆகியோரின் தாயா ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (27.10.2015) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் பாலியாறு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 539, வளநகர்,
மல்லாவி.

(c 19632)(14.16)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## சம்சுங் அறிமுகம் செய்யும் கலக்ஸி வியூ டேப்லட்

சம்சுங் நிறுவனம் கலக்ஸி வியூ எனும் 18.4 அங்குல அளவுடைய திரையைக் கொண்ட டேப்லட்டினை விரைவில் அறிமுகம் செய்ய வுள்ளது. இந்த நிலையில் இந்த டேப்லட் தொடர்பான படங்கள், மற்றும் தகவல்கள் இணையத்தளங்களில் வெளியாகியுள்ளன. அதன்படி முதன் முறையாக வடிவமைக்கப்படும் 18.4 அங்குல தொடுதிரையானது 1920 X 1080 பிக்ஸலைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இவை தவிர செயலி, பிரதான நினைவகமாக 2ஜிபிரம், 32ஜிபி சேமிப்பு நினைவகம், 2 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா என்பவற்றையும் கொண்டுள்ளதாக அது வடிவமைக்கப்பட்டுள்ளது.

## பேஸ்புக் தரும் அதிரடி வசதி

பேஸ்புக் நிறுவனமானது தற்போதுருவிற்றர் மற்றும் கூகுள் நிறுவனத்துடன் கடுமையாகப் போட்டி போட்டு முன்னேறி வருகின்றது. அதற்காக அதிரடி வசதிகளை வழங்கிப் பயனர்களைத் தனது பக்கம் ஈர்க்கும் முயற்சிகளில்அதுகளமிறங்கியுள்ளது. அதன்படி தற்போது அனைத்து பேஸ்புக் பயனர்களும் 2 ரில்லியன் போஸ்ட்களை 'சேர்ச்' (search)வசதி மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பை வழங்குகின்றது. இவற்றில் அனைத்துப் பயனர்களினதும் பப்ளிக் போஸ்ட், மற்றும் பேஜ் என்பவற்றைத் தேடிப் பெறக்கூடியதாக இருக்கின்றது. மேலும் குறித்த தேடலுக்கான பதில்கள் நிகழ்நேர முறையில் கிடைக்கக்கூடிய தாகவும் காணப்படுகின்றமை சிறப்பு அம்சமாகும்.



## ஐ ரியூன்ஸ் (iTunes) பாவனையாளர்களுக்கு ஓர் எச்சரிக்கை




அப்பிள் நிறுவனமானது ஐ ரியூன்ஸ் (iTunes) எனும் சேவையின் ஊடாக மீடியா பிளேயர், மீடியா லைப்ரரி, மற்றும் ஒன்லைன் ரேடியோ என்பவற்றைத் தனது பயனர்களுக்கு வழங்கி வருகின்றமையும், இதற்குப் பிரத்தியேகக் கணக்கு அவசியம் என்பதும் தெரிந்ததே. இந்த நிலையில் தற்போது போலியான ஐ ரியூன்ஸ் (iTunes) தளம் ஒன்று உரு வாக்கப் பட்டு அப்பிளின் வாடிக்கையாளர்களைக் குறிவைக்கும் செயலில் ஹேக்கர்கள் கள மிறங்கியுள்ளனர். பிரதானமாக மின்னஞ்சல் முகவரிகள் குறிவைக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் ஊடாக ஐ ரியூன்ஸ் (iTunes) தளத்தில் கொள்வனவுகள் இடம்பெறுகின்றன.
இந்தத் தாக்குதல் தொடர்பாக பாதிக்கப்பட்ட ஐ ரியூன்ஸ் (iTunes) வாடிக்கையாளர் ஒருவர் அப்பிள் நிறுவனத்திடம் முறைப்பாடு வழங்கியுள்ளனர்.

# தேசிய சேமிப்பு வங்கியால் மாணவர்கள் கௌரவிப்பு

சாவகச்சேரி,ஒக்.27
தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளையால் கடந்த 2014 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற, கிளையில் கணக்கு ஸ்வத்துள்ள மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 23 ஆம் திகதி சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் இடம்பெற்றது.
கிளை முகாமையாளர் அ. கெங்காதரம் தலைமையில்நடை பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வங்கி யின் வட பிராந்திய முகாமையாளர்வீ.வீ.கிறைசனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வல யக்கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், கௌரவ விருந்திணர்களாக வங்கிக் கிளையின் முன்னாள் முகாமையாளர் சீ.என்.ஜெனநாதன், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதிசி.கந்தசாமி, தேசிய சேமிப்பு வங்கியின் ஊர்காவற்றுறைகிளை முகாமையாளர் சுதாகரன், கொடிகாமம் கிளை முகாமையாளர் அன்ரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். கடந்த வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி





பெற்று வங்கிக் கிளைியில் கணக்கு வைத்துள்ள 50 மாணவர்கள் இதன்போது பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-9)

## லொத்தர் சீட்டிழுப்பில் 20 லட்சம் ரூபா பரிசு

கதிர்காமம் ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமேயாக சேவையாற்றும் டீ.பீ.குமாரகே என்பவருக்கு லொத்தர் சீட்டிழுப்பொன்றில் பரிசுத் தொகையாக 20 லட்சம் ரூபா கிடைத்துள்ளது. கடந்த 16 ஆம் திகதி குலுக்கப்பட்ட மஹஜன சம்பத் லொத்தர் சீட்டிழுப்பின் முதற்பரிசாகவே அவருக்கு இந்தத் தொகை கிடைக்கப் பெற்றுள்ளது. இதுபற்றிக் கருத்து வழங்கியிருந்த பஸ்நாயக்க நிலமேயான [illegible] நோக்கி வந்தபோது, ஆலயத்தை அண்டி லொத்தர் சீட்டுக்க[illegible]ரிடம் குறித்த லொத்தர் சீட்டை வாங்கியிருந்ததாகவும் அந்தச் சீட்டின் மூலம் தமக்குக் கிடைத்திருந்த இருபது லட்சம் ரூபாவை ஆலய நிதிக்கு அன்பளிப்புச் செய்துள்ளதாகவும் தெரிவித்தார். (ஐ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## அந்தியேட்டி அழைப்பு



கடந்த 28.09.2015 திங்கட்கிழமை
சிவபதமடைந்த எங்கள் குடும்ப குலவிளக்கு
சந்நிதியான் வேதாந்த ஆச்சிரம ஸ்தாபகர்
**திருமதி வசந்தி சுரேஷ்குமார்**
அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள்
நாளை (28.10.2015) புதன்கிழமை காலை 5.00
மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று
அஸ்தியானது தொண்டைமானாறு செல்வச்சந்நிதி புனித
தீர்த்தத்தில் கலக்கப்படும் அத்துடன் எமது இல்லத்தில்
நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்,
மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

வல்லை றோட்,
தொண்டைமானாறு.

குடும்பத்தினர்.

# ஈராக் போர்த் தவறு தொடர்பில் மன்னிப்புக் கோரும் பிளேயர்

லண்டன், ஒக்.27
ஈராக் போரின்போது தவறுகள் ஏற்பட்டன என்றும், அதற்காக தற்பொழுது மன்னிப்புக் கோருவதாகவும் பிரிட்டனின் முன்னாள் பிரதமாரான ரொனி பிளேயர் தெரிவித்துள்ளார்.
அமெரிக்க ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்பொழுது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது-
நாம் அன்று சதாம் ஹூசைனின் ஆட்சியை வீழ்த்தினோம். எனவே ஈராக்கில் இன்று ஏற்பட்டுள்ள போர் நிலைமைக்கு நாமும் பொறுப்பாக இருக்கின்றோம்.
ஈராக் போரே இஸ்லாமிய அரசின் உதயத்துக்கு முக்கிய காரணம் என்ற கூற்றில் உண்மை உள்ளது என்பதை மறுக்க முடியாது. எனினும், 12 வருடங்களுக்கு முன்னதாக ஈராக் மீதான அமெரிக்காவின் நடவடிக்கைகளில் தாம் இணைந்ததில் எந்த விதமான தவறும் இல்லை. - என்றும் தெரிவித்துள்ளார். (ற)

# மூளைப் புற்றுநோய் தாக்கிய சிறுவனுக்காகக் கிறிஸ்மஸ்




றொறண்ரோ, ஒக்.27
கனடா, ஒண்ராரியோ மாகாணத்தைச் சேர்ந்த சென்.ஜோர்ஜ் நகர மக்கள் மூளைப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவனுக்காக முன்கூட்டியே கிறிஸ்மஸ் கொண்டாடியுள்ளனர்.
இந்த நகரைச் சேர்ந்த இவான் வெல்வுட் (வயது -7) என்ற சிறுவன் தனது 2 வயதில் மூளைப் புற்றுநோயால் பாதிப்புக்குள்ளானான். மூளையில் ஏற்பட்டுள்ள இந்தப் புற்றுநோய்க்குச் சத்திரசிகிச்சை செய்ய முடியாது என மருத்துவர்கள் தெரிவித்துவிட்டனர்.
ஆதலால் இந்த ஆண்டின் கிறிஸ்மஸ் விழா வரை இவான் உயிருடன் இருக்க வாய்ப்பில்லை என்று கூறப்பட்டுள்ள நிலையில், அவனுக்காக முன்கூட்டியே கிறிஸ்மஸைக் கொண்டாட குடும்பத்தினர் முடிவு செய்தனர்.
இதையடுத்து இவானின் தாயார் ஷெல்லி பேஸ்புக் மற்றும் நிதியுதவி செய்யும் ஒரு வலைத்தளப் பக்கத்திலும் தனது நிலையை எடுத்துரைத்திருந்தார். குறித்த நகர மக்கள் மட்டுமன்றி வெளியூர்களில் வசிக்கும் பலரும், நிதியுதவி செய்ததோடு, பேஸ்புக்கில் உள்ள பலரும் இவானுக்காக பிரார்த்தனைகளும் செய்திருந்தனர்.
நேற்றுமுன்தினம் இந்த கிறிஸ்மஸ் கொண்டாடப்பட்டுள்ளது. சென் ஜோர்ஜ் நகரம் முழுவதிலும் அன்றையதினம் கிறிஸ்மஸ் அலங்காரங்களுடன், பேஸ்புக் மூலமாக சுமார் 3 ஆயிரம் 700 பேர் இணைந்து கொண்டனர் என்று கூறப்படுகின்றது.
அதுமட்டுமன்றி சிறப்பான உணவுகளுடன் இந்த நகர நிர்வாகம் இவானுக்காக பிரத்தியேகமாக அணிவகுப்பு நிகழ்ச்சியையும் நடத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)



சஹாரா துணைக்கண்டத்தில் உள்ள ஆபிரிக்க நாடுகளை சேர்ந்த சுமார் 70 அகதிகளை ஏற்றி வந்த
கவிழ்ந்து மூழ்கியுள்ளது. குளிர்ந்த கடல்நீரில் மூழ்கி, மூச்சுத்திணறி உயிரிழந்த 40 பேரின் சடலங்
ஸ்லிட்டன், கோம்ஸ் ஆகிய நகரங்களில் உள்ள கடற்கரையோரங்களில் கண்டெடுக்கப்பட்டுள்
தெரிவித்துள்ளது. மீதமுள்ள 30 பேரைத் தேடும் பணிகளில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெ

# இந்தோனேசிய புகை மூ
# அடுத்த ஆண்டுவரை நீ

கோலாலம்பூர், ஒக்.27
இந்தோனேசியாவில் கட்டுக்கடங்காமல் பரவிவரும் காட்டுத் தீயால் எழும் புகை மூட்டம் 2016 ஆம் ஆண்டின் ஆரம்பகாலப் பகுதிவரை நீடிக்கும் என சிங்கப்பூரின் நிபுணர்கள் சிலர் தெரிவித்துள்ளனர். தற்போது காலை வேளையில் மூன்றுமணி நேரங்களுக்கிடைப்பட்ட புகை மூட்ட குறிகாட்டியானது 200 வரை காணப்படுகின்றது என்றும், இது 24 மணிநேர அவதானிப்பில் 183 - 225 ஆகக் காணப்படுகின்றது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.
இந்தக் குறிகாட்டியானது 200 பெறுமானத்துக்கு மேல் உயருமானால் அது மிகவும் சுகாதாரக் கேடான வளியைக் கொண்டிருக்கும். இந்தப் பெறுமானம் 101 - 200 வரையான பெறுமானத்தைக் கொண்டிருக்குமாயின் அது சுகாதாரக் கேடான வளியைக் கொண்டதாக அமையும். புகை மூட்டத்தால் சிங்கப்பூர் மக்கள் பலர் சுவாசப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர் என்றும் ஆஸ்துமா நோயாளர்கள் இதனால் மிகவும் சிரமத்துக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



கடந்த ஒருமாத காலத்துக்கும் மேலாக இந்தோனேசியாவில் கட்டுக்கடங்காத நிலையில் பரவிவரு
நாடுகளின்
அரசு முய
போதும் அ








ஐ.நா. சபை உருவாக்கப்பட்டு 70 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதைக் கொண்டாடும் விதமாக உலகில் உள்ள ஏராளமான புராதன கட்டடங்கள் நீல வண்ணத்தில் ஜொலித்தன.
பிறகு மீண்டும் ஒரு போர் வரக்கூடாது என்பதை நோக்கமாகக் கொண்டும் உலகம் முழுவதும் அமைதியான சூழல் நிலவவும் ஐ.நா. சபை தொடங்கப்பட்டது. 1945ஆம் ஆண்
உலகளவில் பல்வேறு பிரச்சினைகளில் சுமுகத் தீர்வு காண்பதற்காக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த 24ஆம் திகதியோடு ஐ.நா. சபை ஆரம்பிக்கப்பட்டு 70 ஆ
அதைக்கொண்டாடும் விதமாக உலகளவில் 60க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட கட்டடங்கள் மற்றும் புராதன சின்னங்கள் நீல வண்ணத்தில் ஒளியூ
எகிப்தின் பிரமிட், இந்தியாவின் தாஜ்மஹால், இத்தாலியின் சாய்ந்த கோபுரம் உள்ளிட்ட ஏராளமான நினைவு சின்னங்கள் அன்றையதினம் நீல வண்ணத்தில் காட்சியளித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...வந்த படகொன்று லிபியா நாட்டின் கடல் எல்லையில் நேற்றுமுன்தினம் ...சடலங்கள், லிபியா நாட்டின் தலைநகரான திரிபோலியின் கிழக்கேயுள்ள ...பட்டுள்ளன என்று அந்த நாட்டின் செம்பிறைத் தொண்டு நிறுவனம் ...றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# எதிர்காலத்தில் சிரியாவில் அசாத்துக்கு இடமில்லை

## சவூதி வெளிவிவகார அமைச்சர் திட்டவட்டம்

அலப்போ, ஒக்.27

தற்போதைய சிரிய ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு எதிர்காலத்தில் அந்த நாட்டில் இடம் இருக்காது என்று சவூதி அரேபியாவின் வெளிவிவகார அமைச்சர் அடெல் அல் ஜுபைர் தெரிவித்துள்ளார்.

எகிப்து தலைநகர் கெய்ரோவில், அந்தநாட்டு வெளிவிவகார அமைச்சர் சமேஹ் சுக்ரியுடன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்பொழுதே அவர்



இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்பொழுது சர்வதேச தரத்திலான பேச்சின் மூலம் சிரிய பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் இவை தொடர்பில் மிக விரைவான தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும்.

சிரிய நெருக்கடிக்கு சிறந்த தீர்வைப் பெருவதற்கு பஷர் அல் அசாத்தை பதவியில் இருந்து விலக்குவதே சிறந்த வழி. அவருக்கு எதிர்காலத்தில் அங்கு எந்த வித நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாமல் போகும். - என்றார். (ற)

# டெக்சாஸில் தொடரும் மழை; வெள்ள அபாய எச்சரிக்கை

டல்லோஸ், ஒக்.27

டெக்சாஸின் நொவரோ மற்றும் டல்லோஸ் பிராந்தியங்கள் உட்பட பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்தும் கனமழை பெய்து வருகின்றது. அதனால் வெள்ள அனத்தம் ஏற்படலாம் என டெக்சாஸின் இடர் முகாமைத்துவ அமைச்சு எதிர்வு கூறியுள்ளது.



தொடரும் கனமழையில் சிக்கி வடிகால் பள்ளத்தில் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர் காணாமற் போயுள்ளார் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, தண்டவாளத்தை மேவிப் பாயும் வெள்ள நீரால் நவரோ பிராந்தியத்தில் பசுபிக் யூனியனின் சரக்கு ரயில் ஒன்று தடம் புரண்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆயினும் குறித்த ரயில் தடம் புரண்டதில் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை.

டெக்சாஸில் தற்போது வரலாறு காணாத மழை பெய்து வருகின்றது என நவரோ பிராந்திய ஷெரீப் எல்மர் டேன்னரா தெரிவித்துள்ளார்.

தொடரும் கன மழ்ழயால் விரைவில் டெக்சாஸ் பெரிய வெள்ள இடரை எதிர்கொள்ளும் நிலை உருவாகலாம் என்று அந்தநாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

அதனால் அந்தப்பிராந்திய மக்களை முன்னேற்பாடுடனும் அவதானத்துடனும் இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற)

# ...மூட்டம் ...நீடிக்கும்



...விவரும் காட்டுத் தீயை அணைக்க பல ...களின் உதவிகளைப் பெற்று அந்த நாட்டு ...முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற ...தும் அது பயனளிக்கவில்லை. (ற)

## களியாட்ட விடுதியில் தீ விபத்து: இந்தோனேசியாவில் 17 பேர் சாவு

சுலவேசி, ஒக்.27

இந்தோனேசியாவின் சுலவேசி தீவிலுள்ள களியாட்ட விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 17 பேர் வரை உயிரிழந்துள்ளனர். 70க்கும் அதிகமானவர்கள் மூச்சுத் திணறல் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சுலவேசி மாகாணத்தின் தலைநகர் மனடோவிலுள்ள மூன்றடுக்கு மாடிக் கட்டடம் ஒன்றின் இரண்டாவது மாடியில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து ஏற்பட்ட சமயம் விபத்து நிகழ்ந்த அறைக்குப் பக்கத்து அறையிலுள்ள களியாட்ட விடுதியில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பாடிக் கொண்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தீ மளமளவென பரவியதும் அச்சமடைந்த சிலர் ஜன்னல் வழியே வெளியில் குதித்துள்ளனர். வெளியேறுவதற்கு ஒரேயொரு வழி மட்டுமே இருந்ததால் பலர் உள்ளேயே சிக்கிக் கொண்டனர். அப்போது பரவிய கரும்புகையால் பலருக்கு மூச்சுத் திணறல் ஏற் பட்டுள்ளது. அதில் 17 பேர் உயி ரிழந்துள்ளனர்.

சுமார் 7 மணி நேரம் போராடி தீயணைப்பு வீரர்கள் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். தகவல் அளித்து ஒரு மணி நேரத்துக்கு மேல் தாமதமாகவே தீயணைப்பு வாகனங்கள் வந்ததாகக் கூறப்படுகிறது. இந்த விபத்தில் உயிரிழந்த 17 பேரும் இந்தோனேசியாவைச் சேர்ந்தவர்கள் எனவும், இதன்போது பெரும்பாலானவர்கள் மூச்சுத் திணறல் காரணமாகவே உயிரிழந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)



...த்தன. இரண்டாம் உலகப் போருக்குப் ...ஆண்டு தொடங்கப்பட்ட இந்தச் சபை ...70 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. ...ஒளியூட்டப்பட்டன. சீனப் பெருஞ்சுவர், ...த்தன. (ற)



## கடலில் தத்தளித்த குழந்தையை காப்பாற்றிக் கரை சேர்த்த மீனவர்

அன்காரா, ஒக்.27

கடலில் உயிர்காப்பு அங்கியுடன் தத்தளித்துக் கொண்டிருந்த குழந்தை ஒன்றை துருக்கிய மீனவர் ஒருவர் காப்பாற்றியுள்ளார். துருக்கியின் ஈஜியன் கடலில் தத்தளித்த அகதிகளின் குழந்தை ஒன்றே இவ்வாறு காப்பற்றப்பட்டுள்ளது. சினாப் கும்றேன் எனப்படும் அந்த மீனவர் குழந்தையைத் தவிர மேலும் 15 பேரையும் காப்பாற்றியுள்ளார்.

கடலிலிருந்து எடுக்கப்பட்ட அந்தக் குழந்தையின் நுரையீரலுக்குள் சென்ற தண்ணீரை வெளியேற்றிய பின்னர் குழந்தை அசையத் தொடங்கியது என்று கும்றேன் தெரிவித்தார். 18 மாதங்கள் நிரம்பிய அந்தக் குழந்தை உடல் ஆரோக்கியத்துடன் உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அது வெற்று உயிர்காப்பு அங்கி என்று நினைத்தேன் , ஆனாலும் அருகில் சென்று பார்த்தேன். பாா்ப்பதற்குப் பொம்மை போல இருந்தது. இறந்த நிலையில் இருக்கிறதோ என்ற ஐயத்துடன் கையில் தூக்கினேன். முனகும் சத்தம் கேட்டவுடன் குழந்தை உயிருடன் இருப்பதை உறுதி செய்தேன் - என்று கும்றேன் தெரிவித்தார்.

அதேவேளை, போரிலிருந்து உயிரைப் பாதுகாக்கும் நோக்கத்தில், ஐரோப்பிய நாடுகளில் வாழ்க்கையைத் தொடர்வதற்காக நாட்டை விட்டு வெளியேறிய 6 லட்சத்து 80 ஆயிரம் அகதிகளில் 3 ஆயிரத்து 200 பேர் கடலில் காணாமற் போயுள்ளனா் என்று சர்வதேச அகதிகளுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது. (ற-ரி4)

## வடகொரிய ரோந்துப் படகு மீது தென் கொரியா துப்பாக்கிச் சூடு

சியோல், ஒக்.27

வடகொரியாவின் ரோந்துப்படகு ஒ... றின் மீது தென்கொரிய கடற்பை... யினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ள... இந்தச் சம்பவம் இரு நாடுகளுக்கு... இடையில் உள்ள பிரச்சினைக்குரி... கடல் எல்லையிலேயே இடம்பெ... றுள்ளது.


குறித்த படகு மீது ஐந்து முறை ... பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என... தெரிவிக்கப்படுகின்றது. குறித்த ... திக்குள் வடகொரியாவின் ரோந்... படகு வந்ததைத் தொடர்ந்தே த... இந்தத் துப்பாக்கிச் சூட்டை மேற்கொ... டதாக தென்கொரியா தெரிவித்... ளது.

இருந்தபோதும் தங்களது படகு... தென்கொரியா சுட்டிருப்பது ஆ... மூட்டும் செயல் என வடகொரியா ... வித்துள்ளது. தங்கள் படகு வழ... மான பணியாக ரோந்து நடவடிக்... யில் ஈடுபட்டிருந்தது என்று ... கொரியா தெரிவித்துள்ளது.

அண்மைக்காலங்களில் கூட, கண்... வெடித் தாக்குதலில் தென்கொ... வீரர்கள் 2 பேர் காயம் அடைந்த... மற்றும் வட கொரியாவுக்கு எதிர... தென் கொரியா, எல்லையில் ... பெருக்கி அமைத்து, எதிர்ப்புப் பரப்... செய்ததமை போன்ற நிகழ்வுகள் ... பெற்றன. பின்னர் இரு தரப்புப் பேச... பின்னர் இரு நாடுகளுக்கும் இடை... சமரச உடன்பாடு ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினைத்திறனை அதிகரிக்கும் நேர முகாமைத்துவம்



அ. அஜந்தன் கந்தர்மடம்

அவசர உலகில் நாம் நாள்தோறும் ஓடிஓடியே ஓய்ந்துவிட்டோம். குடும்பம், தொழில், அலுவலகம், சமூகச்செயற்பாடுகள், ஆன்மிகச் செயற்பாடுகள் என்று ஒரு நாளின் 24 மணித்தியாலம் சில சமயங்களில் போதாமல் போவதுபோல் இருக்கும். இதனால் எல்லாப் பணிகளையும் அரைகுறையாகச் செய்வதுடன் அதில் ஒரு நிறைவோ, திருப்தியோ இருப்பதில்லை. பதவியிலுள்ள அதிகாரிகள் முதல் பரீட்சைக்கு படிக்கின்ற மாணவர்கள் வரை அனைவருக்கும் நேர முகாமைத்துவம் சவா லாகவே உள்ளது. எமது தாமதங்களும் நேரக் கட்டுப்பாடின்மையும் பொது இடங்களில் காணப்படும்பொழுது அது பொதுமக்களைக் காக்க வைத்து அவர்களின் நேரங்களைச் சூறையாடுவதோடு அவர்களை நாம் மதிக்கவில்லை என்ற ஒரு மறைமுகக் கருத்தையும் கொடுத்து நிற்கிறது. சாரதிகளின் தாமதங்களும் அதனால் அதிகரிக்கும் வாகனங்க ளின் வேகமும் பல சாவுகளை ஏற்படுத்தியுள்ளது.

நாளாந்தம் நாம் நேரத்தை விரயமாக்கும் சந்தர்ப்பங்கள் எவையென நாம் தெரிந்து வைத்திருப்பதுடன் அவற்றைத் தவிர்ப்பது அல்லது சீர்செய்து கொள்வது எமது நேர முகாமைத்துவத்தின் முதற்படியாக அமையும். அந்த அடிப்படையில் கீழே குறிப்பிடுகின்ற சில காரணிகள் எமது நேரத்தின் பெரும் பகுதிகளை விழுங்கிவிடுகிறது.

1. நாளாந்த செயற்பாடுகளின் பின்னடைவு: நாளாந்த செயற்பாடுகள்/ கடமைகளில் ஏற்படும் பின்னடைவு அன்றைய தினத்தின் அனைத்து காரியங்களையும் பின்னகர்த்திவிடும். (உதாரணமாக: தாமதமாகத் துயிலெழுதல், உணவு தயாரிக்க அதிக நேரம் எடுத்தல், அழகுபடுத்தல்)

2. வேலைகளைப் பொதுமைப்படுத்தல்: எல்லாவேலைகளும் நமக்குரியதென வேலைகளை பொதுமைப்படுத்துவதால் வேலைப் பளு ஏற்படுவதுடன் நேரவிரயமும் ஏற்படுகிறது.

3. பொறுப்புக்கள் மீதுள்ள தெளிவற்றதன்மை: அலுவலகப் பணியிலுள்ளோர் தமது பொறுப்புக்கள் மீதுள்ள தெளிவற்ற தன்மையால் அவர்களது பணிகளில் தாமதங்கள் ஏற்படும்.

4. தொடர்பாடல் குறைபாடு: எமது இலக்கு நோக்கிய பயணத்துக்கும் திட்டமிடலுக்கும் இடையூறாக இருப்பதுடன் நேரத்தையும் வீணடித்துவிடும். நிகழ்வுகள் தொடர்பான நேரம், இடம், திகதி போன்றவற்றிலும் முகவரிகள் தொடர்பான தெளிவற்ற தகவலாலும் நேரம் விரயமாகும்.

5. பயணங்கள்: பாடசாலை, அலுவலகம்/ தொழில் புரியும் இடம், மருத்துவமனை, சந்தை போன்ற முக்கியமான இடங்கள் எமது வாழ்விடத்திலிருந்து தொலைவில் இருந்தால் பயணங்களில் நாம் அதிகம் நேரத்தைச் செலவிட வேண்டியிருக்கும்.

6. தொலைபேசி: அழைப்புக்களும் நாம் அதற்குச் செலவிடும் நேரமும் எமது நாளாந்த பணிகளில் தாமதங்களை ஏற்படுத்துவதுடன் தவறுகள் நடைபெறவும் வாய்ப்புள்ளது. அதனால் மேலதிகமாக நேரத்தை ஒதுக்க வேண்டியுள்ளதுடன் தவறைத் திருத்திக்கொள்ளவும் நேரத்தை செலவிடவேண்டியிருக்கும்.

7. காலநிலை: திட்டமிட்ட பணிகளைச் செய்வதற்கு காலநிலைகளும் சில சமயங்களில் இடையூறாக அமைந்துவிடும். மழை, அதிக வெப்பம் போன்றன எமது பயணங்களையும் பணிகளையும் முடக்கிவிடும்.

8. குறைவான திட்டமிடல்: ஒவ்வொரு செயலைச் செய்கின்றபொழுதும் அதற்கான திட்டமிடல் அவசியம். அவை சீராக இல்லாவிட்டால் அவற்றை செய்து முடிக்க காலதாமதமாகும்.

9. பயனற்ற உறவுமுறைகள்: உறவினர்கள் ஊக்கப்படுத்தி எமது பணிகளை விரைவாக்க இயலாதவர்களாக இருந்தால் அவர்கள் எமது நேரத்தை வீணாக்குவதுடன் வினைத் திறனான செயல்களைச் செய்யமுடியாமலும் போகும்.

10. விருந்தினர் வருகை: விருந்தினர் வருகையும் நாம் அவர்களுடன் செலவு செய்யும் நேரமும் எமது நாளாந்தக் கடமைகளை தாமதப்படுத்துவதுடன் திட்டமிட்ட வேலைகளை திட்டமிட்ட நேரத்திலும் முடிக்க முடியாமலும் போகும்.

11. சோர்வாக இருத்தல்: நாம் சோர்வாக இருந்தால் எமது கடமைகள், பணிகளின் வேகம் குறையும். இத்துடன் ஓய்வுக்கு அதிக நேரத்தை ஒதுக்க வேண்டியிருக்கும்.

12. இடர்: இயற்கை அழிவு, விபத்து, போர் போன்ற இடர்கள் நிகழ்ந்தால் அதில் அதிக நேரங்களை செலவிடுவதால் அதிக கால தாமதங்கள் ஏற்பட்டு எமது திட்டங்களும் பின்னகர்த்தப்படும். இடரின் அழிவை சரி செய்யவும் அதன் தாக்கத்திலிருந்து மீளவும் நேரம் செலவிடப்படும்.

13. தவறான அணுகுமுறைகள்: ஒவ்வொரு செயலையும் செய்வதற்கு ஒரு நேரிய அணுகுமுறை உண்டு. அதனைச் சரியான முறையில் கடைப்பிடிக்காமல் தவறாக அணுகுவதால் எமது இலக்கை அடைய காலதாமதம் ஏற்படும்.

14. தவறான பழக்கவழக்கம்: மது அருந்துதல், புகைத்தல் போன்ற தீய செயல்களால் அதிக நேரம் செலவாவதுடன் விபத்துக்களும் தவறுகளும் நிகழ்கின்றன. அதனால் அவற்றைச்சரிசெய்ய நேரம் செலவிடப்படும். இன்னும் சிலர் புகைப்பிடித்தலுடன் தமது பணிகளைச் செய்வதாலும் தாமதங்கள் ஏற்படும்.

15. உதவியற்ற நிலை: எல்லா வேலைகளையும் தனிமனிதனால் செய்து முடித்துவிட முடியாது. பலரது உதவிகளோடே பல வேலைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. இந்த நிலையில் உதவியற்ற நிலை ஏற்பட்டால் வேலைகளைப் பூர்த்தி செய்யும் கால அவகாசமும் அதிகரித்து நேரம் விரயமாகும்.

**நேரமுகாமைத்துவத்தின் அவசியம்**

ஏன் நேரமுகாமைத்துவம் எமது வாழ்விலும் தொழில் புரியும் இடங்களிலும் அவசியமானது?

1. நேரதாமதங்களால் ஏற்படும் நெருக்கீட்டை தவிர்த்து உள ஆரோக்கியத்தைப் பேண முடியும். இல்லாவிட்டால் எமக்கு ஏற்படும் நெருக்கீட்டால் எம்மோடு பணியாற்றுபவர்களை அல்லது குடும்ப அங்கத்த வர்களை வன்சொற்களால் பேசவோ அல்லது தேவையற்ற விதத்தில் அவர்கள் மீது கோபப்படும் நிலையோ ஏற்படும்.

2. குறுகிய நேரத்தில் அதிக வேலையை செய்ய முற்படும் பொழுதும் நெருக்கீட்டை எதிர் கொள்ளும்பொழுதும் எமது உட லிலிருந்து அதிக சக்தி விரயமாகும். ஆனால் நேர முகாமைத்துவத்தை கடைப்பிடித்தால் வீண் விரயமாகும் நேரத்தையும் சக்தியையும் சேமிக்க முடியும்.

3. நேர தாமதத்தினால் பயணத்திலும் வேலையிலும் வேகத்தை கூட்டுவதால் கவனத்தை இழப்பதால் விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கிறது.

4. இலக்கை அடைவதற்கு நேரத்தை நாம் கடைப்பிடிக்க வேண்டும். இல்லாவிட்டால் குறித்த காலத்தில் எதிர்பார்த்த எமது இலக்குகளை எட்டமுடியாமல் போகும்.

5. எமது ஒவ்வொரு செயலிலும் நேர முகாமைத் துவத்தை கடைப் பிடித்தால் அந்தச்செயல்களின் மூலமாக சிறந்த வெளியீடுகளை / பெறுபேறுகளைப் பெறலாம்.

6. நாம் நேரத்தைச் சரியான முறையில் பயன்படுத்தினால் வினைத்திறனுடைய மனிதனாக மாற முடியும்.

7. நாம் நேரக் கட்டுப்பாட்டோடு இருந்தால் எமது சுயமதிப்பு விருத்தியாகும்.

8. நேரமுகாமைத்துவம் எமது காரியங்களின் தாமதங்களைத் தவிர்க்கும்.

9. நேரத்தைத் திட்டமிட்டு செலவு செய்தால் எம்மால் எந்த வேலையும் செய்து முடிப்பதற்குரிய திறன் இருப்பதாக உணர்வோம்.

10. நேரக்கட்டுப்பாடு எமது வாழ்வை ஒரு கட்டுப்பாடுடைய வாழ்வாக்குவதற்கு வழி வகுக்கும்.

11. நேரத்தைக் கருத்திலெடுக்காமல் செய்கின்ற காரியங்கள் பல சந்தர்ப்பங்களில் தோற்றுவிடுவதால் எமது தன்னம்பிக்கையை அது பாதித்துவிடும். ஆனால் நேரத்தை கணித்துச் செய்கின்ற ஒவ்வொரு காரியமும் வெற்றியை தேடித்தரும். இதனால் எமக்குள் தன்னம்பிக்கை வளரும்.

நேரத்தை முகாமைத்துவப்படுத்த சில வழிகள்

1. ஒவ்வொரு செயலைச் செய்யும்பொழுதும் அதனை வினைத்திறனுடன் திட்டமிடல் அவசியம். வேலையின் அளவு, தேவைப் படும் நேரம், இடம் என்பன முன்கூட்டியே திட்டமிடப்படவேண்டும்.

2. எமது இலக்குகளை ஒழுங்குபடுத்தி அதற்கான நேர அவகாசங்களைத் தீர்மானிக்க வேண்டும். (9ஆம் பக்கம் பார்க்க)

# குறையொன்றுமில்லை கோவிந்தா!

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல. பரந்தாமன் ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தி வண்ணையம்பதியிலே வேங்கடேச வரதராஜப் பெருமாளாக வீற்றிருந்து அருளாட்சி புரியும் அழகே தனி. இன்று இந்தப் பெருமாள் கோயிலில் ஒரு சிறப்புத் திருவிழா நிகழ இருக்கின்றது.

இன்று கூடுகின்ற பூரணை ஓர் உயர்ந்த அதி உன்னத பூரணையாகும். ஐப்பசி மாதத்தில் வருகின்ற இந்தத் திவ்ய திருநாள் ரத் பூர்ணிமா என அழைக்கப்படுகின்றது. இன்று கூடும் இந்த அற்புதப் பூரணை பெருமாளின் கருணை பெற ஏதுவானது என்பது ஆன்றோர் நம்பிக்கை.

குறையொன்றும் இல்லை கோவிந்தா! இன்று நிறைவாழ்வு தருவாய் வைகுந்தா!! என்று வாய்விட்டுச் சொல்லி வழிபாடியற்றி நிற்கும் உண்மையான நம்பிக்கையுள்ள பக்தி மிக்க அடியவர்களுக்கு இன்று வண்ணை பெருமாள் திருவருட்கடாட்சம் தந்து அருள்புரியும் நிகழ்வு அற்புதமாக நிகழவிருக்கின்றது. இந்த அருள் கொழிக்கும் அற்புத கோலாகலத் திருநாளான ரத் பூர்ணிமா தினத்தில் ஸ்ரீதேவி, பூதேவி சகிதம் வேங்கடேசப் பெருமாள் வெளி வீதி வலம்வரப் புறப்பாடாகி ஆலய கோபுர வாசலில் அருட்காட்சி தர வந்து நிற்பார்.


அந்த இனிய மாலைப்பொழுதிலே வானத்திலே சந்திரன் பூரண சந்திரனாக வட்ட வடிவ அம்புலியாகத் தோன்றுவான். அப்போது கோமாதா எங்கள் குலமாதா என்று வணங்கி மகிழும் பசுமாட்டின் இனிய பசும்பால் ஒரு பெரிய பாத்திரத்திலே பெருமாளுக்கு முன்பாக வைக்கப்படும். அந்தப் பசும்பால் இருக்கும் பாத்தி ரத்திலே நிலா எறிக்கும் பூரண சந்திர னின் ஒளியை விழச் செய்வார்கள். அந்தப் பசும் பாலிலே தெரியும் பூரண சந்திரனின் ஒளி யைப் பார்த்துவிட்டு மகாவிஷ்ணுவையும் வணங்கிக்கொண்டு முதலில் யாரைப் பார்க்கிறோமோ அவர்களிடம் ஓர் ஈர்ப்புச் சக்தி உண்டாகுமாம்.

இந்த நிகழ்வு ஓர் ஆச்சரியமான ஆனால் அதேநேரத்தில் ஓர் அற்புதமான நிகழ்வாகும். இந்த அருள்மயமான புனித புண்ணிய நிகழ்ச்சியானது இன்று மாலை யாழ்ப்பாணம் வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் வெகு சிறப்பாக நடைபெறவிருக்கின்றது.

காத்தற் கடவுளான ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியானவர் இந்த வண்ணையம்பதியிலே வேங்கடேசனாக எழுந்தருளி வீற்றிருந்து உண்மையான நிறைபக்தியுடன் நம்பிக்கையாக வழிபடுகின்ற அடியார் பெருமக்களுக்கு பரிபூரண கிருபாகடாட்சத்தை அள்ளி வழங்கும் இந்த ரத் பூர்ணிமா பூரணை வழிபாடு மிக அருமையான ஒரு வழிபாடாகும்.

எவ்வளவோ இடர்களுக்கு மத்தியில் சதா சர்வ காலமும் [illegible] மாயவன் [illegible] ஒரு சர்வரோக நிவராணியாகும்.

ஆதலால், ஸ்ரீ வேங்கடேசப் பெருமாளின் திவ்ய திருவருளுக்குப் பாத்திரமாகி ரத் பூர்ணிமா பௌர்ணமி தின வழிபாட்டை முறையாக முடித்து எல்லாவகையான இன்பங்களையும் அனுபவித்து லௌகீக புவி வாழ்வில் மங்கலமுண்டாகி நல்வாழ்வ வாழ நம்மை வழி நடத்தமாறு இறைஞ்சுவோமாக.



கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார்துறை ஊழியர்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும்

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் தனியார்துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப் படுமென அறிவிக்கப்பட்டது. இதனால் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் பணியாற்றி வருகின்ற தனியார்துறை ஊழியர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். ஆனால் அடுத்த வரவு செலவுத் திட்டமும் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் கடந்த வருடம் அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வு தனியார்துறை ஊழியர்களுக்கு இன்னமும் கிடைக்காத பரிதாப நிலையே காணப்படுகின்றது. அரச துறையை விடத் தனியார் துறைகளிலேயே அதிகமானவர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கென ஒரு முறையான சம்பளத்திட்டம் வகுக்கப்படவில்லை. இதனால் தொழில் தருநர்கள் நிர்ணயித்து வழங்குகின்ற சம்பளத்தையே பெற வேண்டிய அவலநிலையில் இவர்கள் உள்ளனர். சில தனியார் நிறுவனங்கள் குறைந்த வேதனத்தை வழங்கிவிட்டு ஊழியர்களிடம் அதிக நேரம் வேலை வாங்குவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளன. தொழிற் சட் டங்களை மீறுகின்ற வகையில் தனியார் நிறுவனங்கள் செயற்படு வதையும் காணமுடிகின்றது. தனியார் துறைகளில் பணியாற்றுகின்ற அநேகமான பணியாளர்கள் தமது குடும்பக் கஷ்டம் காரணமாகவே பல்லைக் கடித்தவாறு பணியாற்றி வருகின்றனர். அரச உத்தியோகத்தர்களுக்கும் இவர்களுக்கும் வாயும், வயிறும் ஒன்று தான். ஆனால் தனியார் நிறுவனங்கள் இதனைக் கருத்தில் கொள்வதில்லை. தனியார் துறைகளில் உயர்ந்த பதவிகளில் அமர்ந்திருப்பவர்கள் சிலர் அதிகளவு வேதனத்தைப் பெற்று வருகின்றமையை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் அதிக வீதமான ஊழியர்கள் மிகக் குறைந்த வேதனத்தையே பெற்று வருகின் றனர்.

பெரும்பாலான தனியார்துறை ஊழியர்கள் தமது குடும்பச் செலவுகளைச் சமாளிக்க முடியாத நிலையில் வறுமையின் பிடிக்குள் சிக்கியுள்ளனர். எனவே இவர்களையும் மனிதர்களாகக் கணித்து அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்பட இருக்கும் வரவு செலவுத் திட்டத்தில் தனியார் துறை ஊழியர்களுக்கும் வேதன அதிகரிப்புக்கான அறிவிப்பை வெளியிட்டு அதைக் கட்டாயம் நடைமுறைப்படுத்துவதற்கும் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

*பா.சரவணன்*
*தனியார்துறை ஊழியர்*

# அரச அதிபரின் கவனத்துக்கு




வவுனியா மாவட்ட பிரதேச செயலகங்களில் இருந்து பொது மக்களின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களில் மாற்றங்கள் மேற்கொள்வதற்கான விண்ணப்பங்கள் உரிய காலத்தில் சரி பார்க்கப்படுவதில்லை. பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களில் பெயர், பிறந்த ஆண்டு, திகதி, மாதம் மற்றும் சிறு பிழைகளை மாற்றம் செய்வதற்கு, வவுனியா மாவட்ட பிரதேச செயலகங்களில் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப் பப்படிவங்கள் சரிபார்க்கப்பட்டு யாழ்ப்பாணம் இறப்பு, பிறப்பு பதிவாளர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்த விண்ணப்பப்படிவங்கள் உரிய காலத்தில் சரி பார்க்கப்பட்டு பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்படு வதில்லை என முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன. சில விண்ணப்பப்படிவங் கள் மூன்று, நான்கு மாதங்கள் சென்றும் அனுப்பப்படுவதில்லை என மக்கள் தெரியப்படுத்துகின்றனர். பிரதேச செயலகத்தில் கேட்டால் இன்னமும் வரவில்லை என்ற ஒரே வார்த்தையில் பதில் சொல்லுகிறார்கள் என்பது மக்கள் முறைப்பாடு. பொது மக்கள் தங்களது தேவைக்காக உரிய ஆவணங்கள் எல்லாவற்றையும் இணைத்துத் தான் இந்த விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு பிரதேச செயலகத்தினால் மாவட்டப் பதிவாளருக்கு அனுப்பப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டும், உரிய காலத்தில் கிடைக்காத – காரணத்தால், தேசிய அடையாள அட்டை, புலமைப்பரிசில் பரீட்சை, வெளிநாடு செல்வதற்கு போன்ற இன்னும் பல தேவைகளுக்காக மக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் இருப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர். காலதாமதத்தால் வெளிநாடு செல்ல உள்ள பலர் தங்களது பயணத்தை ஒத்திப்போட வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இது உண்மையான விடயமாகும்.

பிரதேச செயலகத்தில் இருந்து அனுப்பப்படுகின்ற விண்ணப்பப்படிவங்களை விரைவில் பெற வேண்டுமானால் புதன்கிழமை மட்டும் உரியவரைச் சந்தித்து கதைக்க வேண்டுமாம். அப்படிச் சென்றாலும் மக்கள் கூட்டம் அலைமோதுகின்றது. காலையில் இருந்து காவல் இருந்தாலும் மாலையில் உரியவரைச் சந்தித்து விண்ணப்பப்படிவங்களை எடுத்துக் கொடுத்தாலும் நீங்கள் போங்கள் நாங்கள் அனுப்பி வைக்கின்றோம் என்ற பதில் தான் கிடைக்கின்றது. அதுவும் உரிய நேரத்தில் வந்து சேர்வ தில்லை என்பது மக்களின் கவலை. அத்துடன் வெளிநாட்டில் இருந்து இங்கு வந்து, இவ்வாறான திருத் தங்கள் செய்வதற்கு விண்ணப்பங்கள் சமர்ப் பித்தால் ஒரு சில தினங்களில் சகல வேலை களும் செய்து கொண்டு திரும்பி விடுகிறார்களே அது எப்படி என மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள். இது உரிய அதிகாரிகளுக்குச் சமர்ப்பணம். மக்கள் எல்லோரும் கற்றவர்கள் அல்லர். நேரில் வந்து செல்வதற்கு பணவசதி படைத்தவர்களும் அல்லர். இடம் தெரியாதவர்களும் இருக்கின்றார்கள் என்பதை உரியவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

*திமிலவன், வவுனியா*

## கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# அரசியல் குழப்பத்தால் திண்டாடும் மாலைதீவு

மாலைதீவு அரசியலில் தற்போது இடம்பெற்றுவரும் விடயங்கள் சர்வதேசத்தின் கவனத்தைப் பெரிதும் ஈர்ப்பதாக அமைந்திருக்கின்றன.

மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யாமீன் பயணித்த படகை வெடிகுண்டு வைத்துத் தகர்த்து அவரைக் கொல்ல உடந்தையாக இருந்ததாக சந்தேகிக்கப்படும் குற்றச்சாட்டில் உபஜனாதிபதி அஹமத் அதீப் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில், மாலைதீவின் உபஜனாதிபதி, பாதுகாப்புத் துறை அமைச்சர் , பொலிஸ் ஆணையாளர், தலைநகர் மாலே பிரதேச தளபதி ஆகியோர் தற்போது பதவியில் இல்லை. ஆயிரக்கணக்காண குட்டித் தீவுகளைக்கொண்ட 26 தீவுக்கூட்டங்களைக் கொண்ட மாலைதீவின் அரசியல் நெருக்கடி நிலைமையை பறைசாற்றுவதாக இந்த நிலைமை அமைந்துள்ளது.

சீனாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த 33 வயதுடைய உபஜனாதிபதி அஹமத் அதீப், சனிக்கிழமை மாலைதீவுக்குத் திரும்பியபோது விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

இதனை அந்நாட்டு உள்துறை அமைச்சர் உமர் நஸீரும் தனது டுவிட்டர் பக்கத்தில் 'ராஜ துரோகம்' செய்த குற்றச்சாட்டில் உபஜனாதிபதி அஹமத் அதீப் கைது செய்யப்பட்டதாகக் கூறியுள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் சவூதி அரேபியாவில் மக்கா, மதினாவுக்கு மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யாமீன் தனது மனைவியுடன் புனித பயணம் சென்றிருந்தார்.

பின்னர் டில்லி விமானநிலையம் வந்து அரபிக் கடல் வழியாக செப்ரெம்பர் 28ஆம்திகதி அதிவேக படகின்மூலம் மாலைதீவு திரும்பிக்கொண்டிருந்தார். அப்போது அவரது படகு திடீரென்று கடலில் வெடித்துச் சிதறியது. இதில் ஜனாதிபதி அப்துல்லா யாமீன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். இந்த விபத்தில் காயமடைந்த ஜனாதிபதியின் மனைவி பாத்திமா இப்ராஹிம், டில்லியில் உள்ள இந்திரா காந்தி நினைவு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப் பட்டார்.

ஜனாதிபதிஅப்துல்லா யாமீனைக் கொல்ல சதி நடந்ததாகவும், அதிலிருந்து அவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிவிட் டதாகவும் அந்த நாட்டு உளவுத்துறையினருக்குத் தகவல் கிடைத்தது.

இலங்கையைச் சேர்ந்த விசாரணைக்குழுவும் இதனை உறுதிப்படுத்தியிருந்தது.

1965ஆம் ஆண்டில் பிரிட்டன் காலனித்துவத்திடமிருந்து மாலைதீவு சுதந்திரம் பெற்றாலும் அங்கு ஜனநாயக ஆட்சியென்பது எட்டாக்கனியாகவே இருந்துவருகின்றது. 1978ஆம் ஆண்டுமுதல் 2008ஆம் ஆண்டுவரை மமூன் அப்துல் கையூம் சர்வாதிகார ஆட்சியை நடத்தியிருந்தார்.

அப்போது அந்த நாட்டின் முன்னணி ஊடகவியலாளராக இருந்த மொஹமட் நஸீட், தனது எழுச்சி அரசியல் செயற்பாடுகளின் மூலம் மமூன் அப்துல் கயூமுக்குப் பெரும் நெருக்கடிகளைக் கொடுத்தமை ஈற்றில் புதிய அரசியல்யாப்பின் உருவாக்கத்திற்கும் முதலாவது நேரடி ஜனாதிபதித் தேர்தலுக்கும் வழிகோலியது.

2009இல் பதவிக்கு வந்த நஸீட்டால் தனது பதவிக்காலத்தை முழு மையாக நிறைவு செய்ய முடியவில்லை. அப்போது நஸீட்டின் அரசில் உபஜனாதிபதியாக இருந்த மொஹமட் வாஹிட், நாட்டின் பாதுகாப்புத்துறையின் ஆதரவுடன் நஸீட் டுக்கு கடும் நெருக்கடிகளைக் கொடுத்து பதவி விலகலுக்கு வித்திட்டிருந்தார்.

இதன் பின்னர் நஸீட் பல்வேறு குற்றச்சாட்டுகளை எதிர்நோக்க நேரிட்டு சிறை வைக்கப்பட்டார். சிறையிலிருந்தவாறு 2013ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இடம்பெற்ற தேர்தலில் போட்டியிட்ட நஸீட், முதற்சுற்றில் வெற்றியீட்டியபோதும் அதில் மோசடிகள் இடம்பெற்றதாகக் கூறி பின்னர் நடத்தப்பட்ட இரண்டாம் சுற்றில் நஸீட்டுக்கு எதிரான கூட்டணி வெற்றிபெற்றது.

இதில் முன்னாள் சர்வாதிகார ஜனாதிபதி மமூன் அப்துல் கையூமின் உடன்பிறவா சகோதரர் அப்துல்லா யாமீன் ஜனாதிபதியாகத் தெரிவானார்.

தற்போது அவரைக் கொல்வதற்கு சதி செய்தார் என்ற குற்றச்சாட்டின்பேரிலேயே உபஜனாதிபதி அஹமத் அதீப் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

நாட்டின் தலைமைக்கு விசுவாசமில்லாத அரசியல்வாதிகளாலும் பாதுகாப்புத் தரப்பினராலும் நேரக்கூடிய அபாயங்களை மாலைதீவில் அரங்கேறிவரும் சம்பவங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இந்து சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துமிக்க ஸ்தானத்தில் அமைந்துள்ளமையால் அந்த நாட்டில் இடம்பெறும் அரசியல் காய்நகர்த்தல்களின் பின்னணியில் புவிசார் நலன்களுக்காகப் போராடும் வல்லரசுகளின் கரங்களும் நீண்டிருக்கக்கூடிய சாத்தியங்களை நிராகரித்துவிடமுடியாது.

நான்கு இலட்சத்துக்கும் குறைவான மக்களைக் கொண்டதும், 198 சதுரகிலோமீற்றர்களைக் கொண்டதுமான நாட்டை நிர்வகிப்பதில் இத்தனை சிக்கல்கள் என்றால், அதனை விடவும் பல மடங்கு சனத்தொகையையும் பல மடங்கு பெரும் பரப்பளவையும் கொண்ட நாடுகளில் எத்தகைய சவால்களை எதிர்கொள்ள வேண்டியேற்படும் என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ்க் கைதிகளின் விடுதலை; நச்சு அரசியல் வேண்டாம்

சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதில், அரசுக்கு உள்ளிருந்து கடும் எதிர்ப்புக்கள் கிளம்பியிருப்பதாகத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

அண்மையில் இது தொடர்பாக அமைச்சரவையில் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனால் முன்வைக்கப்பட்ட யோசனை, முக்கிய அமைச்சர்கள் இருவரின் கடும் எதிர்ப்பின் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்த்தரப்பில், முக்கியமாக ராஜபக்ச அணியைச் சேர்ந்தவர்கள், அரசு தமிழர் சார்பில் எடுக்க முனையும் எந்த ஒரு நல்ல செயற்பாட்டுக்கும் முட்டுக்கட்டை போட்டு முடக்கிவிடத் துணிவதில் ஆச்சரியமில்லை. ஏனெனில், அவர்களின் ஆதிக்கம் ஆட்சி பீடத்தில் தகர்க்கப்பட்டு அந்த இடத்தில் மைத்திரி - ரணில் அரசை அமரச் செய்ததில் தமிழ் மக்களுக்குப் பெரும் பங்குண்டு. அதனால் தமிழ் மக்களை எந்தக் வகையிலேனும் பழிதீர்த்துக் கொள்ள அவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு வருகிறார்கள்.

ஆனால் அரசுக்குள்ளேயே சில அமைச்சர்கள் அதே பாணியில் சாக்குப் போக்குக்களை முன்வைத்து தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது அபத்தமானதாகும்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நெடுங்காலமாக சிறைகளில் வாடும் தமிழ் உறவுகளை, தமிழ்த் தலைவர்களும், தமிழ்ப் பத்திரிகைகளும், அரசியல் கைதிகள் என்று குறிப்பிட்டுவரும் நிலையில், பேரினவாதப் பத்திரிகைகள், ஆங்கிலப் பத்திரிகைகள் முதற்கொண்டு, தென்னிலங்கை அரசியல்வாதிகள் மட்டுமன்றி, அமைச்சர்களும் கூட அவர்களை வலிந்து பயங்கரவாதிகள், தமிழீழ விடுதலைப்புலிகள் எனக் குறிப்பிட்டு வெறுப்பை வெளியிட்டு வருகிறார்கள்.

காவலில் உள்ள கைதிகளில் கடும் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் இருப்பார்களாகின், அவர்களை ஏன் இன்னமும் நீதிமன்றத்தில் நிறுத்தாமல் வைத்திருக்கிறார்கள் என்பதற்குச் சரியான பதில் இன்னமும் வெளிப்பட்டதாகத் தெரியவில்லை. பொதுவில் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களிடம் பலவந்தமாகவே வாக்குமூலங்கள் பெறுவது வழக்கம் என்பது பகிரங்க உண்மை. அவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன் றங்களின் முன் நிறுத்தப்பட்ட பலரின் வாக்குமூலங்கள் நிராகரிக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்டிருப்பதும் தெரிந்ததே. அதேவகையில் இவர்களும் விடுதலையாகி விடுவார்களோ என்ற சந்தேகத்தின் காரணமாகவும், அரச அதிகாரிகள் அவர்களை நீதிமன்றங்களின் முன் நிறுத்தத் தயங்குகிறார்களா என்ற கேள்வியும் எழுகின்றது.

தமிழ்க் கைதிகள் விடுதலை செய்யப்படுவதாயின், இராணுவத்தின் மீது போர்க்குற்றம் சுமத்தி அவர்களைத் தண்டிக்க ஏன் முயல்கிறீர்கள் என்பதாக அமைச்சர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார். இராணுவத்தின் மீதான விசாரணைக்கான பொறிமுறையே இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. மேலும்அந்த விசாரணையை இலகுவாக்கவும் விசாரிக்கப்பட இருப்பவர்களுக்காக வாதிட சட்டத்தரணிகளை ஏற்பாடு செய்யவும் கூட சில அமைச்சர்கள் முயன்று வருகிறார்கள்.


ஆனால் தமிழ்க் கைதிகள் போர் முடிந்த காலப்பகுதியில் வெறும் சந்தேகத்தின் பேரில் கைதானவர்கள், விசாரணையின்றி வருடக்கணக்கில் சிறைகளில் வாடுபவர்கள். இவர்களின் நிலையை இனிமேல் விசாரிக்கப்பட இருக்கும் இராணுவத்தினருடன் ஒப்பிட்டு வாதிடுவது நியாயமாகாது. முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போடும் செயல் இது.

அதனாலேயே, இவர்கள் விடயமாக ஜனாதிபதியோடும் பிரதமரோடும் மீண்டும் கலந்துரையாடல் ஒன்றை நடத்தி தீர்க்கமான முடிவொன்றைப் பெற்றுக்கொள்ளத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்புகிறது. தமிழ்க் கைதிகள் விடுதலை விடயத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் ஒரு முடிவை அறிவிப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார் அவ்வாறு அவர் ஒரு முடிவை எடுப்பதற்கு முன்பதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதியைச் சந்தித்து தமிழ் மக்களின் உள்ளக் கிடக்கையைத் தெளிவுபடுத்துவது அவசியம்.

தமிழ் மக்கள் பிரச்சினைவேறு, தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினை வேறு என்ற விதண்டாவாதம் நச்சுத் தன்மை கொண்டது. இரண்டும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவையே. தமிழ்க் கைதிகளின் விடுதலை தேசிய நல்லிணக்கத்துக்கான நல்லதொரு சமிக்ஞையாக அமையும் என்பதை அரசு கனவிலும் மறந்து விடலாகாது.

# தயானின் தகிடு தத்தங்கள்

வி.எஸ். நடராஜா,
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.



பத்திரிகைகளிலும் தொலைக் காட்சிகளிலும் இன்று பரவலாகப் பேசப்படுபவர் தயான் ஜயதிலக. இந்த முன்னாள் இராஜதந்திரி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் நெருங்கிய ஆதரவாளர். ஆனால் ராஜீவ் - ஜே.ஆர். கையெழுத்திட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட முதலாவதும் கடைசியுமான வடக்கு-கிழக்கு இணைந்த மாகாணசபையில் முதலமைச்சர் அண்ணாமலை வரதராஜப் பெருமாள் அமைத்த மந்திரி சபையில் ஓர் அமைச்சராக இருந்தவர்.

இவர் ஓர் அமைச்சராக இருந்தார் என்பதை இன்று எத்தனை பேர் ஞாபகத்தில் வைத்திருக்கிறார்கள்? ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி சார்பில்தான் அவருக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டது.

லேக்ஹவுஸ் வெளியீடுகளான டெய்லி நியூஸ், ஒப்சேவர் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியராக இருந்த மேர்வின் டி சில்வா என்ற மிகப் பிரபலமான ஊடகவியலாளரின் புத்திரரான தயான், சட்டத்துறையில் கலாநிதிப்பட்டம் பெற்றவர். தற்பொழுது கொத்லாவல பாதுகாப்புக் கல்லூரியில் (தற்சமயம் அதுவும் ஒரு பல்கலைக்கழகம்) விரிவுரையாளராகக் கடமைபுரிகின்றார்.

இவர் இளவயதிலிருந்தே அரசியலில் ஈடுபட்ட காரணத்தினால் சர்வதேச சிவில்சேவையில் நியமனம் பெற்றிருக்க சந்தர்ப்பங்கள் இருக்கவில்லை. அதனால் ஆளும் கட்சிகளில் வைத்திருந்த தனிப்பட்ட செல்வாக்குகளினாலும் சர்வதேச சட்டங்கள் பற்றிய அறிவினாலும் ஐக்கிய நாடுகள் சபையில்



இலங்கையின் நிரந்தர பிரதிநிதியாகவும் இறுதிக்காலத்தில் பிரான்ஸ் நாட்டில் இலங்கைத் தூதுவராகவும் கடமை புரிந்துள்ளார்.

ஒரு வருடத்துக்கு முன்பு தொலைக் காட்சிகளில் பிரபலமாக இருந்தது இந்தப் பிரச்சினை. லண்டனில் உள்ள இலங்கைத் தூதுவராலயக் கட்டடத்தில் செய்யப்பட்ட திருத்தப் பணிகளுக்கான ஒப்பந்தத்தை புலிகள் இயக்க ஆதரவாளருக்கு அப்பொழுது லண்டனில் தூதுவராக இருந்த பெண்மணி வழங்கி விட்டார். அதன் மூலம் புலிகள் இயக்கத்தினரு டன் தொடர்பு வைத்துள்ளார் என்ற பெரிய குற்றச்சாட்டை இலங்கையில் ஜே.வி.பியினர் முன்வைத்து தீவிரப் பரப்புரை செய்தனர். அந்தப் பிரச்சினையில் தயான் ஜயதிலகவின் நடவடிக்கைகள் அந்தப் பெண் மணியையும் (தூதுவரை) அப்போதைய ஜனாதிபதி மகிந்தவையும் அரசையும் சிக்கல்களில் மாட்ட வைத்தன.

இருந்தாலும் காலகதியில் தயான், மகிந்தவின் தீவிர ஆதரவாளரானார். இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் உருவாக்கப்பட்ட புதிய நாடாளுமன்றத்தில் தேசியப்பட்டியல் மூலம் நுழைவதற்கு மகிந்த, தயானின் பெயரை பரிந்துரை செய்திருந்தார். ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால தயானின் பெயரை நிராகரித்தார். உலகளாவிய ரீதியில் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து அறிக்கை விடும் இந்தக் கனவான் ஏனோ தற்சமயம் மகிந்தவின் பிடியில் சிக்கியுள்ளார்.

1989இல் இந்திய அமைதிப்படையை இலங்கையிலிருந்து வெளியேற்றுவது என்ற தனது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே பிரேமதாச-புலிகள் பேச்சு கொழும்பில் நடைபெற்றது. நாங்கள் அண்ணன் - தம்பி (ஐயா - மல்லி) ஒன்று சேர்ந்து இந்தியனை நாட்டை விட்டு வெளியேற்றுவோம் என்ற பின்னணியுடன் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம், தயான் கொழும்பு பிரதான வீதியில் ஒரு கட்டடத்தில் நடைபெற்ற முஸ்லிம் வாலிபர் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் "பிரேமதாச தாம் இந்தப் பேச்சில் வெற்றிபெற்றால் நாட்டின் இராணுவத் தளபதியாக புலிகளின் தலைவர் பிரபாகரனையே நியமிக்க உத்தேசித்துள்ளேன்" என்று தன்னிடம் கூறினார் என இந்தத் தயான் மக்கள் மத்தியில் பேசினார். இவரது இந்தக் கூற்று எவ்வளவு தூரம் உண்மையென எவருக்கும் தெரியாது. ஆனால் அது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

இன்று இந்தத் தயானின் உண்மை நிலை என்ன? தற்போதைய அரசியல் நிலை குறித்து அவர் இப்படிக் கூறுகிறார்:

"1977இல் சுதந்திரக் கட்சியைவிடக் கூடுதல் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்றிருந்த காரணத்தினால் அ.அமிர்தலிங்கம் எதிர்க் கட்சித் தலைவரானார். எனினும் அதன் மூலம் நாட்டுக்குத் தீங்குதான் (1983இல் நடந்த கலவரத்தின் காரணம் அதுதான் என்கிறாரோ) விளைந்தது. ஆனால் தற்சமயம் சுதந்திரக்கட்சிக்கு 95 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களுள் அரசில் இணைந்தவர்களைக் கழித்துப் பார்த்தாலும் 50க்கும் அதிகமான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அந்த வகையில் பார்த்தால் எதிர்க்கட்சித் தலைவர் பதவி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியைச் சேர்ந்த ஒருவருக்கே வழங்கப்பட்டிருக்க வேண்டும். அரசின் பங்காளிக் கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்க முடியாது என்ற வாதமும் இங்கு செல்லுபடியற்றது. ஏனெனில் கடந்த ஜனவரியில் நடைபெற்ற ஆட்சி மாற்றத்தின் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நல்லாட்சி அரசின் பங்காளியாக மாறியுள்ளது. அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனியான நிர்வாக அலகு அல்லது சமஷ்டியை வலியுறுத்தி வரும் ஒரு கட்சியாகும். அந்த வகையில் நாட்டின் அரசியல் அமைப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படிப்பட்ட ஒரு கட்சிக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவி வழங்குவது ஜனநாயகத்தையே கேலிக்கூத்தாக்கி விடும். அத்துடன் நாட்டின் இறையாண்மைக்கும் ஆபத்தை ஏற்படுத்தி விடும்" - என்று கூறியுள்ளார்.

ஜெனிவா பரிந்துரைகளையும் இலங்கை அரசு நிராகரிக்க வேண்டும் என்கிறார் அவர். "சர்வதேச நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றம் ஒன்றின் ஊடாக விசாரணை நடத்து வது ஜனநாயகத்தைப் பெரியளவில் மீறும் செயல். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் விசாரணை அறிக்கை வித்தியாசமானது. உலகில் வேறு எந்தக் நாட்டுக்கும் செய்யப்படாத பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. நாம் அவற்றுக்கு அடிபணிய வேண்டியதில்லை' என்கிறார். "இந்தத் தீர்மானத்தை நிராகரிக்கும் இயலுமை அரசுக்கு இருக்க வேண்டும். காலனித்துவ ஆட்சிக்காலத் தில் போன்று சர்வதேச நீதிபதிகளைக் கொண்டு வழக்கு விசாரணை செய்யமுடியாது. இவ்வாறு வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டு இலங்கையில் விசாரணை நடத்தினால் அது நாட்டின் இறைமையை மோசமாகப் பாதிக்கும். எமது வெளிவிவகார அமைச்சர் ஐக்கிய நாடுகள் சபையில் ஆற்றிய உரையை ஏற்றுக்கொள்ள முடியாது" எனவும் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதாக மங்கள சமரவீர உறுதியளித்துள்ளார் என்றும், அவ்வாறு செய்வதன் மூலம் தற் பொழுது கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடு தலைப்புலி உறுப்பினர்களை விடுதலை செய்ய நேரிடும் எனவும் இந்த முன்னாள் வடகிழக்கு மாகாணசபை அமைச்சரும் ஈபிஆர்எல்எவ் சார்பில் அந்தப் பதவியைப் பெற்றவருமான தயான் ஜயதிலக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில்:ரஜீவன்

# இலங்கையின் போர்க்குற்றங்கள்

சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் நிறைவேற்று இயக்குநர் பிரட் அடம்ஸ், சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கியுள்ள பேட்டியின் மொழியாக்கம்

ஐக்கியநாடுகள் மனித உரிமை சபையில் இலங்கை குறித்து தீர்மானமொன்றைக் கொண்டு வருவதற்கு அமெரிக்க நிர்வாகத்தைச் சேர்ந்த பலர் எதிர்ப்பைத் தெரிவித்தனர். எனினும் இலங்கைக்கான முன்னாள் தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக் இலங்கை குறித்து தீர்மானமொன்றைக் கொண்டு வர வேண்டும் என்பது குறித்து உறுதியாகக் காணப்பட்டார். முன்னைய அரசு நல்லிணக்கம் குறித்து நேர்மையான விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தால் அமெரிக்கா - இலங்கையில் நீதி நிலை நாட்டப்பட வேண்டும் என்ற வேண்டுகோளைக்கூட கைவிட்டிருக்கும். அமெரிக்க நிர்வாகத்தில் பல சக்திகள் உள்ளன. சிலருக்கு இது பிடிக்கவில்லை. இலங்கை குறித்துத் தீர்மானம் கொண்டுவரப்படுவதைக் கூட அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் இந்தியா குறித்தும், சீனா பற்றியும் கவலை கொண்டிருந்தனர். சீனாவின் பங்களிப்புக் குறித்துக் கவலை கொண்டிருந்தனர். இலங்கை விவகாரத்தை சீனாவை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் சிலர் அமெரிக்க நிர்வாகத்தில் உள்ளனர். இலங்கை குறித்து ஐக்கிய நாடுகளில் தீர்மானத்தைக் கொண்டு வருவது, இலங்கையுடனான அமெரிக்க அரசின் உறவை பலவீனப்படுத்தப் போகின்றதா? சீனாவின் ஆதிக்கம் அதிகரிக்க வழிகோலப்போகின்றதா? என அவர்கள் சிந்திப்பது வழமை. இந்த முயற்சிகள் பயனளிக்கப்போவதில்லை எனக்கருதும்சிலரும்உள்ளனர். ஒபாமா நிர்வாகத்தில் உள்ள சிறுபான்மையினர் மாத்திரம் இலங்கை குறித்துத் தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டும் எனக் கருதினர். இந்த நிலை மாறுவதற்கு, அமெரிக்காவின் கொள்கை மாறுவதற்கு காரணமாக இருந்தவரான ரொபேர்ட் ஓ பிளேக், (இலங்கைக்கான முன்னாள் தூதுவர்). ராஜபக்ச அரசுக்கு அவகாசம் வழங்கத் தீர்மானித்தார். ராஜபக்ச அரசு பொய் சொல்கின்றது என அவர் உணர்ந்த வேளையே, நீதி வழங்குவது குறித்து மாத்திரமல்ல, நல்லிணக்கம் குறித்தும் அவர் இலங்கை குறித்துத் தீர்மானத்தை வலியுறுத்தினார். இலங்கை அரசு நல்லிணக்க விடயங்களில் சிறப்பாகச் செயற்பட்டிருந்தால் அமெரிக்கா நீதி நிலை நாட்டப்பட வேண்டும் என்ற தனது கோரிக்கையைக் கைவிட்டிருக்கும். அவர்கள் நாங்கள் முன்னோக்கி நகர்வோம், இலங்கை முன்னோக்கிச் செல்கின்றது, சமூகங்களுக்கு இடையிலான உறவுகள் குறித்து அவர்கள் கவனம் செலுத்துகின்றனர், தமிழ் சமூகத்தில் அது முதலீடு செய்கின்றது, தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவத்தை அது அகற்றுகின்றது, அது அவர்களது நிலங்களைத் திரும்பக் கையளிக்கிறது. தமிழ் மக்கள் உரிய முறையில் பிரதிநிதித்துவப்படுத்தப் படுவதற்கான அரசியல் கட்டமைப்புகளை அது உருவாக்குகின்றது என அமெரிக்க அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். நடந்தது நடந்து விட்டது என ரொபேர்ட் பிளேக்கும், அமெரிக்க அதிகாரிகளும் குறிப்பிட்டுள்ளனர். தனக்குப் பொய் சொல்கிறார்கள் என பிளேக் உணர்ந்தார். இது நீதி நிகழ்ச்சி நிரலை மீண்டும் முன்னிலைக்குக் கொண்டு வந்தது. அவர் உதவி இராஜாங்கச் செயலாளர் பதவிக்கு வந்ததும் கொள்கை அளவில் ஏதாவது செய்யக்கூடிய வலிமையான நிலையில் அவர் காணப்பட்டார். அவர் அதற்கான கடும் முயற்சிகளை மேற்கொண்டார். மக்களுக்குப் பொய் சொல்வது சிறந்த விடயமல்ல என அவர் கருதியிருக்கக்கூடும்.



## பொறுப்பேற்பது யார்?

### வெள்ளைக்கொடி விவகாரம்

வெள்ளைக்கொடி விவகாரம் இடம் பெற்றிருக்கா விட்டால் இலங்கையில் போர் முடிவடைந்த விதம் குறித்த விவாதங்களில் பெரிய மாற்றங்கள் இருந்திருக்கும். விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தை அழித்து அவர்கள் விசாரணைகளை எதிர்கொள்ளாத நிலையை உருவாக்கியதே இலங்கையின் முன்னாள் அரசு செய்த பெரிய தவறாகும். விடுதலைப் புலிகளை நீதியின் முன்நிறுத்தியிருக்கலாம். அரசு சரியான தரப்பு என நிரூபித்திருக்கலாம். நீதி நிலை நாட்டப்பட்டிருக்கும், நிலை நாட்டப்பட்டுள்ளது என்ற தோற்றப்பாடு ஏற் பட்டிருக்கும். அவர்கள் விசாரணையை எதிர்கொள்வதையே நான் விரும்புகிறேன். அவர்கள் செய்த பல விடயங்கள் தெரிய வந்திருக்கும். ஆனால் அரசு மாறாக அவர்களைக் கொலை செய்யத் தீர்மானித்தது. இலங்கை அரசு தற்போது ஏற்படுத்தவுள்ள நீதிப் பொறிமுறை, குறிப்பிட்ட எண்ணிக்கையான வழக்குகளையே விசாரிக்க வேண்டும். பல நாடுகளின் அனுபவங்கள் அவ்வாறானதாகவே உள்ளன. உங்களால் முழுநாட்டையும் விசா ரணை செய்ய முடியாது. குற்றமிழைத்த அனைத்துப் படைவீரர்களையும் விசாரிக்க முடியாது. அவ்வாறு செய்தால் விசாரணைகள் முடிவுக்கு வராது. போருக்கான அரைவாசிக் காரணத்தை நேர்மையான விமர்சகர்கள் எவரும் விடுதலைப்புலிகள் மீது சுமத்தாமல் விடமாட்டார்கள். நாங்கள் அவர்களைப் பார்த்திருந்தால் அது நன்றாக இருந்திருக்கும் எனக் கருதுகிறேன். அவர்களது தலைமை நீதியின் முன் நிறுத்தப்பட்டிருந்தால் அது சிறப்பானதாக இருந்திருக்கும் எனக் கருதுகிறேன். நாங்கள் எப்போதும் விடுதலைப் புலிகளை விமர்சித்திருந்தோம். அவர்கள் எங்களை அச்சுறுத்தும் அளவுக்கு நான் லண்டனில் உரையாற்றுகின்ற கூட்டங்களில் புலம்பெயர்ந்த தமிழர்கள் எனக்கு எதிராக கோஷமிடுவார்கள். 2008 இல் நாங்கள் போரை விமர்சித்த பின்னரே இலங்கை அரசு எங்களை விமர்சிக்க ஆரம்பித்தது. நாங்களும் மனித உரிமை அமைப்புகளும் விடுதலைப்புலிகளை விமர்சித்ததால் ராஜபக்ச அரசு எங்களை நேசித்தது. அமைச்சர் மகிந்த சமரசிங்க மற்றும் இலங்கை இராஜதந்திரிகள் நன்றி அடம்ஸ் என தெரிவிப்பார்கள். எனினும் பின்னர் அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை நாங்கள் அதே கொள்கை அடிப்படையில் விமர்சித்தபோது அவர்கள் அதனை விரும்பவில்லை. போர் முடிவடைந்த பின்னர் குறிப்பிடத்தக்க ஆர்வம் காணப்பட்டது. ஏனெனில் இலங்கையில் அவ்வாறான கடும் அரசியல் சூழல் காணப்பட்டது. இலங்கையே இதனை அரசியல் மயப்படுத்தியது. அதுநாட்டைத்துருவமயப்படுத்தியது. போரின் பலாபலன்கள் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் காணப்பட்டன. போர் நடத்தப்பட்ட விதம் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் காணப்பட் டன. பெருமளவு பொது மக்கள் கொல்லப்பட்டதால் என்ன செய்வது? என்பது குறித்து சர்ச்சை காணப்பட்டது. ராஜபக்ச அரசு அந்தக் குற்றச் சாட்டை ஏற்றுக்கொள்ள மறுத்தது. உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை என மகிந்த ராஜபக்ச அரசு பல வருடங்களாக தெரிவித்து வந்தது. கேலிக் குரிய விடயங்களை மீண்டும்மீண்டும்தெரிவிக்கும்போது சிரிக்கத்தான் தோன்றுகின்றது. இது சர்ச்சையை உருவாக்குகின்றது. அவர்கள் பொறுப்புணர்வுள்ள அரசாக இருந்திருந்தால் பெருமளவு உயிரிழப்புக்கள் ஏற்பட்டதை அவர்கள் எற்றுக் கொண்டிருக்க வேண்டும். விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் என்பது சகித்துக்கொள்ள முடியாததாகக் காணப்பட்டது. போரின் மிகவும் மோசமான தருணத்தில் கூட, அவர்கள் அனைத்து நம்பகத் தன்மையையும் இழந்திருந்தனர். அவர்கள் செயற்படும் விதம் காரணமாக அவர்களது அரசியல் கோரிக்கை குறித்து நான் அக்கறை கொள்ளவில்லை. எங்களால் அவர்களது அரசியல் கோரிக்கைகளை அவர்களது செயற்பாடுகளில் இருந்து பிரித்துப் பார்க்க முடியாத நிலை காணப்பட்டது. அவர்கள் சர்வாதிகாரப் போக்குடன் செயற்படுவது குறித்து நான் எப்போதும் அவர்களை விமர்சித்து வந்தேன். அவர்கள் எதேச்சாதிகார அல்லது ஒடுக்குமுறை அமைப்பல்ல. மாறாக பிரபாகரன் செல்ல விரும்பிய வழியில் மக்களை மூளைச்சலவை செய்து கட்டுப்படுத்திய சர்வாதிகாரக் குழு.

அனைத்து மக்களதும் கரிசனைகளைத் தீர்ப்பது கடினம். இருதரப்புக்களும் நடந்தவைகளுக்குப் பொறுப்பு ஏற்பதே பல நாடுகளில் இடம்பெற்றுள்ளன. நடந்ததை ஏற்றுக்கொள்ள வேண்டும். நட்ட ஈடுகளை வழங்க வேண்டும். நினைவு நிகழ்வுகளை நடத்தவேண்டும். இதன்மூலம் தனிப்பட்ட நீதி கிடைக்காதவர்கள் தங்களுக்கு ஏதோ ஓர் அங்கீகாரம் கிடைத்ததாக உணர்வார்கள். மகிந்த ராஜபக்ச அரசின் கீழ் வெற்றி பெற்ற வர்களின் நீதி மாத்திரமே காணப்பட்டது. வெற்றி பெற்றவர்களின் கதைகள் மாத்திரம் முக்கியத்துவம் பெற்றதே போரின் பின் இடம் பெற்ற மோசமான விடயமாகும். புதிய நீதி நடைமுறை பல கதைகள் சொல்லப்படுவதற்கு வழிவகுக்கும். அரசு நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளது. அது வெற்றி பெற்றவர்களுக்கான நீதியல்ல. அனைத்து மக்களுக்குமான வெற்றியாகும்.

**உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என மகிந்த ராஜபக்ச அரசு பல வருடங்களாகத் தெரிவித்து வந்தது. கேலிக்குரிய விடயங்களை மீண்டும் மீண்டும் தெரிவிக்கும்போது சிரிக்கத் தான் தோன்றுகின்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3 | | 5 | | | |
| | 5 | 2 | | 7 | | 4 | 3 | |
| 7 | | | | | | | | 1 |
| | | 6 | 4 | | 7 | 9 | | |
| | | | 9 | | 3 | | | |
| | | 4 | 8 | | 1 | 7 | | |
| 4 | | | | | | | | 2 |
| | 8 | 3 | | 1 | | 6 | 9 | |
| | | | 5 | | 8 | | | |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 8 | 4 | 3 | 7 | 5 | 2 | 6 | 1 |
| 1 | 7 | 5 | 4 | 2 | 6 | 9 | 8 | 3 |
| 3 | 6 | 2 | 1 | 8 | 9 | 5 | 7 | 4 |
| 4 | 2 | 8 | 6 | 9 | 3 | 7 | 1 | 5 |
| 7 | 3 | 9 | 5 | 1 | 8 | 4 | 2 | 6 |
| 6 | 5 | 1 | 7 | 4 | 2 | 8 | 3 | 9 |
| 2 | 9 | 6 | 8 | 5 | 1 | 3 | 4 | 7 |
| 5 | 1 | 7 | 2 | 3 | 4 | 6 | 9 | 8 |
| 8 | 4 | 3 | 9 | 6 | 7 | 1 | 5 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## சிறுநீரகக்கற்களைக் கரைக்கும் ஒரே நாள்மருத்துவம்

"சத்திரசிகிச்சை செய்து கொண்டால் மருத்துவப் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படும்" என்று எமது உடலில் தோன்றும் பல பிரச்சினைகளுக்கும் மருத்துவர்கள் பரிந்துரை செய்கிறார்கள். இதற்குச் சிறுநீரகத்தில் கற்கள் உருவாகும் பிரச்சினையும் விதிவிலக் கல்ல. அவ்வாறு சத்திரசிகிச்சை செய்து சிறு நீரகக் கற்களை நீக்கிவிட்டாலும், திரும்பக் கற்கள் உருவாவதும், மீண்டும் அதற்குச் சிகிச்சை எடுத்துக் கொள்வதும், வழக்கமாக நடந்து கொண்டு தான் இருக்கிறது. நிரந்தரமாகச் சிறு நீரகக் கற்களைச் சத்திரசிகிச்சை இன்றிக் கரைப்பதற்கு ஒரு வழி இருக்கிறது. அது மிக எளிமையான வழியும் கூட. இதற்கு 'பீன்ஸ் வைத்தியம்" என்று பெயர். பீன்ஸ் என்றால் சோயா பீன்ஸ் என்று புரிந்து கொள்ள வேண்டாம். ஆங்கிலக் காய்கறி என்று சொல்லக் கூடிய பீன்ஸ். சிறுநீரகத்தில் கற்கள் இருப்பதாகக் கூறுபவர்கள் கீழ்கண்டவாறு கடைப்பிடித்தால் ஒரே நாளில் கற்கள் கரைந்து குணமடைந்து விடுவார்கள். பின்னர் "ஸ்கான்" செய்து அங்கு கற்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். அரைக்கிலோ பீன்ஸ்சை எடுத்து அதில் உள்ள விதைகளை எல்லாம் நீக்கிவிட்டுப் பொடியாக நறுக்கிக் கொள்ள வேண்டும். ஒரு பாத்திரத்தில் இரண்டு லீற்றர் தண்ணீரை எடுத்து நறுக்கிய பீன்ஸ்சை அதில் போட்டு அடுப்பில் வைக்க வேண்டும். இளம் தீயாக எரிய விடவேண்டும். அதாவது தீ கொஞ்சம் தான் எரிய வேண்டும். நெருப்பு மிதமாக அதிலிருந்து வெளிப்படுமாறு வைத்துக்கொண்டு பீன்ஸ்சை வேக வைக்க வேண்டும். சீக்கிரமாக அது வேகாமல் இவ்வாறு இரண்டு மணிநேரம் கழித்து வெந்திருக்கக் கூடிய பீன்ஸையும், நீரையும் சேர்த்து மிக்சியில் போட்டு நன்கு கூழ்போல் அரைத்து ஆறிய பின்னர் குடிக்க வேண்டும். இந்த பீன்ஸ் கூழைக் குடித்தவுடன் அந்தக் கணத்திலிருந்து மூன்று மணி நேரத்துக்குள் மூன்று லீற்றர் தண்ணீரைக் குடித்து விட வேண்டும். ஒரு மணி நேரத்துக்கு ஒரு லீற்றர் எனும் அளவில் சிறிது சிறிதாக தண்ணீர் குடித்து விட வேண்டும். இவ்வாறு 3 மணி நேரத்துக்குள்ளே 3 லீற்றர் தண்ணீரைக் குடித்து முடிக்க வேண்டும். அதன் பின்னர் சிறுநீர் கழிக்கும் பொழுதெல்லாம் அதை ஒரு பாத்திரத்தில் சேகரித்து வைத்துக் கொண்டு கற்கள் அதில் வந்திருக்கிறதா? எனப் பார்க்க வேண்டும். எப்படியும் அன்று இரவுக்குள் சிறு நீரகக் கற்கள் வெளியே வந்து விடும். அதுவரை வேறு எந்த உணவுகளும் எடுத்துக் கொள்ளக் கூடாது. அதன் பின்னர் மூன்று மணி நேரத்துக்குப் பின் சாதாரணமாய்க் குடிக்கும் நீரை விடச் சற்று அதிகமாகக் குடித்துக் கொண்டே இருக்கவேண்டும். இந்தச் சிகிச்சையை மேற்கொள்ளும் பொழுது அன்று முழுவதும் ஓய்வாக இருக்க வேண்டும். வேறு எந்த வேலையையும் செய்யக் கூடாது. கண்களை மூடிப் படுத்துக் கொண்டு நன்கு ஓய்வாகவும், உடலும், மனதும் தளர்வாக இருக்கும்படியும் பார்த்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட வழிமுறைகளுடன் செய்தால் சிறுநீரகக்கற்கள் கண்டிப்பாகக் கரைந்து விடும்.

### நாளை

**ஐப்பசி-11**
**புதன்கிழமை**
**28.10.2015**
**திதி:**
பிரதமை:பி.ப.4.12வரை
**நட்சத்திரம் :**
பரணி: மு.இ. 11.37வரை
**சுபநேரம்:**
4.33–6.30 வரை
**இராகு காலம்:**
12.03–1.33வரை

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 60 | 40 | 60 | 60 | 60 | 60 | 30 |
| கத்தரி | 90 | 100 | 110 | 100 | 60–80 | 120 | 80 | 60 |
| கரட் | 70 | 70 | 60–140 | 80 | 100–160 | 200 | 100 | 120 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 40 | 60 | 50 | 20–30 |
| பயிற்றை | 90 | 100 | 120 | 80 | 120 | 160 | 100 | 100 |
| பாகல் | 180 | 150 | 280 | 160 | 180 | 100 | 110 | 160 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 80 | 60 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 140 | 140 | 120 | 160 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 120 | 140 | 100 | 200 | 100 | 120 |
| பூசணி | 40 | 50 | 60 | 50 | 40 | 80 | 50 | 50 |
| தக்காளி | 80 | 90 | 100 | 100 | 100 | 140 | 80 | 80 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 50 | 60 | 80 | 60 | 40 |
| கீரை | 30 | 50 | 40 | 50 | 30 | 40 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 20 | 30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 300 | 300 | 300 | 240 | 280 | 600 | 250 | 280 |
| புடோல் | 50 | 90 | 60 | 50 | 80 | 80 | 60 | 60 |
| கோவா | 80 | 90 | 80 | 80 | 100 | 140 | 100 | 70 |
| வெண்டி | 100 | 80 | 80 | 100 | 100 | 80 | 50 | 40 |
| போஞ்சி | 120 | 160 | 180 | 140 | 160 | 200 | 160 | 120 |
| லீக்ஸ் | 90 | 80 | 100 | 80 | 80 | 120 | 80 | 60 |
| தேங்காய் | 50 | 55 | 50 | 60 | 60 | 60 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 110 | 100 | 120 | 120 | 100 | 100–120 |
| தேசிக்காய் | 300 | 400 | 300 | 300 | 340 | 400 | 200 | 350 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 10 | 40 | 20 | 15 | 08 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 | 140 | 200 | 200 | 120 | 150–180 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | 80 |
| முருங்கைக்காய் | 120 | 100 | 120 | 60 | 120–130 | 200 | 120 | 100 |

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 400 | 800 | 600 | 500 |
| நண்டு | 300 | 400 | 250 | 400 | 300 | 450 |
| கணவாய் | 500 | 600 | 500 | 600 | 600 | – |
| பாரை | 100 | 300 | 400 | 500 | 400 | 350 |
| சுறா | 400 | 500 | – | 600 | 600 | 450 |
| சீலா | 250 | 300 | 300 | 400 | 350 | 250 |
| விளை | 400 | 400 | 300 | 450 | 400 | 300 |
| முரல் | 250 | 250 | 250 | 300 | 300 | – |
| கும்பிளா | 250 | 250 | 250 | 350 | 200 | 150 |
| கிழாக்கன் | 350 | 800 | – | 400 | – | – |
| ஒரா | 300 | 250 | 300 | 400 | – | 200 |
| திரளி | 200 | 200 | 100 | 300 | 200 | – |
| நகரை | 150 | 200 | 60 | 300 | – | – |
| சூடை | 150 | 100 | 50 | 100 | 50 | 50 |
| ஒட்டி | 200 | 150 | 200 | 300 | 200 | 200 |
| திருக்கை | 150 | 200 | 150 | 350 | 100 | 100 |
| பாலை | 300 | 200 | 250 | 400 | 300 | – |
| வாளை | 100 | 100 | 250 | 300 | 200 | – |
| கொய் | 100 | 100 | 50 | 120 | 50 | – |
| மதனம் | 150 | 200 | 100 | 250 | – | 150 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### எழுந்து தைரியமாக நில்லுங்கள்

எழுந்து தைரியமாக நின்றால், உனது விதியை நீயே நிர்ணயிப்பாய்.

கிடைக்கும் பயனை அளந்து பார்க்கும் நண்பர், அன்பைக் கொள்ளாமல் பொருளை மட்டும் கொள்ளும் விலைமகள் போன்றவர் ஆவார். அவருடைய நட்பை ஏற்றுக் கொள்ளாதீர்கள்.

எம்மைப் பற்றிச் சிந்திக்காமல், மற்றவர்களுடைய நன்மையைக் குறித்துச் சிறிதளவு நினைத்தால் கூடப் போதுமானது. இந்தச் சிந்தனை சிங்கத்துக்குச் சமமான ஆற்றலை எமது இதயத்துக்குப் படிப்படியாகத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடி சோதிடம்



(கிரகாரத்துவங்கள் குறித்த விளக்கத்தில் சந்திரன் மற்றும் செவ்வாய் குறித்து நேற்றைய உதயனில் பார்த்தோம். அதன் தொடர்ச்சி இன்றைய உதயனில் பிரசுரமாகின்றது.)

**புதன்:** கல்வி, அறிவு, வணிகம், பேச்சுத்திறன், நிலபுலன், கணக்கர், கணிதம், பத்திரிகைத் தொழில், நண்பன், இளைய சகோதரி, சகோதரன், தாய் மாமன், காதலி, காதலன், சட்டம், கைகள், கழுத்து, வரவேற்பு அறை, உள்ளங்கை, சோதிடம், தொலைபேசி, புலனாய்வுத் துறை, தரகு, மகாவிஷ்ணு, தூதரகப்பணி.

**குரு:** ஜீவன், வேதம், பக்தி, ஞானம், ஒழுக்கம், கோவில், வழக்கறிஞர், நீதிபதி, உயர்குலம், ஆசிரியர், கௌரவம், சாந்த குணம், தெற்கு, சதை, தொடை, பூசை அறை, பசு, அமைச்சர், நிர்வாகி, மூக்கு, கரும்பு, வாழை, சோதிடம், நீதித் துறை, தட்சணாமூர்த்தி.

**சுக்கிரன்:** மனைவி, சகோதரி, காமம், காதல், பாடகன், நடிகன், வீடு சுகம், வாசனைத் திரவி யங்கள், வட்டித் தொழில், மதுபானம், ஆடை ஆபரணங்கள், மலர், திருமணம், பணம், இனிப்பு, சிறுநீரகம், கேளிக்கை விடுதி, துணிமணிகள், பிரம்மா, மகாலட்சுமி, மூத்த சகோதரி, மூத்த மருமகள்.

**சனி:** மூத்த சகோதரன், சேவகன், கழுதை, எருமை, தொழில்காரகன், தாடை, பிட்டம், பூட்டு, ஜீரண உறுப்பு, சேமிப்பு அறை, சாப்பாட்டு அறை, சாலை, வாயு சம்பந்தமான நோய், நிலக்கரி, சோம்பேறித்தனம், பிச்சை எடுத்தல், தொழிற்சாலையில் எடுபிடி வேலை, ஹோட்டல் சுத்தம் செய்யும் வேலை, பழைய பொருள் விற்பனை, துப்புரவுத் தொழில், கால்நடை வளர்த்தல், லட்சுமி, பரமசிவன், கர்மா, அரச தூதுவர்.

**ராகு:** வாய், உதடு, காது, முஸ்லிம், கோபுரம், அகலமான வீதி, தகப்பன் வழிப் பாட்டன், தலை, நிழல், மாயை, குடை, பாம்பின் தலை, கடத்தல் தொழில், உலர்ந்த தோல், பிளாஸ்டிக், இரசாயனம், மொட்டை மாடி, சேமிப்புக் கிடங்கு, விதவை, தொழுநோய், மருத்துவம், வெளிநாட்டு வர்த்தகம், விபச்சாரம் செய்தல், வாகனம் ஓட்டுதல், சினிமாத் தொழில், போகக்காரகன்.

**கேது:** சாயா கிரகம், மோட்ச காரகன், கயிறு, நூல், கூந்தல், மூலிகை, பாம்பின் வால், குறுகிய சந்து, மருத்துவம், சோதிடம், ஆன்மிகம், சட்டத்துறை, துறவறம், தாய்வழிப் பாட் டன், நரம்பு, குளியல் அறை, ஞானம், தவம், மனவெறுப்பு, கொலை செய்தல்.

**இராசி காரகங்கள்:**
ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு குணாதிசயங்கள் இருப்பதுபோலவே, ஒவ்வொரு ராசிக்கும் சிற்சில தனிப்பட்ட குணாதிசயங்கள் இருக்கின்றன. இவற்றை அந்த ராசிக் குரியகாரகங்கள் என்று சோதிடர்கள் விளிப்பார்கள். எந்த ராசிக்கு என்னென்ன காரகங்கள் என்பதைப் பார்க்கலாம்.

**மேடம்:**
முட்செடிகள், மலை, சிறு காடு, போர்க்களம், நெருப்புள்ள பகுதி, கள்வர்கள் வாழும் பகுதி, பகலில் காடு, இரவில் ஊர் அதிகவாசி, சிவப்பு நிறம், அரசு, தலைப்பாகம், இராணுவம், தீயணைப்புத் துறை, தொழிற்சாலை, விவசாயம்.

**இடபம்:**
மாட்டுத் தொழுவம், பழங்கள், வெண்மை நிறம், உணவுத் தானியங்கள், முகம், வயல்வெளி, தச்சுப்பட்டறை, பெண், வெள்ளி, இரத்தினக் கற்கள், வியாபாரம், வட்டித் தொழில், கால்நடை வளர்ப்பு, கலைப் பொருள்கள், வாசனைப் பொருள்கள், திரைப்படம், கவிதை, பாட்டு, தங்கும் விடுதி.

**மிதுனம்:**
வியாபார ஸ்தலம், பெரிய மண்டபம், சூதாட்ட ஸ்தலம், நகரங்கள், கடலுக்கு அண்மைய இடம், பாடசாலை புத்தகப்பை வைக்கும் இடம், செய்தி மற்றும் தகவல் தொடர்புத்துறை, விண்வெளித்துறை, கல்வித்துறை, நிதித்துறை, சோதிடம், வியாபாரம், எழுத்துத்துறை, மேடைப்பேச்சு.

**கடகம்:**
நீர்நிலை, ஆறு, குளம், குளியல் அறை, வயல் சார்ந்த இடம், முத்து, சங்கு, திரவப் பொருள்கள், ஏற்றுமதி, இறக்குமதி வேளாண்மைத் தொழில், சோதிடம், மருத்துவம், போக்குவரத்துத் துறை, கல்வித்துறை, கலைத்துறை, பால் விற்பனைத் தளம், தெய்வஸ்தலம், இளஞ்சிவப்பு நிறம்.

**சிங்கம்:**
அரண்மனை, அலுவலகம், குகை, உயரமான பகுதி, விலங்குகள் வசிக்கும் இடம், வயிறு, அரச உத்தியோகம், அரசியல் நிர்வாகப் பொறுப்பு, இரும்பு மற்றும் நெருப்பு சம்பந்தமான தொழில், பொறியியல் துறை, அறுவைச் சிகிச்சை மருத்துவர், சமூக சேவை செய்தல், தர்ம ஸ்தாபனம் நடத்துதல்.

**கன்னி:**
புத்திசாலித்தனம், கூர்மையான அறிவு, பெரிய வியாபார ஸ்தலம், படரும் கொடிகள், கல்விச் சாலை, சாம்பல் நிறம், இடுப்பு, பூந்தோட்டம், நகரம், கணக்கர், தணிக்கையாளர், பலவித வியாபாரம், ஆசிரியர், எழுத்தர், மளிகைக்கடை, தானிய சேமிப்புக் கிடங்கு.

**துலாம்:**
வியாபார வீதி; பணம் வைக்கும் இடம், பெண்கள் குழுமியுள்ள இடம், மனிதன் துலாக்கோலைப் பிடித்து இழுக்கும் தோற்றம், பலதரப்பட்ட நிறம், அடி வயிற்றுக்கு மேலுள்ள வயிற்றுப்பகுதி.

**விருச்சிகம்:**
முட்கள், கற்கள் நிறைந்த பகுதி, விஷ ஜந்துகள் வாழும் பகுதி, கிராமம், பள்ளத்தாக்கு, தொழிற் சாலைப் பகுதி, இரும்பு, நெருப்பு சம்பந்தமான தொழில், மின்னியல் துறை, சோதிடம், ஆன்மிகம், ஆராய்ச்சி செய்தல், தாதுப்பொருள்கள் சம்பந்தமான தொழில்.

(தொடரும்)

# பெண்மையைப் போற்றுவோம்




பெண்களது சிறப்புக்கள் பற்றியும், பெண்கள் செய்த சாதனைகளையும் அதற்காக அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பாராட்டியும் பேசப்படுகிறது. ஆனால் சாதிக்க நினைத்தவர்களையும், அதற்கு அவர்கள் முயற்சிகள் எடுத்தபோதிலும் பல்வேறு தடைகளும், இடர்களும் வந்து சாதிக்க முடியாமல் போனதைப் பற்றியும் எவரும் நினைத்துப் பார்ப்பதில்லை. அவ்வாறு பாதிக்கப்பட்ட எத்தனையோ பெண்கள் மனதுக்குள் போட்டு புழுங்கிக் கொண்டு அதனை வெளியே சொல்ல நினைத்த போதிலும் சொல்ல முடியாமல் தவித்தவாறு, இன்றும் எம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பெண்ணாகப் பிறந்து விட்டாலே குழந்தை முதல் கன்னியாகும் வரையும் தாய் தந்தைக்குக் கட்டுப்பட்டும், பின்பு தனக்கு வாழ்வு தந்த கணவனுக்குக் கட்டுப்பட்டும், பிள்ளைகள் பிறந்து வளர்ந்த பின்னர் பிள்ளைகளுக்கு கட்டுப்பட்டும் வாழும் பெண்ணாக இருந்து வந்தனர். அந்த நிலை சற்று மாறியிருக்கிறது. இருபது நூற்றாண்டுகளாக இருந்த பழைமை இன்று மாறிவிட்டது. புதுமை படைக்கும் பெண்கள், புரட்சி செய்யும் பெண்கள், நன்மை பயக்கும் பெண்கள் இப்படி உலகெங்கும் பேசப்படும் பெண்களாக வளர்ந்து விட்டனர். பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக பெண்கள் மாற வேண்டும். அதற்கு மனதில் உறுதி வேண்டும். வாக்கினிலே இனிமை வேண்டும். நினைவு நல்லது வேண்டும். நெருங்கின பொருள் கைப்படவேண்டும். இப்படிப் பெண்கள் எத்தனை பேர் மனதில் உறுதியுடன் வாய் நிறையப் புன்சிரிப்புடன், நல்லதை நினைத்துக் கொண்டு, தம்மிடமுள்ள பணத்தில் சிக்கனமாக வாழ்க்கையை நடத்தித் திட்டமிட்டு வாழ்கிறார்கள் என்பது பலருக்கும் புரிவதில்லை. தமக்கென அனுபவிக்க வேண்டிய வயதிலும் ஆசைகளைத் தியாகம் செய்து தாய் தந்தை யருக்காக, சகோதரர்களுக்காக உறவினர்களுக்காக ,கணவருக்காக, குழந்தைகளுக்காக, பேரப் பிள்ளைகளுக்காக எல்லாவற்றையும் விட்டுக் கொடுத்து வாழ்கிறார்கள். அவர்கள் நலனே தமது நலம் எனக் கொண்டு மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கல்வி அறிவு என்பது நாம் கற்றதைக் கொண்டு தொழில் புரியவோ அல்லது மற்றவர்க்கு கற்றுக் கொடுப்பதற்கோ உதவி செய்யும். வாழ்க்கைக் கல்வி என்பது அனுபவத்தால் வருவது. அது தான் தாய் தந்தையர் எமது மூதாதையர் நடந்து கொள்ளும் விதத்திலும் அவர்கள் செயற் பாட்டிலும் அவர்கள் எமக்கு வழங்கும் அறிவுரையிலும் நாம் கற்றுக் கொள்வது. இதைப் பெண்கள் கடைப் பிடிப்பது அதிகம். தனக்குத் தெரியாததை தாயிடம் பாட்டியிடம் கற்றுக் கொண்டு விடுவார்கள். அது மட்டுமல்லாது அனுபவத்தைப் பகிர்ந்து உறவினர் நண்பர்களுடன் சொல்லி மகிழ்வதும் உண்டு. அறிவுக் கல்வியைவிட அனுபவக் கல்வி அதிக அளவு. வாழ்க்கையை நன்நெறியில் கொண்டு செல்ல உதவும். இதை இந்தக் காலத்துப் பெண்கள் உணர்ந்திருக்க மாட்டார்கள். காரணம் காலத்தின் கட்டாயம். கூட்டுக் குடும்ப வாழ்க்கை, அதாவது பிள்ளைகள். அப்பா அம்மா. பேரன், பேத்தி. பூட்டன், பூட்டி இப்படி நான்கு ஐந்து சந்ததியினர் சேர்ந்து வாழும் வாழ்க்கை முறை இன்று கிராமங்களில் மட்டும் நிலவும் வழக்கமாகி நகர்ப்புறத்தில் அருகி வருகிறது. தனிக்குடும்பங்கள், அதிலும் பிள்ளைகள் தாய் தந்தையை விட்டுப் பிரிந்து உயர்கல்வி கற்பதற்குத் தொழில் செய்வதற்கு எனத் தொலைதூரத்தில் சென்று விடும் சூழல் உருவாகிவிடுவதும் காரணமாகிறது. தாயானவள், குழந்தைகளைத் தைரியமாக ஆளாக்குவதற்கு வருவாய் போதாதென்று வேலைக்குப் போகின்றாள். ஆண்களோடு பெண்களுமென, தமது குழந்தையையும் பார்த்துக் கொண்டு மனவுறுதி கொண்டு வீட்டையும் கவனித்துக் கொண்டு வேலைக்கும் போகின்றனர். அப்படிப்பட்ட பெண்கள் போற்றப்பட வேண்டியவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாந்த ஓநாய்



மந்தையிலிருந்து பிரிந்து போன ஒரு ஆட்டுக் குட்டியை ஓநாய் ஒன்று துரத்தியது. ஓநாயிடம் இருந்து தப்பிக்க முடியாது என்று தீர்மானமாகத் தெரிந்ததும், அந்த ஆட்டுக்குட்டி, ஓநாயைப் பார்த்து, "நான் இனித் தப்ப முடியாது என்பது எனக்குத் தெரியும். நான் இன்னமும் சிறிது நேரம்தான் வாழப் போகிறேன். இறப்பதற்கு முன்னர் என்னை மகிழ்ச்சியாகச் சிறிது நேரம் இருக்க அனுமதிப் பாயா? சிறிது நேரம் பாட்டுப் பாடு கிறாயா? நான் ஆடுகிறேன்" என்று கேட்டது. ஓநாயும் அதற்குச் சம்மதித்து, தனது குழலை எடுத்து சத்தமாக வாசித்தது. ஆட்டுக் குட்டியும் நடனமாட ஆரம்பித்தது. ஆனால், சில நிமிடங்களுக்குள்ளேயே குழல் இசை கேட்டு, ஆட்டு மந்தையை மேய்ப் பவர்கள் ஓடி வந்து ஓநாயை விரட்டி அடித்தனர். ஓடிக் கொண்டே ஓநாயும், "எனக்கு இது தேவை தான். வேட்டையாடுவது தானே என்னுடைய தொழில். அதை விடுத்து குழல் ஊதியது தவறுதான்!" என்று கூறி வருந்தியது.

**நீதி: அவரவர் செய்ய வேண்டிய தொழிலை விட்டு விட்டு அடுத்தவர் தொழிலைச் செய்வது ஆபத்து.**










# நோர்வே

நோர்வே, ஐரோப்பாவில் ஸ்கன்டிநேவியக் தீபகற்பத்தின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள ஒரு நாடாகும். இது அதிகாரபூர்வமாக நோர்வே இராச்சியம் என அழைக் கப்படுகிறது. இந்த நாடு, வடக்கே ஆர்டிக் பெருங்கடல், மேற்கே நோர்வே கடல், தெற்கே வட கடல் என்பவற் றையும், சுவீடன், பின்லாந்து, ரஷ்யா என்பவற்றுடன் நில எல்லைகளையும் கொண்டுள்ளது. நோர்வே அகலம் குறைந்த நீளமான வடி வத்தையுடைய நாடாகும். நோர்வே யின் நீளமான கரையோரப் பகுதிகள் வட அட்லாண்டிக் பெருங்கடலை நோக்கியதாய் இருப்பதுடன், புகழ் பெற்ற கடல்நீரேரிகளையும் கொண் டுள்ளது. நாட்டின் வடமேற்குப் பகுதியி லுள்ள யான் மாயன் தீவானது, நோர்வேயின் பிரதான நிலப்பரப்பின் ஒரு பகுதியாகக் கருதப்படுவதுடன், ஐஸ்லாந்து கடலை நோக்கி அமைந்த எல்லையைக் கொண்டுள்ளது. இங்கே சுரங்கத் தொழில் செய்யும் ரஷ்ய மக்களும் வசிக்கின்றனர். உலகிலேயே மிக நீண்ட கடற்கரை கொண்ட நாடாகவும் இது விளங் குகின்றது. இந்த நாட்டின் நாணயம் 'நோர்வே குரோன்' ஆகும். நோர்வே, ஐரோப்பாவில் குறைந்த மக்கள் அடர்த்தியுடைய நாடாகும். அதிகமானோர் பின் இனத்தை சேர்ந்தவர்கள். நோர்வே மொழியே முதன்மை மொழியாகும். இந்த நாட்டின் 94 சதவீத மக்கள் கிறிஸ்தவர்கள் ஆவர்.



# காய்கறி

பச்சை நிறக் காய்கறி
பசுமையான காய்கறி
கண்ணைக் கவரும் காய்கறி
காய்கறியாம் காய்கறி
காலையில் பறிக்கும் காய்கறி
கத்தரி வெண்டி தக்காளி
கரட் பூசணி பாகற்காய்
சத்து நிறைந்த காய்கறி
சந்தைக்கு வரும் காய்கறி

கி.முகுந்தனா,
புற்றளை மகா வித்தியாலயம்.

# நாளைய உலகின் நாயகர்கள் நீங்கள்...

(நேற்றைய தொடர்ச்சி)

நாளைய உலகின் நாயகர்கள் நீங்கள்... என்ற பகுதி குறித்து இன்றும் மேற் கொண்டு பார்ப்போம்.

23 நீங்கள் இந்த உலகத்தில் பிறந்ததற்கான காரணம் முழுமையாக நடைபெற வேண்டுமானால், குறைந்த பட்சம் மற்றவருக்கு உதவுவதை நிறுத்தாதீர்கள். ஒருவேளை உங்களால் மற்றவருக்கு உதவ முடியாமல் போனால் அவர்களை வேதனைப்படுத்தாமலாவது இருக்கப் பாருங்கள்.


24. அறிவு, புத்தகங்களில் இருந்து படிக்கும் ஒன்றல்ல, ஒருவர் பழகும் முறையில் இருந்து அவரிடமுள்ள அறிவின் ஆழத்தைப் படிக்கலாம்.

25. ஒருவர் தொழிலில் முன்னேற வேண்டுமானால் 35 சதவீதமான அறிவு போதுமானது. 65 சத வீதம் மற்ற வர்களோடு எப்படிப் பழக வேண்டும் என்பது குறித்துத் தெரிந்திருக்க வேண்டும்.

26. நீ கேட்க முடியாத ஒரு குரலை நான் கேட்கிறேன், அது சொல்கிறது. நீ பின்தங்கி விடக் கூடாது என்று. அது போல நீ காண முடியாத ஒன்றை நான் காண்கிறேன். அது என்னைப் பொருத்தமான இடத்துக்கு அழைத்துச் செல்கிறது. காணவும் முடியாது, கேட்கவும் முடியாத உன்னை நான் எப்படிப் பின்பற்றுவது?

27. தான் செய்ய வேண்டிய வேலையுடன் பிறக்காத மனி தன் எவனும் உலகில் இல்லை. அதை அறிய முன்னரே பிள்ளைகளைப் பலவந்தப்படுத்தி இன்றைய உலகின் மோச மான கல்விக்குள் கட்டாயப்படுத்தித் திணிக்காதீர்கள்.



28. எவரோ ஒரு வர் பணம் சம்பா தித்து விட்டார் என் பதற்காக அவரு டைய தொழி லையே நீங்க ளும் தெரிவு செய் யாதீர்கள்.

29. வாய்ப்பை உபயோகிக்கத் தெரியாத மனிதனுக்கு அதைக் கொடுப்பதால் என்ன பயன் இருக்கப்போகிறது. வாய்ப்பு வந்தும் பலர் செக்குமாடுகளாக இருப்பதற்குக் காரணம், அவர்களுக்கு வாய்ப்பு வருவதும் தெரி யாது, போவதும் தெரியாது.

30. வாய்ப்புக் குறைவு என்று கூறுவது பலவீனமான சஞ் சல மனம். உண்மையில் வாய்ப்புக்கள் நிறைந்துள் ளன என்பதே யதார்த்தம். தன்னை வளர்க்க, உரு வாக்க, தயார்ப்படுத்த பொருத்தமான காலம் இள மைப் பருவமாகும். இந்த உலகம் ஆர்வமுள்ளவர் களுக்குப் பரிசாக அளிக் கப்பட்டுள்ள நன்கொடை யாகும். அதை அறிந்து உலகை நல்லவிதமாகப் பயன்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மட்டத்திலும் அதிகாரங்கள் பகிரத் திட்டம்

## இரண்டு பிரதான கட்சிகளும் அக்கறை



கொழும்பு, ஒக்.27

உள்ளூராட்சி மன்ற மட்டத்திலும் தேசிய அரசு இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது குறித்துக் கவனம் செலுத்தி வருவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்ற ரீதியிலும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வது குறித்து இரண்டு கட்சிகளும் கவனம் செலுத்தி வருவதாக ஐக்கிய தேசிய கட்சியின் முக்கியஸ்தரும் பிரதி அமைச்சருமான அஜித் பெரேரா தெரிவித்துள் ளார்.

தேசிய மட்டத்தில் ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் இணைந்துள்ளன. எனவே உள்ளூராட்சி மட்டத்திலும் அதனை செய்வது இயலாத காரியமில்லை. எனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடமிருந்து வரும் உடன்படிக்கை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி ஆராயும் எனவும் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு இது தொடர்பில் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எவ்வாறான பெறுபேறுகள் கிடைத்தாலும் கூட்டாக இணைந்து நிர்வாகப் பணிகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேர்தலில் வெற்றியீட்டும் பிரதான அரசியல் கட்சி, உள்ளூராட்சி மன்ற ஆட்சி நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதில் மாற்றுக் கருத்து கிடை யாது.

எவ்வாறெனினும் ஏனைய பிரதான கட்சிக்கும் சில முக்கிய பொறுப்புக்கள் வழங்கப்படும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கை சின்னத்தில் தனித்துப் போட்டியிடாது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தல் பரப்புரையை வழிநடத்துவார்–என்றார். (த-வ)

# வாழ்வாதாரத்துக்கு உதவிகள் புரியுங்கள்

## வலைப்பாட்டு மீனவர்கள் நேற்று முதலமைச்சர் குழுவினரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 27

எமது வாழ்வாதாரத்துக்கு உதவி புரியுங்கள் என வலைப்பாட்டு மீனவர்கள் வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையிலான குழுவினரிடம் கண்ணீர் மல்கக் கோரிக்கை விடுத் தனர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையிலான குழுவினர் நேற்று வலைப்பாட்டுக் கிராமத்துக்குப் பயணம் மேற்கொண்டனர். அங்கு அவர்கள் மீனவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது மீனவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

வலைப்லைபாட்டில் 356 மீனவக் குடும்பங்கள் வாழ்கின்றபோதும் வெறும் 70 குடும்பங்களுக்கான வாழ்வாதாரமாக 70 படகுகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. இதற்கும் வலை உள்ளிட்ட பொருள்கள் வழங்கப்படவில்லை.

எமது மனைவி, பிள்ளைகளின் உடைமைகளை விற்று படகுகளை வாங்கி தொழில் செய்தோம். இருப்பினும் அத்தொழிலில் கூட மண் விழுந்த நிலையில் வாரத்தில் 3 நாள்கள் தொழிலுக்குச் சென்றால் மண்ணெண்ணெய்க் காசைக் கூட எம்மால் தேட முடியவில்லை. இத னால் தொழிலை முழுமையாகக் கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் யாழ்ப்பாணம், மன்னார், இந்தியா ஆகிய மூன்று இடத்து மீனவர்களும்தான். இந்திய மீனவர்களால் தமது தொழில் பாதிப்பதாக ஆர்ப்பாட்டங்கள் செய்யும் யாழ். ,மன்னார் மீனவர்களுக் குக் கூட போரினால் அனைத்தையும் இழ ந்து மீளத்துடிக்கும் எமது வேதனை புரியவில்லையே என்பது தான் எமது பெரும் கவலை.

எனவே இதற்கு முதலமைச்சர் உள்ளிட்ட குழுவினர் தீர்வைப் பெற்றுத் தரவேண்டும்–என்றனர்.

இதற்குப் பதிலளித்த வட மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன், இந்தப் பிரச்சினை மத்திய அரசுடன் சம்பந்தப்பட்டது . இருப்பினும் சம்பந்தப்பட்ட அனைவருடனும் பேசித் தீர்வு பெற்றுக்கொள்ளப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்–என்றார். (த-101)

# குறைகளை எமக்கு தெரியப்படுத்துங்கள்

## பூநகரி மக்களிடம் கூறினார் முதலமைச்சர்

மக்களுடைய குறைபாடுகளை அரச அதிகாரிகள் நிவர்த்தி செய்யாத பட்சத்தில் தமக்குத் தெரியப்படுத்துமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் பூநகரிப் பிரதேசமக்களைக்கேட்டுள்ளார்.

குக் கிராமங்களில் மக்கள் எதிர் கொள் ளும் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களை அறிந்து கொண்டு அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு வடக்கு மாகாண முதல்வர், அமைச்சர்கள் அடங்கிய குழு ஒன்று நேற்றுப் பூநகரிப் பகுதியில் உள்ள கிராமங்களுக்குச் சென்றிருந்தது. இதன்போது மக்கள் தெரியப்படுத்திய குறைபாடுகளை அடுத்துக் கருத்து தெரிவிக்கும் போதே முதலமைச்சர் இவ்வாறு கூறினார்.

பூநகரியில் உள்ள வலைப்பாடு, கிராஞ்சி, வேரவில் ஆகிய கிராமங்களுக்கு இந்தக் குழுவினர் சென்று மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தனர். இதன்போது குறித்த கிராமங்களில் பொதுமக்கள் எதிர்கொள்ளும் வீதிப் பிரச்சினை, போக்குவரத்து, கல்வி, தாதி பற்றாக்குறை, கடல் நீர் ஊருக்குள் உட்புகுதல், சுற்றாடல் போன்ற அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர்களுக்கு மக்கள் தெரியப்படுத்தினர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த முதலமைச்சர், இப்போது உங்கள் முன் அறிமுகப்படுத்தப்பட்ட அதிகாரி கள் உங்களுடைய குறைபாடுகளை நிவர்த்தி செய் யாதவிடத்து தமக்குத் தெரியப்படுதுமாறும், தான் நடவ டிக்கை எடுப்பதாகவும் கூறினார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், வட மாகாண போக்குவரத்து அமைச்சர் டெனிஸ்வரன், வடமாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், பிரதம செயலாளர் பத்திநாதன், கல்வி அமைச்சின் செயலாளர் ரவீந்திரன், மேலதிக அரச அதிபர் சத்தியசீலன், கிளிநொச்சி வலயக்கல்வி பணிப்பாளர், பூநகரிக் கோட்டக்கல்வி பணிப்பாளர், கிராம சேவகர்கள், துறைசார் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர் (த-ரி3)

### கண்ணீர்அஞ்சலி



எமது கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் ஆ.பவானந்தன் அவர்களின் அன்புத் தந்தை

**கதிர்காமு ஆனந்தராசா**

நேற்று சிவபதம் அடைந்துள்ளார். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆசிரியர்கள் சமூகம்,
யா/அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி.

(C/19637) (10.17)

## மரண அறிவித்தல்கள்



### கப்டன் என். சோமசுந்தரம் (J.P)

(யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபரும், விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியரும், விடுதி அதிபரும், மாணவர் தேசிய படையணி மற்றும் பாண்ட் அணி ஆகியவற்றின் பொறுப்பாசிரியரும், ஆங்கில ஆசானும், கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவரும் மற்றும் யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம், யாழ்ப்பாணம் மாவட்ட கிரிக்கெட் சங்கம், யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், சைவ பரிபாலன சபை, ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் முன்னாள் தலைவரும், யாழ் மாவட்டத்தில் பல்வேறு விளையாட்டுத்துறை அமைப்புகளையும் கட்டி வளர்த்த விளையாட்டுத்துறை நிர்வாகியும்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் மணிக்கூட்டு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சோமசுந்தரம் (26.10.2015) திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் நாகலிங்கம் - சிவபாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கனகாம்பிகையின் (முன்னாள் பிரதி அதிபர், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) அன்புக் கணவரும் சுரேஷ் (அமெரிக்கா), நிறைஞ்சனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரியகலா, ரூபராஜ் ஆகியோரின் மாமனும் யாழன், கனா, சானுகா, சகானா ஆகியோரின் அன்புப் பேரனும் தனலட்சுமி, இந்திரமலர், சந்திரமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற திருச்செல்வவிநாயகமூர்த்தி, சிவயோகாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாந்தா (நிர்வாக உத்தியோகத்தர் பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை), ராதா, சுகிர்தா (ஆசிரியை, யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்), லதா (சுவிஸ்), சரண்யா, சாரங்கி, பாலச்சந்திரன், சுந்தரேஸ்வரி, கருணாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கணேஸ்வரன் (மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), ஸ்கந்தகுமார் (சிங்கப் பூர்) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28. .0.2015) புதன்கிழமை நண்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து, பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்துக்குத் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள், சுற்றத்தார்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சமூகத்தினர், யாழ். விளையாட்டுத்துறை ஆர்வலர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.


7,மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
021 222 1142.

தகவல்:
குடும்பத்தினர்.

### கதிர்காமு ஆனந்தராசா

(பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)

பிறப்பு : 12.07.1942 இறப்பு : 26.10.2015



புத்தூரையும், வதிரி, "காக்கையன் வளவை" யும் பிறப்பிடமாகவும், அல்வாய் ஆனந்த மலரை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு ஆனந்தராசா (பிரபல கட்டட ஒப்பந்தகாரர்) நேற்று (26.10.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரகாமு-இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், சிவமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-நல்லதங்கம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேல் அன்னப்பிள்ளையின் வளர்ப்பு மகனும் ஆ.பிரபாகரன் (ஆசிரியர் - யா/இளவாலை புனித ஹென்ரியர சர் கல்லூரி), ஆ. பிரபானந்தன் (அளவையியல் ஆசிரியர்-யா/தேவரையாளி இந்துக் கல்லூரி), மலரினி பார்த்தசாரதி, ஆனந்தி குணதீசன் (இலண்டன்), ஆ. பவானந்தன் (உடற்கல்வி ஆசிரியர் யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஜீனா பிரபாகரன், அமரர் ஆசிரியை பவானி பிரபானந்தன், இ. பார்த்தசாரதி (நூலகம், யாழ். பல்கலைக்கழகம்) க.குணதீசன் (இலண்டன்), சர்மிளா பவானந்தன் ஆகியோரின் அன்பு மாமனும், பி. பிரவிந், பி.பிரதீஸ் (யாழ்ப்பாணக் கல்லூரி), பி. பிரபானுசன் (ஹட்லிக் கல்லூரி), பி. பிரதிக்ஷா (மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை), பா.பாதுசன் (ஹாட்லிக் கல்லூரி) பா.மதுஷா, பா.ஜதுஷா (நெல்லியடி மெ.மி.த.க. பாட சாலை), பா.சுபவின் (இலண்டன்), ப.பிரணவன் (யா/ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), ப.பிரசானந் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான க.சண்முகநாதன், வே.தங்கம்மா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற ஈசாக் வெற்றிவேல், மார்க்கண்டு ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான செ.தர்மரத்தினம், செ. செல்வரத்தினம் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும், காலஞ்சென்ற ச.பரஞ்சோதி க. தங்கபாக்கியம் ஆகி யோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2015) செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

மனோகரா, அல்வாய்.
077 905 8177

தகவல்:
ஆ. பிரபாகரன் (ஆசிரியர்)
ஆ. பிரபானந்தன் (ஆசிரியர்)
ஆ. பவானந்தன் (ஆசிரியர்)

(C/19636) (10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியா கொலை வழக்கில் தொடர்புடைய திருடனுக்கு மூன்றரை வருடங்கள் சிறை

## ஊர்காவற்றுறை நீதிமன்று தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 27

புங்குடுதீவு மாணவி கூட்டுவன் புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட வழக்கில் விளக்கமறியலில் உள்ள 3 ஆவது சந்தேகநபர், முன்னர் புரிந்த திருட்டுக் குற்றத்துக்காக அவருக்கு மூன்றரை வருடங்கள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது ஊர்காவற்றுறை நீதிமன்று.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் செ.லெனின்குமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. நேற்றைய தினம் புங்குடுதீவு மாணவியின் வழக்கும் விசாரணைக்கு வந்திருந்த நிலையில் இந்தத் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மே 2 ஆம் திகதி அங்கு இடம்பெற்றதிருட்டுடன்தொடர்புடைய குற்றச்சாட்டில் புங்குடுதீவு மாணவி வழக்கில் விளக்கமறியலில் உள்ள, 2 ஆம் சந்தேகநபரான ஜெயக்குமார் மற்றும் 3 ஆம் சந்தேகநபரான தவக்குமார் ஆகியோருக்கு எதிராக ஊர்காவற்றுறைப் பொலிஸார் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

அந்த வழக்கில் வீட்டினுள் அத்து மீறிப் புகுந்தமை, அங்குள்ள பொருள்களைத் திருடியமை மற்றும் திருடிய பொருள்களை விற்பனை செய்தமை ஆகிய 3 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.அதுபற்றியவிசாரணையின் போது 2 ஆம் சந்தேகநபரான ஜெயக்குமார் குற்றங்கள் புரிந்ததை ஏற்றுக் கொண்டார்.அதன்படிவீடுபுகுந்தமைக்கு ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து, திருடியதற்காக ஒரு வருடச் சிறைத் தண்டனை விதித்து– அது 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டது. திருடிய பொருள்களை விற்பனை செய்த குற்றத்துக்காக ஆயிரத்து 500 ரூபா அபராதமும் கடந்த வருடம் விதிக்கப்பட்டது.

மற்றைய நபரான பூபாலசிங்கம் தவக்குமார் கடந்த வருடம் வழக்கு விசாரணைக்கு வந்தபோது தான். சுற்றவாளி என நீதிமன்றில் தெரிவித்திருந்தார். அதனால் அது பற்றி விசாரணை நடை பெற்றது. விசாரணையின்போது அவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டார். அதன்படி அவருக்கு வீடு புகுந்ததற்காக ஆயிரத்து 500 ரூபா அபராதமும் திருடியதற்காக 2 வருடங்கள் சிறைத் தண்டனையும் திருடிய பொருள்களை விற்றதற்காக ஒன்றரை வருடங்கள்சிறைத்தண்டனையும்விதிக்கப்பட்டது. அவர் ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்தாததனால் அவருக்கு மேலும் ஒரு மாதம் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள்ளது.

(த-4)

**SUPER BALL**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 414
சீட்டிழுப்புத் திகதி 2015.10.25
09 17 35 67 42 I
ரூ. 42,094,140/=

**ஜயோதா**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 1205
சீட்டிழுப்புத் திகதி 2015.10.26
வெற்றி இலக்கங்கள்
07 12 15 21 K
ரூ. 33,230,340/=

வெற்றி வரைய 2691 திகதி 2015-10-26
13 31 40 61 C 35
ரூ. 31,358,875/-

**அறை வாடகைக்குண்டு**
வைத்திய பீடத்திலிருந்து 300M தூரத்தில் வைத்திய பீட மாணவர்களுக்கு சாப்பாடு உடன் தங்குமிட வசதி உண்டு.
தொடர்பு: 0776543926

**வேலையாள்கள் தேவை**
ஆனைக்கோட்டையில் இயங்கி வரும் நிறுவனம் ஒன்றுக்கு மேசன், கூலியாள்கள் தேவை.
தொடர்பு: 021 49 27 248

**வேலைவாய்ப்பு**
யாழில் புதிதாக திறந்துள்ள எமது Golden Group கம்பனிக்கு நான்கு வகையான பதவிகள்
* விநியோகஸ்தர்
* மேற்பார்வையாளர்
12 பேருக்கு முன்னுரிமை
தொடர்பு: 077 621 9536, 021 300 4664
No:08th, 06th Cross Street, Jaffna.

# வெட்டுப்புள்ளி குறைப்பு; கல்வி அமைச்சு கவனம்

இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கம் புலமைப்பரிசில் பரீட்சையின் வெட்டுப் புள்ளியைக் குறைப்பது தொடர்பில் முன்வைத்த கோரிக்கை குறித்துக் கவனம் செலுத்தியுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. கல்வி அமைச்சின் செயலாளர் இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கம், அண்மையில் வெளியான புலமைப் பரிசில் பரீட்சை பெறு பேறுகளின் பிரகாரம் வழங் கப்பட்ட வெட் டுப் புள்ளி 160 புள்ளிகள் என்பதிலிருந்து குறைந்தது 6 புள்ளிகளாவது குறைக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கைவிடுத்துள்ளது.

இந்த நிலையிலே குறித்தகோரிக்கை தொடர்பில் கவனம்செலுத்துவதாகக்கல்விஅமைச்சு அறிவித்துள்ளது.

(த–வ)

**பணியாளர் தேவை**
கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் அமைந்துள்ள தரணீஸ் மோட்டோர்ஸ் நிறுவனத்துக்குப் பின்வரும் பணியாளர்கள் தேவை.
* கணக்காய்வு உத்தியோகத்தர்.
* கணக்காளர்.
* சமையல்காரர்.
கணக்காய்வு உத்தியோகத்தரும்,கணக்காளரும், கணினி அறிவும் போதிய அனுபவமும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியான ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.
(63556)(11,16,17) தொடர்புகளுக்கு:- 077 772 2305

**யாழ்.திறந்த பல்கலைக்கழகத்திற்கான இலவச கற்கை நெறி**
செரண்டிப் சிறுவர் இல்லத்தின் நிதி உதவியின் கீழ் யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழகத்தில் பின்வரும் பாட நெறிகள் நடைபெறவுள்ளன.
1. பொறியியல் -
கணித பிரிவில் 3 பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.
2. B.Sc -
கணித அல்லது விஞ்ஞான பிரிவில் 3 பாடங்கள் சித்தியடைந்திருத்தல்.
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு:- 071 838 3980
077 637 2695
077 827 8463
(63555)(11,16,17)




An opportunity to embark on a career in Banking.

**Walk – in Interviews**
**Northern / Eastern Province**
**On Saturday, 31st October 2015 from 9 a.m. to 12 noon**

**BUSINESS DEVELOPMENT OFFICERS**

The job entails promoting the Bank's Liability product portfolio which includes Time Deposits, Savings and Current Accounts.

The selected individuals will be placed within the Union Bank branch network and will be responsible to develop sales leads, cover a demarcated area and achieve the set targets for new customer acquisitions.

An attractive performance based incentive scheme will be available in addition to the basic salary.

**Requirements**
- Passion for sales.
- Flair for outdoor work.
- Be self motivated with a drive to succeed.
- Be GCE O/L or GCE A/L qualified.

Interviews will be held at
**Northern Province**
Zonal Office, Union Bank Colombo PLC, 01st floor, 398, Hospital Road, Jaffna.
**Eastern Province**
Union Bank of Colombo PLC, No. 03, Station Road, Batticaloa.

Union Bank is one of Sri Lanka's leading Banks supported by the strength of TPG, the US based global private investment firm with US$74.3 billion in capital under management and an extensive global network with significant presence in Asia and Europe. With a solid foundation etched with financial stability and international know-how, Union Bank is amongst the top 5 private commercial banks in market capitalisation in Sri Lanka, offering a full range of products and services to personal and commercial financial sectors.

UNION BANK

Union Bank of Colombo PLC | Head Office: 64, Galle Road, Colombo 03. | www.unionb.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# பொறுப்புக்கூறும் பொறிமுறைக்கு ஒத்துழைக்காதோருக்குத் தண்டனை

*பரணகம ஆணைக்குழு பரிந்துரை*

கொழும்பு, ஒக்.27

முன்மொழியப்பட்ட உள்நாட்டுப் பொறுப்புக்கூறும் பொறிமுறைகள் மற்றும் போருக்குப் பிந்திய நல்லிணக்கச் செயல்முறைகளுக்கு ஒத்துழைக்க மறுப்பவர்களுக்குத் தண்டனை வழங்கவேண்டுமெனக் காணாமற்போனோர் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

காணாமற்போனோர் குறித்து விசாரிக்க, மகிந்த ராஜபக்சவினால் நியமிக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக் குழுவின், இரண்டாவது அறிக்கை கடந்தவாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையிலேயே, உள்நாட்டு விசாரணைகள் மற்றும் நல்லிணக்கச் செயல்முறைகளுக்கு ஒத்துழைக்க மறுப்பவர்களுக்குத் தண்டனை விதிக்கவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இத்தகையவர்களுக்கு அபராதம் விதிக்கலாம். அவர்களின் குடியுரிமையை விலக்கிக் கொள்ளலாம். சிறைத் தண்டனை விதிக்கலாம். அல்லது இந்த தண்டனைகளைக் கலந்தும் விதிக்கலாம் என்றும் பரணகம ஆணைக்குழு கூறியுள்ளது.

இந்தப் பரிந்துரைக்கு, டெஸ்மன் டி சில்வா தலைமையிலான சர்வதேச நிபுணர் குழுவும் ஆதரவு தெரிவித்துள்ளது. (த-வ)

# நவம்பர் இறுதியில் சீனி விலை உயரும்

கொழும்பு, ஒக்.27

அடுத்த மாத இறுதியில் சீனியின் விலை அதிகரிக்கும் எனக்கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த செப்ரம்பர் மாதம் 9 ஆம் திகதி அரசு சீனியின் இறக்குமதியை 12 ரூபாவால் அதிகரித்தது. இந்த அதிகரிப்பு வரியில் இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் இருப்பு நவம்பர் மாத இறுதியிலேயே சந்தைக்கு வரவுள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே புதிய இருப்பின் விலைக்கு அமைவாக, அரசின் கட்டுப்பாட்டு விலையில் சீனி சில்லறைக்கு விற்பனை செய்யும்போது இலாபம் கிடைக்காது எனச் சில்லறை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் அரசு, சீனியின் இறக்குமதி வரியைக் குறைக்க வேண்டும் அல்லது அதன் கட்டுப்பாட்டு விலையை அதிகரிக்கவேண்டுமெனக்கொழும்பு வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் நிதி அமைச்சுக்கு எழுத்து மூலக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் நிதி அமைச்சர் வரவு-செலவுத் திட்டம் தயாரிப்பதில் கவனம் செலுத்துவதால் வர்த்தகர்களின் கோரிக்கை தொடர்பில் ஆராயவில்லை என நிதி அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, வர்த்தகர்கள் அரசின் கட்டுப்பாட்டு விலையிலும் அதிகரித்த விலைக்கே சீனி விற்பனை செய்கிறார்கள் என நாடு முழுவதிலிருந்தும் நூற்றுக்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள நுகர்வோர் அதிகார சபையின் சிரேஷ்ட விசாரணை அதிகாரி,

சீனி இலங்கையின் பிரதான நுகர்வுப் பொருள். அரசு நாட்டின் சீனி பாவனையைப் பூர்த்தி செய்வதற்கு ஆண்டு தோறும் 60 பில்லியன் ரூபாவை செலவு செய்கிறது. இலங்கை பூராகவும் ஆண்டுக்கு 550,000 தொன்கள் சீனி பாவனை செய்யப்படுகிறது.

இறக்குமதி செய்யப்படும் சீனியின் சில்லறை விலை 84 ரூபா தொடக்கம் 86 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வெள்ளை சீனி 80 ரூபாவுக்குக் குறைவாக விற்பனை செய்யப்படுகின்றது- என்றார். (த-வ)

# கப்டன் சோமசுந்தரம் நேற்றுக் காலமானார்



யாழ்ப்பாணம், ஒக் 27

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் கப்டன் என்.சோமசுந்தரம் (வயது 83) நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 12.30 மணிக்கு யாழ்ப்பாணம் மணிக்கூட்டு ஒழுங்கையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் காலமானார்.

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான அவர் 18 ஆண்டுகள் கல்லூரியில் ஆசிரியராகவும், எட்டு ஆண்டுகள் பிரதி அதிபராகவும் கடமையாற்றியவர். கல்லூரியின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர், விடுதி அதிபர், படைபயில் குழு பொறுப்பதிகாரி உட்பட பல பதவிகளை அலங்கரித்தவர்.

யா[illegible] மாவட்டத்தின் விளையாட்டுத்துறையுடன் கடந்த ஏழு தசாப்த காலம் பங்காற்றி வந்த அவர், தகுதி வாய்ந்த உதைபந்தாட்ட, ஹொக்கி மத்தியஸ்தர். மெய்வன்மை ஓட்ட ஆரம்பிப்பாளர். யாழ்ப்பாண மாவட்டக் கிரிக்கெட் சங்கத்தின் முன்னாள் தலைவர். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க முன்னாள் தலைவர்.

பாடசாலைக்காலத்தில் பாடசாலைகள் மத்தியிலும் வெளியிலும் அபிமானத்தைப் பெற்ற குறுந்தூர ஓட்ட வீரர் சோமசுந்தரம்.

இராணுவத்தில் கப்டன் தர நிலைவரை பதவியுயர்ந்த அவர், நாட்டின் அரசியல்நிலைமைகளினால் விசனமுற்று, 1980களின் முற்பகுதியில் இருந்தே இராணுவச் சேவையின்றும் ஒதுங்கிக் கொண்டார்.

அமரர் என். சோமசுந்தரம் சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகம் ஆகியவற்றின் முன்னாள் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை புதன்கிழமை யாழ்ப்பாணம் மணிக்கூட்டு ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் யாழ். கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

கப்டன் சோமசுந்தரம் உதயன் பத்திரிகை உதித்த காலத்தில் அவனது வளர்ச்சியில் துணை நின்றவர். உதயன் நாளேட்டின் சார்பாக நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளின்போது வேண்டிய ஆலோசனைகளை வழங்கி நெறிப்படுத்தியதையும் , உடனின்று உதவியமையும் நிறுவனத்தால் என்றும் மறக்க முடியாதவை.

அவரது ஆற்றலும் , ஆளுமையும் உதயனுக்கு அணி சேர்த்தன. உதயன் குழுமத்தினரின் ஆழ்ந்த அஞ்சலிகள் அவருக்கு. (த)

# சீபா குறித்து தவறான தகவல் களைய நடவடிக்கை இல்லை

*இந்தியத் தூதுவர் கவலை*



கொழும்பு, ஒக்.27

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான முழுமையான பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கை (சிபா) குறித்து வெளியிடப்படும் பிழையான தகவல்கள் மற்றும் உருவாக்கப்படும் தவறான அபிப்பிராயங்களை களைவதற்குப் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படாதது குறித்து இலங்கைக்கான இந்திய தூதுவர் வை.கேசின்ஹா ஆச்சரியம் வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற மாநாடொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

பொருளாதார மற்றும் வர்த்தக ரீதியாக அதிகளவான உள்வினையாற்றும் நோக்கத்துடன் குறிப்பிட்ட உடன்படிக்கை உருவாக்கப்பட்டுள்ள போதிலும், வரைவு உடன்படிக்கையில் உள்ள சில பிரிவுகள் குறித்துப் பரப்பப்பட்டுள்ள பிழையான கருத்துக்களால் உடன்படிக்கை குறித்து எதிர்மறையான எண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அறிக்கை குறித்துச் சமீபத்தில் வெளியான செய்திகள் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. சட்டத்தரணிகள், பேராசிரியர்கள், சிகையலங்கரிப்பாளர்கள் உட்பட பெருமளவு இந்தியர்கள் இந்த உடன்படிக்கை காரணமாக இலங்கை வருவார்கள், இலங்கையை கைப்பற்றுவார்கள் எனக் கூட தெரிவிக்கப்படுவதை அவதானிக்க முடிந்தது. இவ்வாறான கருத்துக்கள் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தின.

இலங்கையில் இந்த உடன்படிக்கை குறித்து உண்மையான தகவல்களை முன்வைப்பதற்கான ஆராய்ச் சிகள் எவையும் இடம்பெறாததே வியப்பாக வுள்ளது.

மேலும் ஐ.நா தீர்மானத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்த அனுமதித்தால் இந்தியச் சட்டத்தரணிகள் இலங்கைக்கு வந்து இங்கு செயற்படத் தொடங்குவார்கள் என அரசியல் தலைவர் ஒருவரை மேற்கோள்காட்டி பத்திரிகையொன்று செய்திவெளியிட்டிருந்தது. இந்திய சட்டத்தரணிகள் ஏன் இந்த விடயத்துக்குள் இழுக் கப்பட்டார்கள் என்பது ஆச்சரிய மளிக்கின்றது என இந்தியத் தூதுவர் மேலும் கூறினார். (த-வ)

# எக்னெலிகொட தொடர்பில் கோத்தாவிடமும் விசாரணை



கொழும்பு, ஒக்.27

லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவிடம் விரைவில் விசாரணை நடத்தப்படவுள்ளதாகக் கொழும்பு ஆங்கில ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விரைவில் இவ்வாறு விசாரணை நடத்தவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கிரிதல இராணுவ முகாமில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னரே எக்னெலிகொட கொலை செய்யப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள் ளது.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் பாதுகாப்பு அமைச்சின் மிக முக்கிய மான உயர் பதவியை வகித்தவரின் உத்தரவுகளுக்கு அமையவே, ஊடக வியலாளர் எக்னெலிகொட கடத்திச் செல்லப்பட்டுப் பின்னர் கொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இராணுவப் புலனாய்வுப் பிரிவின் உயர் பதவி வகித்து வரும் பிரிகேடியர் அருண வன்னியாரச்சியிடமும் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. வெகு விரைவில் கோத்தபாய ராஜபக்சவிடம் விசாரணை நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது என அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ)

# விசேட ஆளணியாக நியமித்தோரின் நியமனங்கள் குறித்து நடவடிக்கை

*வடக்கு அமைச்சர் டெனிஸ்வரன் தெரிவிப்பு*

மானிப்பாய், ஒக்.27

அரசின் முன்னுரிமைச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக 1999 ஆம் ஆண்டு வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி சபைகளின் விசேட ஆளணியாக நியமிக்கப்பட்ட வர்களில் பெரும்பாலான உள்ளூராட்சி உதவியாளர்கள் வடக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் நீண்டகாலமாக செயலாளர்களாக உள்ளனர். மீதமானவர்களையும் செயலாளர்களாக நியமனம் செய்ய வடமாகாண முதல்வர் மற்றும் பிரதம செயலாளர்களுடன் நான் கலந்துரையாடியுள்ளேன். – இவ்வாறு வடக்கு அமைச்சர் பா. டெனிஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு 2014 ஆம் ஆண்டில் வகுப்பு ஒன்று I பதவி உயர்வு கிடைத்திருக்க வேண்டும். ஆனால் 2004 இல் கிடைக்க வேண்டிய வகுப்பு II பதவி உயர்வு கூட இதுவரை அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள், செயலாளர்களுடன் பேச்சு நடத்தியுள் ளேன்.

விரைவில் இவர்களுக்கான பதவி உயர்வு 16.5.1999 முதல் செயற்படும் படியான சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் கிடைக்கும்.

தற்போது வடக்கில் முகாமைத்துவ உதவியாளர்கள், உள்ளூராட்சி உதவியாளர்கள் பதவி வகிப்பவர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களாக பதவி வகித்து வருகின்றனர்.

உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு வடமாகாண சபை "சுப்பிறா" தர பரீட்சைக்கு இதுவரை இடமளிக்கவில்லை. எதிர்காலத்தில் சேவை பிரமாணக் குறிப்பில் மாற்றம் செய்து "சுப்பிறா" தரப்பரீட்சைக்கு இடமளிக்க பிரதம செயலாளருடன் பேசவுள்ளேன்.

தற்போது உள்ளூராட்சி சபைக்கு செயலாளர் நியமனம் வழங்கும்போது விசேட ஆளணியாக உள்ளூராட்சி சபைக்கு என கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களையும், "சுப்பிறா" தர முகாமைத்துவ உதவியாளர்களையும் இணைந்த வகையில் நியமனம் செய்யப்படவேண்டும்.

இது தொடர்பில் வடக்கு மாகாண முதல்வர், பிரதம செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளேன். – என்றார். (ற-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தைக்

ஞானப் பிரகாசம் ஆண் டகை.

போரின்போது இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் இடம்பெறப்போகும் விசாரணைகள் முடிவு பெறுவதற்கு இன்னமும் ஐந்து, ஆறு வருடங்களோ அதற்கும் அதிகமான காலப் பகுதியோ எடுக்கக்கூடும். அப்படியான நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை சுமுகநிலைக்குக் கொண்டுவருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து எடுப்பது அவசியமாகும் எனவும் யாழ். ஆயர் சுட்டிக்காட்டினார்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றின் அதிபராக போர்க்காலப்பகுதியில் கடமையாற்றியிருந்தவரான யாழ். மறை மாவட்டத்தின் புதிய ஆயர், கடந்த 25 வருடங்களுக்குமேலாகவலிகாமம்மக்கள்போரால்இடம்பெயர்ந்து வீதிகளிலும் அகதி முகாம்களிலும் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கும் அவலநிலையை தாம் நேரில் கண்டுள்ளதாகவும், இவர்களின் பிரச்சினைகளுக்கு வெகு விரைவாகத் தீர்வு காணப்படுவது இன்றியமையாததாகும் என்றும் குறிப்பிட்டார்.

யாழ். மறை மாவட்டத்தின் புதிய ஆயராக இந்த மாதம் 13ஆம் திகதி பாப்பரசரால் நியமிக்கப்பட்ட பின்னர் நேற்றுக் கொழும்பு, வெள்ளவத்தையிலுள்ள மிராஜ் ஹோட்டலில் தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுடன் அறிமுக மதிய போசன விருந்துபசார நிகழ்வில் ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்ஆண்டகைகலந்து கொண்டார்.

மதியபோசன விருந்துபசாரத்துக்கு முன்னதாக உதயனுடன் சில நிமிடங்கள் பிரத்தியேகமாக கலந்துரையாடியபோதே யாழ்.ஆயர் இந்தக் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.

வடக்குக்கும்,தெற்குக்கும்இடையே புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதற்கு தன்னால் இயன்ற பங்களிப்பை வழங்குவதற்கு எண்ணியுள்ளதாகத் தெரிவித்த யாழ் ஆயர், நாட்டில் நிரந்தர நல்லிணக்கத்துக்கு இது அவசியமானது என்றும் சுட்டிக் காட்டினார்.

யாழ்.கத்தோலிக்கமேற்றாசனத்தை சீரமைத்து புதுப்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் இதன்போது யாழ். ஆயர் மேலும் தெரிவித்தார். (த–சி)

## வித்தியா

சந்தேக நபர்கள் 9 பேரும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களது இரத்த மாதிரிகள் மரபணுப்பரிசோதனைக்காகத்தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அனுப்பப் பட்டுள்ளன. அந்த அறிக்கையைக் குற்றப்புலனாய்வுப்பிரிவினர்நீதிமன்றில் இன்னும் சமர்ப்பிக்கவில்லை.

அந்த அறிக்கையை விரைவில்சமர்ப்பிக்குமாறு நீதிமன்று ஏற்கனவே குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவுறுத்தியுள்ளபோதும் அது இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. அதனை விரைவில் சமர்ப்பிக்குமாறு நேற்றைய தினமும் நீதிமன்று குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது நீதிமன்று.

குறித்த வழக்கின்போது, சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து அரசசட்டவாதிகுமார்ரட்ணம்நேற்று முன்னிலையாகியிருந்தார். வழக்கில் சந்தேகநபர்களாகக் குறிப்பிடப்படும் 9 பேரில் 4 ஆம், 7 ஆம், 9 ஆம் சந்தேகநபர்கள் சார்பாகச் சட்டத்தரணிசரத்வல்கமவும்கொல்லப்பட்ட மாணவியின் பெற்றோர் சார்பில் சட்டத்தரணி சிந்தக்க அமரசிங்கவும் நேற்று முன்னிலையாகியிருந்தனர்.

கடந்தமேமாதம்13ஆம்திகதிகாலை குறித்த மாணவி பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது காணாமற்போயிருந்தார். மறுநாள் காலை குறித்த மாணவி வழமையாகச் சென்றுவரும் பாதையின் ஓரமாகஇருந்தபாழடைந்தவீட்டின் பற்றைப் பகுதியிலிருந்து ஆடைகளின்றிக் கோரமான முறையில் சடலமாக மீட்கப்பட்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின்போது அவர் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டமை தெரியவந்திருந்தது. அதனைத் தொடர்ந்து குறித்த 9 சந்தேகநபர்களும் வெவ்வேறு நாள்களில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்த வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த–4–106)

## வாள்வெட்டுச்

வகுப்பில் பயிலும் குறித்த மாணவன் குப்பிளானைச் சேர்ந்த கால்நடை மருத்துவர் ஒருவரின் மகனாவார். வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையதாகப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நிலையில் அவர் நேற்று சட்டத் தரணி ஊடாக நீதிமன்றில் சரணடைந்தார். மல்லாகம்நீதிமன்றில்அவரைப்பிணையில் விடுவிக்குமாறுகோரி அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வாதிட்டார். ஆனால் பொலிஸார் அதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

அதனால் சுமார் அரை மணித்தியாலமாக அது பற்றிய வாதப்பிரதிவாதம் இடம்பெற்றுது.

இறுதியில் குறித்த சந்தேக நபரைப் பிணையில்விடுவிப்பதற்குப்பொலிஸார்கடும்ஆட்சேபனை தெரிவித்ததனால் பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு, சந்தேக நபரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

சுன்னாகத்தில் கடந்த மாதம் பட்டப்பகலில் பொதுமக்கள் முன்னிலையில் துணிந்து வாள்வெட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. வாள்வெட்டுச்சம்பவத்தால் அங்கு நின்ற பொதுமக்களும் பீதியடைந்திருந்தனர். ஒருவர் காயமடைந்தார். பொலிஸாரும் சம்பவ இடத்தை அண்மித்து நின்றிருந்தபோதும் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அந்த விடயம் யாழ். மேல்நீதிமன்றின் கவனத்துக்குச் சென்றதால் சுன்னாகத்தில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தக் கடும் நடவடிக்கை எடுக்கமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து 3 பேர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலுக்குள் தள்ளப்பட்டனர். எனினும் பிரதான சந்தேக நபர் என்று பொலிஸாரால் அடையாளப்படுத்தப்படும் குறித்த மாணவனும் மற்றும் சிலரும் தலைமறைவாகியிருந்தனர். பொலிஸார் தொடர்ந்து தேடுதலில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த மாணவன் சட்டத்தரணி ஒருவர் ஊடாக நேற்றுச் சரணடைந்துள்ளார். அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மேலும் சிலர் பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்றும் பொலிஸார் மேலும் கூறினர். (த–4)

## விருப்பத்தை

நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன், தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து செயற்படப்போவதாகவும் இது தொடர்பில் அந்தக் கட்சியுடன் 4 கட்டப் பேச்சுக்கள் நடத்தியுள்ளதாகவும் தெரிவித்திருந்தார். இந்த நிலையிலேயே, தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் மேற்கண்டவாறு ஊடக அறிக்கை அனுப்பியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்புரிமையில் இருந்து விலகி ஆனந்த சங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக்கூட்டணியில்இணைந்து தான் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) கூறியிருக்கின்றாரேயொழிய சேர்ந்து விட்டதாகவோ – சேர்ந்து செயற்படுகின்றோம் என்றோ கூறவில்லை. தன்னுடைய விருப்பத்தை மாத்திரம்தான் தெரிவித்துள்ளார்.

அது அவர் எங்கள் மீது வைத்திருக்கின்ற மதிப்பும் – நம்பிக்கையுமாகும். அதனை நான் வரவேற்கின்றேன். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை படிப்படியாகக் குன்றி வருகின்றது. அவர்களின் ஆதரவாளர்களேஒருபுதியஅணியை உருவாக்கவேண்டுமென விரும்புகின்றார்கள்.

இன்றைய காலத்தின் தேவை மக்கள் விருப்பப்படி ஒரு புதிய அணியை உருவாக்குவது. அனேகரின் விருப்பப்படி ஒரு புதிய அணியை பல்வேறு கட்சிகளுடன் கலந்தாலோசித்து உருவாக்க உத்தேசித்துள்ளேன். பல்வேறு கட்சிகளுடன் இது சம்பந்தமாகப் பேசியும் உள்ளேன். அதனடிப் படையில் விநாயகமூர்த்தி முரளிதரன் தனது ஆதரவை வழங்குவதற்கு முன்வந்துள்ளார்.

அதேபோன்று வேறு பலரும் புதிய அணியொன்று உருவாகினால் அதில் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்துள்ளனர். இதுதான் உண்மை. ஆனால் இது சம்பந்தமாக வெளியாகியபல்வேறுகருத்துக்கள் அத்தனையும் உண்மைக்குப் புறம்பானவையாகும். தமிழர் விடுதலைக் கூட்டணி மேற்கொள்ளும் நடவடிக்கைகள்பற்றிஅவ்வப்போது மக்களுக்கு அறியத்தருவோம்; – என்றார். (த–5)

## வடக்கு

வாழ்வாதாரத்துக்கு 202 மில்லியனும், நீர்ப்பாசனத்துக்கு 300 மில்லியனும், கூட்டுறவுத்துறைக்கு 464 மில்லியனுமாக ஆயிரத்து 172 மில்லியன் ரூபா தேவை என்று கோரிக்கை விடுத்துள்ளது.

சுகாதார அமைச்சு ஆயிரத்து 782 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பீடு செய்துள்ளது. அதில் சுகாதாரத்துக்கு ஆயிரத்து 340 மில்லியனும், ஆயுள்வேத வைத்தியத்துக்கு 236 மில்லியனும், சமூக சேவைக்கு 104 மில்லியனும், சிறுவர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்கு 104 மில்லியனுமாக ஆயிரத்து 782 மில்லியன் ரூபா தேவை என்று கோரிக்கை விடுத்துள்ளது.

மீன்பிடி அமைச்சு ஆயிரத்து 235 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பீடு செய்துள்ளது. அதில் நன்னீர் மீன்பிடிக்கு 93 மில்லியனும், போக்குவரத்துக்கு 95 மில்லியனும், கிராமிய அபிவிருத்திக்கு 237 மில்லியனும், வீதி அபிவிருத்திக்கு 810 மில்லியனுமாக ஆயிரத்து 235 மில்லியன் தேவை என்று கோரிக்கை விடுத்துள்ளது.

கல்வி அமைச்சு 3 ஆயிரத்து 78 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பீடு செய்துள்ளது. அதில் கல்விக்கு 2 ஆயிரத்து 860 மில்லியனும், விளையாட்டுத்துறைக்கு 110 மில்லியனும், கலாசார அபிவிருத்திக்கு 105 மில்லியன் ரூபாவுமாக 3 ஆயிரத்து 78 மில்லியன் ரூபா தேவை என்று கோரிக்கை விடுத்துள்ளது.

உள்ளூராட்சி அமைச்சு 707 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பீடு செய்துள்ளது. அதில் உள்ளூராட்சிக்கு 425 மில்லியனும், வீடமைப்புக்கு 75 மில்லியனும், சுற்றுலாத்துறைக்கு 83 மில்லியனும், கிராமிய கைத்தொழிலுக்கு 112 மில்லியனும், காணிநிர்வாகத்துக்கு 10 மில்லியனுமாக 707 மில்லியன் ரூபா தேவை என்று கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை–கடந்தஆண்டுவடக்கு மாகாண சபை 6 ஆயிரத்து 977 மில்லியன் ரூபாவுக்கு கோரிக்கை விடுத்திருந்த நிலையில், மத்திய அரசு ஆயிரத்து 440 மில்லியன் ரூபாவை மாத்திரமே வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த–5)

## நழுவினார்

நேரடியாகப் பதிலளிக்காமல், ஐ.நா பொதுச் செயலர் பான் கீ–மூன் நழுவியுள்ளார்.

இந்தியாவின் 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' ஆங்கில ஊடகத்தின் செய்தியாளர் கார்த்திகேயன் ஹேமலதாவுக்கு, ஐ.நா பொதுச்செயலர் பான்கீ–மூன் செவ்வி ஒன்றை வழங்கியுள்ளார். இந்தச் செவ்வியின்போது, இலங்கை தொடர்பாகஐ.நா பொதுச்சபையில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இலங்கையில் அமைதியின்மை நிலவியபோது, தமிழ் மக்களுக்கு எதிராகப் போர்க்குற்றங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்று நினைக்கிறீர்களா? என்று, ஐ.நா பொதுச் செயலரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான இலங்கையின் புதிய அரசுக்கு, நான் ஊக்கமளித்தேன். அவர் சரியான திசையில் செல்கிறார் என்று நான் நினைக்கிறேன். நிலுவையில் உள்ள இந்த விவகாரங்கள் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் நான் கலந்துரையாடினேன். உங்களுக்கும் கூடத் தெரியும். நான் நிபுணர்கள் குழுவொன்றை நியமித்தேன்.

இலங்கை அரசும் கூட, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை அமைத்தது. அவர்கள் சிலமுயற்சிகளை முன்னெடுத்தனர். ஆனால் போதுமானதாக இல்லை. கடந்த காலத்துக்கான நீதி, என்ன நடந்தது மற்றும் மேலும் முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்வது ஆகிய பொறுப்புக்கூறலுக்கான இந்த எல்லாச் செயல்முறைகளும் உண்மையானதென்று நான் நம்புகிறேன்.

இலங்கை அரசின் முயற்சிகளை நான் மதிக்கிறேன். மனித உரிமைகள் நிலை கவலையளித்தது. இது எமது முன்னுரிமையான விடயம். ஐ.நா பொதுச் செயலர் என்ற வகையில், நான்மனித உரிமைகள் முயற்சிகளைவெளிப்படையாகஆரம்பித்தேன்.

இந்த விவகாரத்தில் இலங்கை அரசு என்னுடன் இணைந்து நடக்கும் என்று நான் உண்மையாக நம்புகிறேன்–என்றார்.

தமிழ் மக்களுக்கு எதிராகப் போர்க்குற்றங்கள்இழைக்கப்பட்டனஎன்று நினைக்கிறீர்களா என்ற கேள்விக்கு அவர்நேரடியாகப்பதிலளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த–வ)

## நாகர்கோவில்

நேற்றுக் காலை நாகர்கோவில் கடற்கரையோரமாகசடலம் ஒன்று கரை ஒதுங்குவதாகக் கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் ஒரு சடலத்தை மீட்டனர். அந்தச்சடலம் மீட்கப்பட்ட இடத்தில் இருந்து சிறிது தூரத்தில் பிறிதொருசடலம்கடலில்மிதந்தபடி கரையொதுங்குவது அவதானிக்கப் பட்டதாகவும், இதனை அடுத்து அந்தச்சடலமும்மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்

கடற்கரைப் பகுதிக்குச் சென்ற இரு இளைஞர்களும் மீன் வாங்கி மோட்டார் சைக்கிளில் வைத்துவிட்டுப் பணப்பை, கைத்தொலைபேசி என்பவற்றுடன் மேல் ஆடைகளையும் களைந்து அருகில் வைத்துவிட்டுக் கடலில் இறங்கி நீராடி இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

கடல் நேற்றுக் காலை தொடக்கம் கடுமையான கொந்தளிப்பு நிலவிய நிலையில் அதில் அடித்துச் செல்லப்பட்டு இவர்கள் மூழ்கியிருக்கலாம் எனக் கூறப்பட்டது. (த–109–101

## தெற்காசிய

ளது.

அதேவே ளை, ஆப்கானிஸ்தானில் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 17 என்றும் மேலும் 55 பேர் காயமடைந்திருப்பதாகவும் ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவிக்கிறது.

மேலும் பூகம்பத்திலிருந்து தப்பிக்கும் முயற்சியின்போது ஆப்கான் நகரமான தலுக்கானில் 12 பாடசாலைச்சிறுமிகள்சாவடைந்துள்ளனர். மேலும் 30 சிறுமிகள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை– இந்தியாவின் டில்லி, காஷ்மீர், ஹரியானா மற்றும் தமிழ் நாட்டிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாக இந்தியச் செய்திகள் குறிப்பிடுகின்றன. (த–வ)

## தமிழ்க்

பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளதாவது:–

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து அரசின் பதிலுக்குக் காத்திருக்கின்றோம். ஜனாதிபதி நவம்பர் 7 ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு வழங்குவதாக அவர் உறுதியளித்துள்ளார்.

தமிழ்அரசியல்கைதிகள்விரைவில் விடுதலை செய்யப்படாவிட்டால், போராட்டமொன்றை நடத்த நேரிடும். தமிழ் அரசியல் கைதிகளுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் போராட்டத்தில் குதிக்க நேரிடும் என அரசுக்கு எச்சரிக்கை விடுக்கின்றோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த அரசினால் கைது செய்யப்பட்டு நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் இந்த அரசு விடுதலை செய்யவேண்டும்–என்றார். (த–வ)

## அரசியல்

மனோ கணேசன் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் சட்டத்துக்கு உட்பட்டு, இயன்ற அளவில் தமிழ் அரசியல் கைதிகளைப் பிணையில் விடுவிக்கத் துரித நடவடிக்கை எடுக்கப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார் என்றும் அவர் கூறினார்.

தம்மைப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு கோரி நாட்டின் அனைத்துச் சிறைசாலைகளிலும் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் உணவுதவிர்ப்புப்போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். ஆயினும்அவர்களின்விடுதலைக்கு எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதிக்கு முன்னர் நடவடிக்கை எடுப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் ஜனாதிபதியுடன் பேசி வழங்கிய உறுதிமொழியை அடுத்து அந்தப் போராட்டம் கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிக்கு புறம்பான படுகொலைகளை விசாரிக்க உயர் குழு

## விசாரணை அறிக்கை பெப்ரவரியில் வெளிவரும் என்கிறார் பரணகம



புதுடில்லி, ஒக்.27

வெள்ளைக் கொடி விவகாரம், நீதிக்குப் புறம்பான படுகொலைகள், பாலச்சந்திரன் படுகொலை, இசைப்பிரியா படுகொலை உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்பாக ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட குழு விசாரணை நடத்தி வருவதாகக் காணாமற்போனோர் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வல் பரணகம தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணை அறிக்கையை பெப்ரவரி மாதம் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியாவின் இந்து ஆங்கில ஊடகத்துக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அதில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

படுகொலைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரிக்க, ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று அமைக்கப் பட்டுள்ளது. இவர்கள் இத்தகைய விசாரணைகளில் அனுபவம் மிக்கவர்கள். இந்த விசாரணைகளை நடுநிலையாக நடத்துவதற்கு, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி ஒரு வ... இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளார். இந்தக் குழுவில் ஒரு பெண் உள்ளிட்ட 5 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவினர், மருத்துவமனைகள் மீது அரச படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதான குற்றச்சாட்டுக் குறித்தும் விசாரணை நடத்துவர்.

அத்துடன் மேலும் இசைப்பிரியா, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 12 வயதான இளைய மகன் பாலச்சந்திரன் படுகொலைகள் போன்ற சனல் -4 வெளியிட்ட ஆவணப்படத்தில் இடம்பெற்றிருந்த சம்பவங்கள் குறித்தும் விசாரணை நடத்துவர்.

எட்டு மாவட்டங்களுக்கும் சென்று விசாரணைகளை நடத்தும் இந்தக் குழுவினர் தமது அறிக்கையை எதிர்வரும் பெப்ரவரி மாதம் சமர்ப்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது- என்றார்.

இறுதிப் போர் முடிவுக்கு வருவதற்கு முதல்நாள் 2009 ஆண்டு மே 18 ஆம் திகதி வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்களை நீதிக்குப் புறம்பான முறையில் அரச படையினர் கொலை செய்த சம்பவம் குறித்து பரணகம ஆணைக்குழு தொடக்க நிலை விசாரணைமூலம் மீண்டும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது எனப் பிரதமரும், வெளிவிவகார அமைச்சரும் நாடாளுமன்றத்தில் அறிவித்து சில தினங்களில் ஆணைக்குழுவின் தலைவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். (த-வ)

# மாற்று வழிகளில் மின் உற்பத்தி செய்வோருக்கு விசேட சலுகை

கொழும்பு, ஒக். 27

டீசல் மற்றும் நிலக்கரியைப் பயன்படுத்தி மின்சக்தியை உற்பத்தி செய்வதைத் தவிர்ந்த மாற்று வழிகளில் மின் சக்தியை உற்பத்தி செய்யும் துறைகளுக்கு ஏராளமான சலுகையை வழங்குவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசின் கன்னி வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழியப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ...ரிப்புரைக்கு அமைவாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் முன்வைக்கப்படும் வரவு-செலவுத் திட்ட அறிக்கையின் யோசனைகளில், சூரிய வெப்பத்தால், காற்றின் சக்தியால் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மற்றும் சிறிய நீர் மின்சக்தி நிலையங்களுக்கே இவ்விதம் நிவாரணச் சலுகைகள் கிடைக்கவுள்ளன.

டீசல் உள்ளிட்ட எரிபொருள்கள் மூலமாக மின் அலகு ஒன்றை உற்பத்தி செய்வதற்கு 22 ரூபாவும், நீர் மூலமான மின் அலகு ஒன்றுக்கு மூன்று ரூபாவும் தற்போது அரசினால் செலவு செய்யப்பட்டு வருகின்றது.

தற்போது அரசினால் செலவு செய்யப்படும் இந்த அதிகரித்த செலவினம் காரணமாக மின் கட்டணச் சிட்டைகள் மூலம் சாதாரண பொதுமக்களுக்கு அதிகபட்ச நிவாரணமொன்றை வழங்குவது சிரமத்துக்குரிய கருமமொன்றாகியுள்ளது.

அதற்குப் பரிகாரமாக எரிபொருள்கள் மற்றும் பெரிய நீர்மின் உற்பத்தி நிலையங்கள் தவிர்ந்த மாற்றுவழி மின்சார உற்பத்திகளுக்கு வரவு-செலவுத் திட்ட யோசனைகளில் ஏராளமான சலுகைகளை வழங்கி உற்பத்திகளை ஊக்கப்படுத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

மின்சாரக் கட்டணங்களைக் குறைத்து மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு மின்சார சபையில் நிலவும் அதிகாரிகளின் மேலாதிக்கமும் பெரும் தடைக்கல்லாகியிருப்பதாக தெரிவித்துள்ள நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, அது தொடர்பாகவும் கூட இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் தீர்வுகள் கிடைக்கும் எனவும் கூறினார். (த-22)



இலங்கை இராணுவத்தின் இலகு காலாட் படையணியின் 134ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு நேற்று இராணுவத் தளபதி தலைமையில் பனாகொடவில் அமைந்துள்ள அதன் தலைமையகத்தில் இடம் பெற்றது. இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இதில் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவும் இராணுவச் சீருடையில் பங்கேற்றிருந்தார். (தி)

# திகம்பத்தானை குண்டுத் தாக்குதல்; கடற்படை அதிகாரிகளே காரணம்

## உடலகம ஆணைக்குழு குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 27

திகம்பத்தானையில், இலங்கைக் கடற்படையின் வாகனத் தொடரணி தரித்து நிற்கும் இடைத்தங்கல் முகாம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுக்கு, அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படை அதிகாரிகள் கடமை தவறியதே காரணம் என்று உடலகம ஆணைக்குழு குற்றம் சாட்டியுள்ளது.

2006ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம், திகம்பத்தானைப் பகுதியில் கடற்படையின் வாகனத் தொடரணித் தரிப்பிடத்தில், விடுதலைப் புலிகள் நடத்திய குண்டுத் தாக்குதலில், 98 கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்ட உடலகம ஆணைக் குழுவின் அறிக்கை அண்மையில். நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

கடற்படையின் வாகனத் தொடரணித் தரிப்பிடத்தில் பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்த அதிகாரிகள் கடமை தவறியதே இந்தத் தாக்குதலுக்கு காரணம் என்று உடலகம ஆணைக்குழு கண்டறிந்துள்ளது.

வாகனத் தொடரணியின் கட்டளை அதிகாரியால் பயன்படுத்தப்படும் வாகனத்தில், தொடர்பாடல் கருவி மற்றும், குண்டை வெடிக் காமல் முடக்கும் கருவி என்பன பொருத்தப்பட்டிருந்தன.

இந்தக் வாகனம் வழக்கமாக வாகனத் தொடரணியில் வரும் வாகனங்கள் தரிப்பிடத்துக்குள் நிறுத்தப்பட்டிருக்கும் போது, அதன் வாயிலில் வேறு வாகனங்கள் நுழையாமல் தடுப்பதற்காக நிறுத்தப்பட்டிருப்பது வழக்கம். தாக்குதல் நடத்தப்பட்ட போது அந்த இடத்தில், அந்தக் வாகனம் நிறுத் தப்பட்டிருக்க வில்லை. வழக்கமான ஏற்பாடுகள் கடைப்பிடிக் கப் பட்டிருந்தால், பாதிப்பை குறைத்திருக்க முடியும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (தி)

# முப்படையின் கண்ணியம் நிச்சயம் பாதுகாக்கப்படும்

## ஜனாதிபதி மைத்திரி உறுதி

கொழும்பு, ஒக்.27

போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை எதிர்கொள்ளும்போது முப்படையினரின் கண்ணியம் மற்றும் பெருமை பாதுகாக்கப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் முப்படைகளையும் பலவீனப்படுத்த அனுமதிக்கமாட்டேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பு இராணுவ தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற படையினருக்கான வர்ண விருது சூட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இறுதிப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் போர்க் குற்ற விசாரணை நடத்தும் போது முப்படைகளினதும் பெருமை மற்றும் கண்ணியம் பாதுகாக்கப்படும். பலர் பல்வேறு வகைகளில் பேசலாம். வெவ்வேறு அரசியல் சித்தாந்தம் பேசலாம். அனைவருக்கும் ஜனநாயகத்தில் பேச்சு சுதந்திர உரிமை உண்டு. போர் வீரர்களின் பெருமை மற்றும் கண்ணியத்தை புதிய அரசு பாதுகாக்கும்.

மேலும் நன்கு பயிற்சி பெற்ற மற்றும் நல்ல ஒழுக்கம் உடைய எமது படைகளுக்கு ஐ.நா அமைதிப் படையில் மேலும் ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.. இது தொடர்பில் ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்துக்காக நாம் நியூயோர்க் சென்றிருந்த போது ஐ.நா பொதுச் செயலாளர் மற்றும் அரச தலைவர்களுடன் பேச்சு நடத்தினோம் - என்றார்.

இதேவேளை, படையினருக்கான வர்ண விருது சூட்டும் நிகழ்வில் 25 ஆண்டுகளின் பின்னர் அரச தலைவராக ஜனாதிபதி நேற்றைய நிகழ்வில் கலந்து கொண்டுள்ளார். முன்னதாக, முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கலந்து கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ)

# இலங்கை அரசுடன் ஐ.நா. இணைந்து செயற்பட தயார்

கொழும்பு, ஒக்.27

நாட்டின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்ய இணைந்து செயற்படத் தயார் என ஐ. நா அமைப்பு அறிவித்துள்ளது.

பொதுவான இலக்குகள், அபிவிருத்தி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்ய இலங்கை அரசுடனும் மக்களுடனும் இணைந்து செயற்படத் தயார் என ஐ. நா நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு பயணம் செய்துள்ள ஐ. நா அரசியல் விவகாரங்களுக்கான உதவிப் பொதுச் செயலாளர் [illegible] ஜென்கா இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டமை தொடர்பிலான ஊடக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சர் மனோ கணேசன், அமைச்சர் ரவூப் ஹக்கீம், ராஜதந்திரிகள், புத்திஜீவிகள் உள்ளிட்ட பலரை ஜென்கா சந்தித்துள்ளார்.

அரசியல் தீர்வுத் திட்டம், நல்லிணக்கம், குற்றச்செயல்களுக்கு பொறுப்புக் கூறுதல், நீதி போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணத்தைக் கைப்பற்றியது ஸ்ரார் ஈகிள்ஸ்
## அன்ரனிஸின் தொடரில் விக்டோறிஸை வீழ்த்தி

யாழ்ப்பாணம், ஒக். 27
பேசாலை சென்.விக்டோறிஸ் அணியை 28 ஓட்டங்களால் வெற்றிபெற்று தாழ்வுபாடு பிறிமியர் லீக் கிண்ணத்தை கைப்பற்றியது மன்னார் பெரியகடை ஸ்ரார் ஈகிள்ஸ் அணி.

தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய தாழ்வுபாடு பிறிமியர் லீக் கிண் ணத்துக்கான ரி-20 கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. இந்த இறுதியாட்டத்தில் பேசாலை சென்.விக்டோறிஸ் அணியை எதிர்த்து மன்னார் பெரியகடை ஸ்ரார் ஈகிள்ஸ் அணி மோதிக் கொண்டது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மன்னார் பெரியகடை ஸ்ரார் ஈகிள்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மயூரன் 60 ஓட்டங்களையும், அஜித் 28 ஓட்டங்களையும், கோமேதகன் 21 ஓட்டங்களையும், நார்தீபன் 20 ஓட்டங்களையும், அனாஸ் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பேசாலை சென்.விக்டோறிஸ் அணி சார்பில் கங்காதரன் 2 இலக்குகளையும், அனாஸ், பிரதீப், ஆனந்த் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

173 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பேசாலை சென்.விக்டோறிஸ் அணி 19 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 144 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக அனாஸ் 52 ஓட்டங்களையும், திலீபன் 19 ஓட்டங்களையும், செல்வராஜா 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மன்னார் பெரியகடை ஸ்ரார் ஈகிள்ஸ் அணி சார்பில் மயூரன் 3 இலக்குகளையும், றெக்சன், யக்சன் இருவரும் தலா 2 இலக்குகளையும், அரவிந் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக மன்னார் பெரியகடை ஸ்ரார் ஈகிள்ஸ் அணியின் மயூரன் தெரிவானார். சிறந்த பந்து வீச்சாளராக தாழ்வுபாடு அன்ரனிஸின் அஜந் தெரிவானார். சிறந்த துடுப்பாட்ட வீரராக ஸ்ரார் ஈகிள்ஸ் அணியின் றோய் தெரிவானார். (ம-23)



## 786 அணி இறுதியில்

யாழ்ப்பாணம், ஒக். 27
வவுனியா உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் முன்னெடுக்கப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடரில் 786 விளையாட்டுக்கழகம் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் 786 அணியை எதிர்த்து ஈஸ்வரன் அணி மோதிக்கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேரமுடிவில் தலா ஓர் கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலைத் தகர்ப்பு உதைகள் வரை இழுபறிப்பட்டது. இதில் 786 அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## கரம் தொடர்

யாழ்ப்பாணம், ஒக். 27
இலங்கை கரம் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 'சி' பிரிவு இருபாலாருக்குமான கரம் தொடரில் யாழ். மாவட்ட கரம் அணியினர் இரு பிரிவுகளிலும் காலிறுதியாட்டத்துக்குத்தகுதி பெற்றுள்ளனர். காலிறுதியாட்டங்கள் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளன. (ம-23)

# யாழுக்கு வெண்கலம்



யாழ்ப்பாணம், ஒக். 27
27ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான பெண்களுக்கான கூடைப் பந்தாட்டத் தொடரில் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் கழக அணியை வீழ்த்தி யாழ். மாவட்ட இளைஞர் கழக அணி மூன்றாம் இடத்தை கைப்பற்றியது. குருநாகல் சென். ஆன்ஸ் பாட சாலை யின் கூடைப் பந்தாட்டத் திடலில் நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற இந்த வெண்கலப் பதக் கத்துக்கான ஆட்டத்தில் யாழ். மாவட்ட இளைஞர் கழக அணி 69:28 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கத் தைக் கைப்பற்றியது. (ம-23)

# இன்றைய மோதல்கள்



**மைக்கல் வி.கழகத் தொடர்**
மாங்குளம், ஒக். 27
வடமாகாண அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையில் 'வடமாகாணத்தின் மகுடம்' கிண்ணத்துக்காக மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டத்தொடர் குறித்தகழகமைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று இடம் பெறும் ஆட்டங் களில் பிற்பகல் 4மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வடமராட்சியங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் பாஷையூர் சென். அன்ரனிஸ் அணி மோதவுள்ளது. (ம-422)

**மத்தியின் கூடைப்பந்தாட்டத்தொடர்**
யாழ். மத்திய கல்லூரியின் மாணவ முதல்வர் சபையினால் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் பொ.விபுலானந்தன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் அரையிறுதியாட்டங்களில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது.

மாலை 4மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதவுள்ளது. (ம-23)

# யாழ். மாவட்ட இளைஞர் அணிக்கு வெள்ளி
## தேசிய இளைஞர் கூடைப்பந்தாட்டத் தொடரில்
### மட்டக்களப்பு மாவட்ட அணியிடம் வீழ்ந்தது

யாழ்ப்பாணம், ஒக். 27
ஆண்களுக்கான 27ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ். மாவட்ட இளைஞர் அணியை வீழ்த்திக் கிண்ணம் வென்றது மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணி.

குருநாகல் சென்.ஆன்ஸ் பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் கழக அணியை எதிர்த்து யாழ். மாவட்ட இளைஞர் கழக அணி மோதிக்கொண்டது. இதில் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் கழக அணி 69:61 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது. (ம-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாடா ஜெயிச்சாச்சு

# தீவுகளை வீழ்த்தியது இலங்கை




இலங்கை – மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான 2 ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டத்தின் இறுதி நாளான நேற்றையதினம் தீவுகளின் எஞ்சிய ஒன்பது இலக்குகளையும் மளமளவென சரித்து 2–0 என்ற அடிப்படையில் கிண்ணத்தைக் கைப்பற்றியது இலங்கை.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க முன்னிலை வீரர்கள் எவருமே சிறப்பாக செயற்படாத நிலையில் சகல இலக்குகளையும் இழந்து 200 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. சிறிவர்த்தன அதிகபட்சமாக 68 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் தீவுகள் சார்பாக வரிக்கன் 4 இலக்குகளையும் கோல்டர், ரெய்லர் இருவரும் தலா 2 இலக்குகளையும் றோச், பிஸ்கு இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த தீவுகள் 163 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. பந்துவீச்சில் இலங்கை சார்பாக பிரசாத் 4 இலக்குகளையும் பெரேரா 3 இலக்குகளையும் சிறிவர்த்தன 2 இலக்குகளையும் கேரத் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

37 ஓட்டங்கள் முன்னிலை பெற்று இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கைக்கு இரண்டாவது தடவையாகவும் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. 206 ஓட்டங்களில் சகல இலக்குகளையும்பறிகொடுத்தது இலங்கை. அதிகபட்சமாக மத்தியூஸ் 46 ஓட்டங்களையும் சிறிவர்த்தன 42 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் தீவுகள் சார்பாக பிரீத்வைட் 6 இலக்குகளையும் ரெய்லர், வறிக்கன் இருவரும் தலா 2.இலக்குகளையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை வகித்தது இலங்கைக்கு கைகொடுக்க தீவுகளுக்கு இலக்காக 244 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. நான்காம் நாளில் மழை மேலோங்கியதால் அன்றைய ஆட்டம் முழுவதுமாகத் தடைப்பட்டது. நேற்றைய ஆட்டத்துக்கு வருண பகவான் அனுமதிக்க 20-1 என்ற நிலையில் இருந்து இன்னிங்ஸை தொடங்கியது தீவுகள். இரண்டாவது இலக்கு சரிக்கப்பட நீண்ட நேரம் எடுத்துக்கொண்டனர் இலங்கைப் பந்துவீச்சாளர்கள். 80 ஓட்டங்கள் வரையிலும் இலக்குச் சரிவில் மாற்றம் இருக்கவில்லை. இலங்கை தோற்கப்போகிறது தொடர் சமனாகப் போகிறது என்ற கருத்துக் கணிப்புகளும் இருக்கவே செய்தன. இணைப்பாட்டம் பிரிக்கப்பட்டு கோக் ஆட்டமிழந்ததுதான் தாமதம் பின் வரிசை வீரர்கள் ஒருவர் பின்னால் ஒருவராக ஆட்டமிழந்தனர். பிராவோ மட்டும் ஒருமுனையில் நிலைத்து நின்று 61 ஓட்டங்களை விளாசினார். முடிவில் தீவுகள் 171 ஓட்டங்களில் சருண்டு 72 ஓட்டங்களால் தொல்விய டைந்தது. கேரத் 4 இலக்குகளையும்சிறிவர்த்தன 3 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக சிறிவர்த்தனவும் தொடராட்ட நாயகனாக கேரத்தும் தெரிவானார்கள். (ம)

## முதலமைச்சர் கிண்ணத்துக்கான சதுரங்கத் தொடர் இன்று

மாங்குளம், ஒக். 27

முதலமைச்சர் கிண்ணத்துக்கான கோப்பாய் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கத் தொடர் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் புத்தூர் சிறிசோமஸ்கந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

6வயது, 8வயது, 10வயது, 12வயது, 14வயது, 16வயது, 18வயது ஆகிய பிரிவுகளில் இருபாலாருக்குமாக தொடர் நடைபெறும். தொடரில் பங்குபற்ற விரும்புவோர் பிறப்புச் சான்றிதழின் பிரதியுடனும், அடையாள அட்டையுடனும், சதுரங்கப் போட்டிக்கான உபகரணங்களுடனும் வருகை தரவேண்டும் எனவும், 14வயதுக்கு உட்பட்டவர்கள் அடையாள அட்டைக்குப் பதிலாக அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் வரவேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம)

## உதைபந்தாட்ட ஒழுங்குநிரல் நாளை யாழ். மத்தியில்

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ். மாவட்ட பாடசாலைகளின் 19வயதுக்கு உட்பட்ட இருபால் அணிகளுக்கும் இடையில் நடத்தப்பட்டு வரும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் 31ஆம் திகதியும் 1ஆம் திகதியும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. குறித்த தொடருக்கான ஒழுங்கு நிரல் தயாரிக்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. எனவே விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்களை கலந்துகொள்ளும்படி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-23)

## ஈஸ்வரனை வீழ்த்தியது டயமன்ஸ்



மாங்குளம், ஒக். 27

இலங்கை உதைபந்தாட்ட சங்கத்தினால் 7ஆவது வருடமாக நடத்தப்பட்டுவரும் 40வயதைக் கடந்தவர்களுக்கான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்றில் டயமன்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொலின்ஸ் கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து அம்பாறை ஈஸ்வரன் யுத் அணி மோதியது. 12ஆவது நிமிடத்தில் டயமன்ஸின் சார்பாக பதிவானது முதல் கோல். அந்தக் கோலே இறுதிக் கோலுமாக முடிவடைந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியின் 14ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் சார்பாக இரண்டாவது கோல் பதிவாக 18வது நிமிடத்தில் பழிதீர்த்தது ஈஸ்வரன் அணி. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் அணி வெற்றி பெற்றது. அடுத்தவார நடுப்பகுதியில் டயமன்ஸ் அணி திருகோணமலை அணியுடன் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-422)

## கிறீன்பீல்ட் அடுத்த சுற்றுக்குள்

மாங்குளம், ஒக். 26

வடமாகாணத்தின் மகுடம் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடரில் றேஞ்சர்ஸ் அணியை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றது கிறீன்பீல்ட் விளையாட்டுக்கழகம்.

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் வடமாகாண அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் கிறீன்பீல்ட் அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் அணி மோதியது. 21ஆவது, 35ஆவது நிமிடங்களில் கிறீன்பீல்ட் அணி வீரர் மகிந்தன் அடுத்தடுத்து இரு கோல்களை விளாச முதல்பாதியில் கிறீன்பீல்ட் அணி 2:0 என முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதியின் 22ஆவது நிமிடத்தில் றேஞ்சர்ஸ் அணி வீரர் சிவதாசன் பதில் கோலை பதிவுசெய்ய ஆட்டம் விறுவிறுப்பானது. வேறெந்த கோல்களும் பதியப்படாத நிலையில் 2:1 என்ற கோல் கணக்கில் மன்னார் கிறீன்பீல்ட் அணி வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ம-422)

## வீழ்ந்தது கிரிக்கெட்டின் தாயகம் பாகிஸ்தான் அபார வெற்றி




பாகிஸ்தான் – இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் 178 ஓட்டங்களால் வெற்றிபெற்றது பாகிஸ்தான்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 378 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக மொயீன், வூட் இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது இன்னிங்ஸை ஆரம்பித்த கிரிக்கெட்டின் தாயகம் 242 ஓட்டங்களில் சுருண்டது. பந்துவீச்சில் ரியாஸ், சாஸ் இருவரும் தலா 4 இலக்குகளையும் இம்ரான் கான் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

136 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்த நிலையில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 354–6 என்ற நிலையில் இருந்தபொழுது ஆட்டத்தை இடைநிறுத்தியது. பந்துவீச்சில் அண்டர்சன், வூட் இருவரும் தலா 2 இலக்குகளையும் அலி, ரசிட் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

491 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய இங்கிலாந்துக்கு ஆரம்பம் வாய்க்கவில்லை. 19 ஒட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் ஆரம்ப வீரர்கள் இருவரும் ஆட்டமிழந்து விட்டனர். தொடர்ந்தும் நிலைத்துநின்ற பெல் அரைச்சதத்தை 4 ஓட்டங்களால் தவறவிட்டார். ரூட் 59 ஓட்டங்களுடனும் பரிஸ்ரௌவ் 6 ஓட்டங்களுடனும் இறுதிநாளுக்காக களமிறங்கினர். நீண்ட நேரம் நிலைக்க முடியவில்லை. ரூட் 71 ஓட்டங்களுடனும் பரிஸ்ரௌவ் 22 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க ஸ்டோக்ஸ், பட்லர் இருவரும் வந்த வேகத்தில் பவிலியனுக்குதிரும்பினர். கிட்டத்தட்ட உறுதியாகியது பாகிஸ்தானின் வெற்றி. பின்வரிசை வீரர்கள் தோல்வியை தவிர்க்கப் போராடிய போதிலும் எவையும் பலனளிக்கவில்லை. 312 ஓட்டங்களுடன் நிறைவுக்கு வந்தது இங்கிலாந்தின் இன்னிங்ஸ். 178 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது பாகிஸ்தான். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுக்கு மட்டும் குறையில்லை



கோக்லி அனுஸ்காவுடன் சேர்ந்து வசிக்க மும்பையில் அடுக்கு மாடி குடியிருப்பு ஒன்றை வாங்க திட்ட மிட்டுள்ளார்.
இந்திய கிரிக்கெட் அணியின் துணைத் தலைவரான விராட் கோக்லியும், நடிகை அனுஸ்கா சர்மாவும் நீண்ட நாள்களாக காதலித்து வருகின்றனர். இவர்கள் இருவரும் ஒரே வீட்டில் சேர்ந்து வசிக்க முடிவு செய்துள்ளனராம். இதற்காக டில்லியில் வசிக்கும் கோக்லி, மும்பையில் அடுக்கு மாடி குடியிருப்பு ஒன்றை வாங்க முடிவு செய்துள்ளாராம். (ம)

அமெரிக்க லொத்தர் விசா
நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்
V2 TRAVELS
யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892 | வல்வெட்டித்துறை 0776697960

Vacancy
English Language Lecturer - Male / Female (Full Time) CV should be
emailed at admin@elasjaffna.com.
before 30th October 2015
ELAS Sir Pon Ramanathan Road, Thirunelvely, Jaffna.
Contact No - 076 697 3040 (65587)(11,16,17)

Join Sri Lanka's #1 ESOFT
Shaping Lives, Creating Futures.
Vacancies @ ESOFT
Sri Lanka's Leader in Professional ICT Education is looking for skilled people
Positions are available in Jaffna Campus & Kilinochchi

Lecturers in IT (Full Time)
✓ Areas of expertise include Networking, Software Engineering, Web Engineering, Programming with JAVA/C#/ASP.NET & DBMS knowledge, Mathematics, Computer Science etc..
✓ Working week will be 5 and a Half days including week end
✓ Experience would be an added advantage

Assistant Manager - Kilinochchi
✓ Result oriented individual with strong communication skills
✓ Fresh graduates with proven leadership skills are encouraged.
✓ Identify potential markets to promote company products
✓ Implementing, engage and monitoring activities of the branch
✓ Should be able to work under pressure and meet deadlines and targets.

Student Counselors
We are looking for goal oriented, energetic young ladies to work at ESOFT front office. You will be responsible for handling enquires from customers including students and parents and guiding them in selecting the correct acdemic or professional study programme that matches their requirement
You will be provided with the necessary training about the programmes that we offer. Basic computer literacy is expected and we will also train you to use our enquiry and registration systems
Work time will be according to a duty roster consisting of a five and a half day working week including the weekend, which is our busiest time.

How to Apply
Send us your completed CV within 10 days of this advertisement including a covering letter introducing yourself to esoftjaffna@gmail.com. Please state the position applied as the subject line of the email.

Established in 2000, ESOFT has rapidly grown to be a trendsetter in the industry.
As part of our expansion, we are looking for skilled individuals who can work in a team environment, to achieve set goals.
Successful candidates should be self motivated and have the capability of setting own standards and be able to see that they are achieved and surpassed.

ESOFT METRO CAMPUS
137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 4142, Hotline: 077 309 9 308
Web: http://www.esoft.lk Email: jaffna@esoft.lk

## அஸ்வின் இருந்திருந்தால் சம்பவம் நடந்திருக்காது
### கூறுகிறார் கவாஸ்கர்



தென்னாபிரிக்காவுக்கு எதிரான கடைசி ஆட்டத்தில் அஸ்வின் இல்லாமையே இந்திய அணியின் படு தோல்விக்கு காரணம் என்று இந்திய அணியின் முன்னாள் தலைவரும் வர்ணனையாளருமான கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.
கவாஸ்கர் தெரிவித்ததாவது:-'இந்திய அணியின் பந்துவீச்சு மிகவும் மோசமாக இருந்தது. இப்படி ஒரு பரிதாப நிலையை பார்த்தது இல்லை. பந்து வீச்சு முறையை மாற்றம் செய்வதில் டோனி சரியான முறையை கையாள வில்லை. ஆனால் அதே நேரத்தில் எந்த ஒரு பந்துவீச்சாளரும்; சரியாக பந்து வீசவில்லை. இந்திய அணியின் பந்துவீச்சு மிகவும் கவலை அளிக்கிறது. வேகப்பந்து வீரர்களால் நேர்த்தியுடன் பந்து வீச முடியவில்லை. புவனேஸ்வர்குமார், மொகித் சர்மா ஓட்டங்களை வாரி கொடுத்து விட்டனர். இந்த நேரத்தில் முதன்மை சுழற் பந்து வீரரான அஸ்வின் விளையாட முடியாமல்போனது அணிக்கு மிகப் பெரிய பாதிப்பே. வில்லியர்ஸ் ஒரு மிகப்பெரும் வீரர். யாருமே நம்ம முடியாத வகையில் அபாரமான ஆட்டத்தை வெளிப் படுத்தினார். அவர் தன்னை நிலைப் படுத்திக் கொள்ளுதலே வெற்றியின் இரகசியமாக கருதுகிறேன். இந்த தொடரில் ரபடாவின் பந்து வீச்சு மிகவும் அபாரமாக இருந்தது-' என்றார். (ம)

### தடகளத் தொடர்


யாழ்ப்பாணம், ஒக். 27
வாழ்வகத்தின் ஸ்தாபகர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் ஞாபகார்த்த தடகளத் தொடர் இன்று மருதனார் மடத்தில் நடைபெறவுள்ளது.
தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த தொடர் யாழ். இராமநாதன் கல்லூரி மைதானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வாழ்வகத்தின் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-ரிஜ)

### இந்தியாவுக்கு பாக். மிரட்டல்

இந்திய அணி எங்களுடன் விளையாடாவிட்டால் அடுத்த வருடம் இந்தியாவில் நடைபெறவுள்ள ரி-20 உலகக்கிண்ணத்தை புறக்கணிக்கப் போவதாகப் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மிரட்டல் விடுத்துள்ளது.
குறித்த விடயம் தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை விடுத்துள்ள அறிக்கையில் 'எங்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் ப[illegible]ந்திய கிரிக்கெட் அணி (டிசெம்பர்- ஜனவரியில்) விளையாட மறுத்தால் அடுத்த ஆண்டு இந்தியாவில் நடக்கும் ரி-20 உலகக்கிண்ணத் தொடரை நாங்கள் புறக்கணிப்போம்" என்று பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை மிரட்டல் விடுத்துள்ளது. (ம)

உலகம் உங்கள் கைகளில்..
உறவுகளின் நினைவுப் பரிசுகளுடன்...
உங்கள் வாசலில்......
2Lanka.com ONLINE GIFT SHOP
யாழ். அலுவலகத் திறப்பு விழா
551 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு முன்பாக)
27.10.2015, செவ்வாய்க்கிழமை,
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 5ஆவது ஒருநாள் ஆட்டத்தில் பிளாஸிஸ் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த பொழுது அவருக்கு தசைப் பிடிப்பு ஏற்பட்டது. இலக்குக் காப்பில் ஈடுபட்டிருந்த டோனி உடனே பிளாஸிஸுக்கு உதவிசெய்ய விரைந்து வந்தார். இந்த படம் இணையங்களில் மிகவும் பிரபலமாகி வருகிறது. 'கிரிக்கெட்டுக்கான அடையாளம்' என்ற தலைப்பில் பிரபல இந்திய இணையத்தளம் ஒன்று இந்த படத்தை பதிவுசெய்துள்ளது. சர்வதேச இணையத்தளம் ஒன்று- இந்த வருடத்துக்கான சிறந்த படங்களில் ஒன்றாக இந்தப் படத்தையும் உள்வாங்கியுள்ளது. (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.